


நாளை
April 10, 2010 இதழ் 2 www.naalai.com
NAALAI - FREE NEWS PAPER




# கூட்டமைப்பை உடைத்தவர்கள் கூண்டோடு கைலாசம்







| | | |
|---|---|---|
| ஊர்காவற்றுறை | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 104 |
| வட்டுக்கோட்டை | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 831 |
| காங்கேசன்துறை | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 337 |
| மானிப்பாய் | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 397 |
| கோப்பாய் | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 370 |
| உடுப்பிட்டி | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 760 |
| பருத்தித்துறை | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 1123 |
| சாவகச்சேரி | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 445 |
| நல்லூர் | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 730 |
| யாழ்பாணம் | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 688 |
| கிளிநொச்சி | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 85 |
| தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் | - அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | - 474 |

கனடாவின் முன்னணித் தமிழ் ஊடகங்கள் சிலவற்றில் உண்மைக்கு முரணான வகையில் கற்பனையாகச் சித்தரிக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சியிலும் எவ்வாறு தமிழ் மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்பதை அருகேயுள்ள அட்டவணையில் கண்டு கொள்ளலாம்.

ஒரு நாடு, இரண்டு இறைமையுள்ள தேசம் என்ற கோட்பாடு என்று கூறிக்கொள்ளும் இவர்கள் சிறிலங்கா என்ற ஒற்றை தேசப் பாராளுமன்றத்தின் சொகுசு கதிரைகளில் அமருவதற்கு எப்பாடுபட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரிக்குமாறு மக்களை நோக்கிக் இந்தக் கஜேந்திரர்கள் விடுத்த கோரிக்கையைக் களத்திலே வாழும் மக்கள் அடியோடு நிராகரித்துள்ளார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களின் அடிப்படைக் கோட்பாடுகளான தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை, இறைமை ஆகியவற்றைக் கைவிட்டு விட்டது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் போன்றோரின் பொய்ப் பரப்புரை புலத்திலும், தளத்திலும் உரிமை உணர்வு படைத்த மக்கள் கூட்டத்தால் வேரடி மண்ணோடு சாய்க்கப்பட்டு விட்டது.




S&S
CONSTRUCTION
வடிவமைப்பிலும்
நிர்மாணத்திலும்
தலைசிறந்த நிறுவனம்.
நேர்மையான தொழில்
நியாயமான விலை.
Hardwood
Laminate
Granite
Call for free Estimate
416-291-4669
Hardwood • Laminate • Granite
3341 MARKHAM ROAD, UNIT B105, SCARBOROUGH M1X 0A5

## ஆசிரியர் தலையங்கம்

# முடிவு தீர்மானிக்கப்பட்டது

சில தினங்களுக்கு முன் சிறிலங்காவில் ஏழாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. அந்தத் தேர்தல் முடிவடையும் வரைக்கும் அது புலத்திலே வாழும் தமிழர்களிடம் ஏற்படுத்திய தாக்கத்தை நினைத்துப் பார்க்கின்றேன். வசைப் பாடல்களும், வாழ்த்துக் கோசங்களும், வானலை ஒப்பாரிகளும் விண்ணை நிறைத்து நின்றன. முன்னாள் சகாக்கள் இன்னாள் எதிரிகளாக்கப்பட்டனர். ஆயினும் இறுதி முடிவு அந்த மண்ணிலே வாழ்ந்தவர்களால் மாத்திரமே தீர்மானிக்கப்பட்டது. அத்தகையதோர் முடி வைத்தான் புலத்திலே வாழ்ந்த தமிழர்களில் பெரும்பான்மையினரும் ஏற்கனவே எடுத்திருந்தார்கள். முடிவை எடுத்தது மட்டுமல்லாது அந்த நிலைப்பாட்டுக்கான ஆதரவை அவர்கள் பல வகைகளிலும், பல்வேறு வழி-முறைகளுக்கூடாக வழங்கியிருந்தார்கள்.

அவ்வாறிருந்த போதிலும் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் அத் தீர்மானம் குறித்து இங்கு புலத்திலே விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரால் சில நிய-ாயப்பாடுகள் எழுப்பப்படுகின்றன. அந்தச் சிலருக்கும் அணையாகப் பலம் வாய்ந்த தமிழ் ஊடகங்கள் சில இங்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளது. அதனால் உண்மைக்கு முரணான மாய விம்பம் ஒன்று சித்தரிக்கப்பட்டு அதனூடான பிரமை தோற்றுவிக்கப்பட்டுப் பின் களநிலை யதார்த்தத்தால் அவை முறியடிக்கப்பட்ட வரலாற்றை இன்று அவதானிக்கின் றோம். எவ்வாறெனினும் மீண்டும் அக் கூட்டத்தினர் எழுப்பும் அக் கூச்சலுக் குப் பதிலளிக்க வேண்டிய கடமையையும் நாம் விடுத்துச் செல்ல முடியாது.

மக்களின் குறைந்த வாக்களிப்பு விழுக்காட்டைச் சுட்டிக்காட்டித் தப்பித்துக் கொள்ளத் துடிக்கும் இக் கூட்டம் சில நாட்களுக்கு முன்வரை தாம் முழங் கிக் கொண்டிருந்த வெற்றிப் பிரகடனங்களைச் சாமர்த்தியமாக மறைத்து விடுகிறார்கள். போருக்கு முன்னைய தேர்தல் வாக்களிப்பையும், போருக்குப் பின்னான இத் தேர்தல் வாக்களிப்பையும் கலந்து, ஒப்பிட்டுக் குழம்புவது ஏற்புடையதன்று. போரின் கோரம் இலட்சக்கணக்கான மக்களைத் தங்கள் வாழ்விடங்களிலிருந்து துரத்தியிருக்கின்றது. அதன் தாக்கம் போர் நடைபெ-றாத பிரதேசங்களில் வசித்த மக்களையும் உலுப்பியிருக்கின்றது.

மேலும் கூறுவதற்கு சம்பந்தர் சொல்லியுள்ள கருத்துக்களை இங்கு தருகின்றேன். ‘இம்முறை நடந்த தேர்தல் நேர்மையானதும் சுதந்திரமான-துமான தேர்தலாக எம்மால் கொள்ளமுடியாது. எனினும் நாம் தெளிவான குறிக்கோள்களுடனும், உறுதியான தீர்மானத்துடனும் எம்மக்களுக்காக எவ்வித தடுமாற்றமுமின்றிச் செயற்பட்டோம். தேர்தலினை அண்டிய காலங்களில் சில கட்சிகளும், குழுக்களும் மிகத்தவறான முறையில் மக்களினைத் திசை திருப்புவதற்கு முற்பட்டன. பொய்யான தகவல்களினை-யும், பிழையான வாதங்களினையும் மக்கள் மத்தியில் பரப்பி மக்களினை குழப்பத்தில் ஆழ்த்தின. இது ஏற்கனவே துன்பத்தில் வாழுகின்ற மக்களினை மேலும் குழப்புவதற்கும், தேர்தலில் பங்கேற்கும் ஆர்வத்தினைக் குறைப்பதற்கும் முக்கிய காரணமாக இருந்தது.”

இதற்கும் அப்பால் கடந்த காலக் கசப்புணர்வுகளைக் கருத்திற் கொள்ளாது தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவான அனைத்துச் சக்திகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பினை உதாசீனம் செய்யக் கூடாது. மேலும் குறிப்பாக முஸ்லீம் மக்கள், மலையக மக்கள், சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்குச் சக்திகள் உள்ளடங்கலாகப் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை அமைத்துச் செயற்படுவதற்கான கட்டுமானத்தையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்க வேண்டுமென ‘நாளை” எதிர்பார்க்கின்றது.

**தொடர்பு:**
Tel: 647-237-3619

**முகவரி:**
36 Slamander St
Scarborough ON
M1X 1Y9
CANADA

**மின்னஞ்சல் முகவரி:**
naalaieditor@gmail.com

**இணையத்தள முகவரி:**
www.naalai.com

இப்பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துகள் அவற்றை எழுதியவருடைய அபிப்பிராயமே தவிர பத்திரிகையின் எண்ணத்தை பிரதிபலிப்பவை அல்ல. இவ்விதழில், வெளியாகும் விளம்பரங்கள், அனைத்துக்கும் சம்மந்தப் பட்டவர்களே பொறுப்பாவார்கள்.

இவ்விதழில் வெளியாகும் விளம்பரங்கள், முழுமையாகவோ அல்லது பகுதி பகுதிகளாகவோ, மறுபிரசுரம் செய்யமுன் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுக் கொள்ளவும்.

**பதிப்பாளர்:**
நடராஜா முரளிதரன்

**ஆசிரியர்:**
நடராஜா முரளிதரன்

**ஆலோசகர் குழு:**
ச. தவராஜசிங்கம்
மத்தியாஸ் அருள்நேசராசா
ஆ. தயாளசீலன்
மாங்கொல்லை சிறி

**விநியோகம்:**
கி. ஜெயக்குமார்
பபி

## உள்ளே....

ஆசிரியர் தலையங்கம் — 3
கனேடிய செய்திகள் — 4
கச்சை கட்டிக் கொண்டு புறப்பட்டவர்கள் — நக்கீரன் — 5
பேச்சுவார்த்தைக்கு தயார். — 7
படைப்புவாதமும் பரிணாமக் கோட்பாடும்: தொடரும் போர் — க. திருநாவுக்கரசு — 8
“சிங்களப் பேரினவாதமும் மகிந்தவின் சிந்தனாவாதமும்” — ராஜா பரமேஸ்வரி — 10
சொற்போராட்டமும் அரசியல்-சரியாக்கமும் — சச்சிதானந்தன் சுகிர்தராஜா — 11
தமிழ் கனேடிய பட்டதாரிகள் சங்கம் — 13
அரசுகளும் அதற்கான கருத்தியல்களும் - 2 — ஜெயமோகன் — 14
சினிமா விமர்சனம் — அ.முத்துலிங்கம் — 15
புலம்பெயர் தமிழ் மக்கள் மிகப் பெருமளவில் எமக்கு ஆதரவு — இரா.சம்பந்தன் — 18
மட்டுப்படுத்தப்பட்ட வினைச்சொற்கள் — அ.முத்துலிங்கம் — 20
தேர்தலின் பின்னர் சிறுபான்மைக் கட்சிகள் — 22
கூட்டமைப்பு பழைய பாணியில் — 24
குரு சீடன் — திருமகள் — 25
பிறக்கப்போகும் புதிய தேசம் — ருபன் சிவராஜா — 27
குண்டுகளால் தரைமட்டம் — ரைம்ஸ் — 28
முற்றுப் பெறாதவையாய்… — நடராஜா முரளிதரன் — 29
நிச்சயமற்ற நிலையில் — கார்டியன் — 30

### இணைய கருத்துக்கணிப்பு

*தமிழ் கட்சிகளின் கொள்கை அடிப்படையில் மக்கள் ஆதரவு வலுப்பெறுகிறதா?*

58.99% ஆம்

41.41% இல்லை

இக் கருத்துக்கணிப்பு CTR வானொலி இணையத்தளத்தில் சேகரிக்கப்பட்டு வெளியானது.

# "நாடுகடந்த தமிழீழ அரசு தேர்தல்"
## கனடாவில் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது!

நாடுகடந்த அரசாங்கம் அமைப்பதற்கான தேர்தல்கள் எதிர்வரும் மே 2ம் திகதி உலகளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது. கனடாவில் இத் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கான சுயாதீனமான தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான




வேட்புமனுக்கள் 04.04.10 முதல் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் நாடு கடந்த அரசாங்கம் அமைப்பதற்கான செயற்குழுவின் இணைப்பாளர் உருத்திரகுமாரன் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். இவ் ஊடக அறிக்கையயில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது அரசவைக்கான மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்கள் மே மாதம் 2 ஆம் திகதி உலகளாவியரீதியில் நடாத்தப்படுகிறது. இதற்கமைய கனடாவில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய 25 பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் மே மாதம் 2ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இத் தேர்தல்களுக்காக கனடா 5 தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மத்திய ரொரொன்டோ பெரும் பகுதி (Central Greater Toronto Area), கிழக்கு ஒன்ராரியோ (Eastern Ontario), மேற்கு ஒன்ராரியோ (Western Ontario), கிழக்கு கனடா, (Eastern Canada), மேற்கு கனடா (Western Canada) ஆகிய இத் தேர்தல் மாவட்டங்களில் இருந்து தலா 5 பிரதிநிதிகள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது அரசவைக்குத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இத் தேர்தல்களைப் பொறுப்பேற்று நடாத்த சுயாதீனமான தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு முதன்மைத் தேர்தல் ஆணையரையும் இரு துணைத் தேர்தல் ஆணையர்களையும் 5தேர்தல் மாவட்டங்களுக்குமான மாவட்டத் தேர்தல் ஆணையர்களையும் கொண்ட வகையில் 10 தேர்தல் ஆணையர்கள் இவ் ஆணையத்தில் பணிபுரிகின்றனர்.

இத் தேர்தல் ஆணையத்தினால் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்துக்கான தேர்தல்களில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நாளை (04.04.2010) முதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இம்மாதம் 15 ஆம் திகதி வரை வேட்பாளர்கள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யலாம். இத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தகமைகள், வேட்புமனு தாக்கல் செய்யும் நடைமுறைகள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தொடர்பு விபரங்கள்: Commissioner, 2163 Lawrence Ave East, Suite C Toronto, M1P 2P5 **Tel:416-844-7390**


Get a quote online for
Magazines, Books
& all your printing needs.

**WWW.PRINT72.COM**



**காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி பழைய**
**மாணவர் சங்க ஒன்றுகூடல்**

எதிர்வரும் யூலை மாதம் 17ம் தேதி சனிக்கிழமை ஸ்காபுரோ, தொம்சன் பூங்காவில் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் நடைபெற உள்ளது. இவ் ஒன்றுகூடலில் கலந்து கொள்ள நடேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர்கள் அமெரிக்கா, மொன்றியல் ஆகிய இடங்களிலிருந்து வருகை தர உள்ளார்கள்.


அனைத்துப் பழைய மாணவர்களையும் இவ் ஒன்றுகூடலில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தொடர்பு கட்கு: (647) 237-3619


**கனடாச் செய்திகள்...**



# நாடு கடந்த தமிழீழ அரசின் முதலாவது தேர்தல் எமது இறுதிப்போரின் முதற்படி
### தமிழீழ அரசின் கனடாத் தலைவர் கலாநிதி ராம் சிவலிங்கம் அவர்கள்

மே மாதம் 2ம் திகதி நடக்கவிருக்கும் நாடு கடந்த தமிழீழ அரசின் உலகளாவிய ரீதியிலான தேர்தல், உலகச் சரித்திரத்தில் இடம்பெற வேண்டும். இது கண்டு மனிதாபிமானத்துக்கு மதிப்பு கொடுக்கும் அத்தனை நாடுகளும் எமது சாத்வீகப் போருக்கு ஆதரவு தரவேண்டும். சாமர்த்தியமான எமது நகர்வு கண்டு உலகமே எமக்கு உதவ வேண்டும். இவை எல்லாம் நிறைவு பெற நாம் எல்லோரும் மறவாமலும் தவறாமலும் இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.



எம்மவரின் உரிமைகளைப் பெற்றுத்தர அவர்கள் வாழ்வை வளம்படவைக்க நாம் எடுக்கும் இறுதிப்போரின் முதற்படிதான் இந்தத் தமிழீழ அரசின் முதலாவது தேர்தல். இத்தேர்தலில் வாக்களிக்க நாம் ஒதுக்கும் நேரம் சொற்பமானதென்றாலும் போடும் ஒவ்வொரு வாக்கும் விலை மதிக்கமுடியாதவை. உயிர்களை மட்டுமல்ல எம் இனத்தின் உரிமைகளையும் உடமைகளையும் பேணவல்ல பிரதிநிதிகளைத் தேர்வு செய்யும் வாக்குக்களின் மதிப்புக்கு ஏது எல்லையப்பா?

வயிறார உண்டு பல மாதங்களான எமது உறவுகளின் நிலமையை ஒரு தரம் நினைத்துப்பாருங்கள். அச்சமே வாழ்க்கை வாழ்க்கையே அச்சம் என முள்வேலிக்குள் முடங்கிவாழும் எம் அன்பு நெஞ்சங்களை ஒருமுறை எண்ணிப்பாருங்கள். எம் இனிய உறவுகளே! பாவம் செய்தால் மட்டும் பாவமில்லை பாவம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பதே பாவமல்லவா?

தமது உயிரையே தன் இனத்திற்கு தருவதை ஓர் வரமாக எண்ணிய உங்கள் உறவுகளின் ஆசை, விருப்பம், தியாகம், சிந்தனை எல்லாமே வீணாகலாமா? தேர்தல் நாளன்று, உங்கள் வாக்குக்களைத் திறமைமிக்க வேட்பாளருக்கு இட்டு எமது பலத்தை உயர்த்த உங்களைத் தவிர வேறு யாரால் முடியும். அன்பும் கருணையும் கொண்டவர்கள் மனிதருபத்திலான தெய்வங்களல்லவா? தேர்தலுக்கான இறுதிக்கட்டதில் இன்று நாம் இருக்கிறோம். இதுவரை பங்கு கொள்ளாத அமைப்புக்கள், ஊர்ச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், கோவில்கள் தொழில் ரீதியான சபைகள் எல்லாமே இனிமேலும் பார்த்து கொண்டிராமல் பங்காளிகளாக மாறுங்கள். உங்கள் அனைவரது ஒத்துழைப்பும் பங்களிப்பும் கண்டு ஒட்டுமொத்தத் தமிழினமும் ஊக்கம் பெற வேண்டும்.

நாடு கடந்த தமிழீழ அரசு தமிழருக்காகத் தமிழரால் அமைக்கப்பட்ட கட்சி சார்பற்ற அமைப்பு. இயக்க சார்பற்ற ஓர் உன்னதமான உலகளாவிய தமிழர்களின் கூட்டமைப்பு. இதன் பாராளுமன்றத்திற்கான பிரதிநிதிகளைத் தேர்வு செய்யவே இவ்வருடம் மே மாதம் 2ம் திகதி நாடு கடந்த தமிழீழ அரசுக்கான முதல் தேர்தல் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதில் பங்கு கொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழரினதும் வரலாற்றுக் கடமையல்லவா?

நிலத்தில் புரளும் நாம் நிமிர்ந்து நடக்க அஞ்சி வாழும் எம்மவர் தலை நிமிர்ந்திட எல்லோருடைய ஒத்துழைப்பும் பங்களிப்பும் நிச்சயம் தேவை. உங்கள் திறமைமிக்க செயற்பாடும், அன்புமிக்க ஆதரவும் எமக்கு வலுவையும் உற்சாகத்தையும் தரும் என்பது திண்ணம். இதை உணர்ந்து இனியும் தாமதிக்காமல் எம்முடன் சேர்ந்து செயற்படுமாறு அன்புடன் வேண்டுகிறோம். ஆவலுடன் அழைக்கிறோம்.


**Private Tutoring**

MATH, PHYSICS, ADVANCE FUNCTION, CALCULUS & VECTOR
ஆகிய பாடங்களை அநுபவம் வாய்ந்த முன்னணி ரீயூசன் ஆசிரியர் "விக்கி மாஸ்ரர்" (பொன்னையா விக்னேஸ்வரன்)

**Grade 9, 10, 11, 12 வகுப்புக்களுக்குக் கற்பிக்கின்றார்.**

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் அதிகூடிய மதிப்பெண்களைப் பெற நாடுங்கள் விக்கி மாஸ்ரரை!

**தொடர்புகட்கு: (416) 994-3782**

# கச்சை கட்டிக் கொண்டு புறப்பட்டவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்!

ஆறாண்டுக்கு ஒரு முறை நடைபெறும் தேர்தல் திருவிழா கடந்த வியாயழக் கிழமை (ஏப்ரல் 08, 2010) நடந்து முடிந்து விட்டது. எதிர்பார்த்தது போலவே தென்னிலங்கையில் ஆளும் அய்க்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. ஆளும் கட்சி என்றபடியால் வழக்கம் போல் அரச வளங்களைத் தாராளமாகப் பயன்படுத்தி ஆட்சியை மீண்டும் பிடித்துள்ளது.

தேர்தல் முடிவுகள் மகிந்த இராசபக்சே சிங்கள மக்களால் ஒரு துட்ட கைமுனு போல் போற்றப்படுவதை உறுதி செய்துள்ளது. நாட்டைத் தமிழ்ப் பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டு சிங்களவரின் ஆட்சி அதிகாரம் பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனை மட்டும் நிலைநாட்டப்பட்டதற்கு மகிந்தா இராசபக்சேயே காரணம் என சிங்களவர்கள் நினைக்கிறார்கள். தேர்தல் முடிவுகள் அதனை மெய்ப்பிக்கிறது.

ஆட்சித்தலைவர் தேர்தலில் 74.50 0 விழுக்காட்டினர் வாக்களித்திருந்தார்கள். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் 50 விழுக்காடு வாக்காளர்களே வாக்களித்துள்ளார்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆளும் கட்சிக்கு வெற்றி நிச்சயம் என்ற கருத்து நிலவியதால் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டிய அவசியம் இல்லை என நினைத்திருக்கலாம். ஆட்சித் தலைவர் தேர்தல் நடந்து முடிந்த கையோடு (சனவரி 26) நாடாளுமன்றத் தேர்தல் வந்ததால் மக்களுக்குச் சலிப்புத் தட்டியிருக்கலாம். இன்னொரு காரணமும் இருக்கிறது. மக்கள் ஊழல், அதிகார முறைகேடுகள், வன்முறை மேலோங்கிக் காணப்படும் மக்களாட்சி முறைமையில் நம்பிக்கை இழந்து இருக்கலாம்.

எது எப்படி இருப்பினும் ஆறு ஆண்டுக்கொரு முறை தேர்தல் நடந்தால் அந்த நாட்டில் மக்களாட்சி முறைமை சிறப்பாக நடைபெறுகிறது என உலகம் நினைக்கிறது. இல்லாவிட்டால் மகிந்த இராசபக்சேயின் ஆறு ஆண்டு காலத்தில் நடந்த அரசியல் கொலைகள், கப்பம் கேட்டு ஆள்க்கடத்தல், ஊழல், கையூட்டு, குடும்ப அரசியல், பண வீக்கம், வாழ்க்கைச் செலவு உயர்வு, ஊதாரித்தனமான செலவு, 132 அமைச்சர்களைக் கொண்ட இராட்சத அமைச்சரவை, ஆளும் கட்சிக்கு சார்பாக சட்டத்தை வளைத்தல், ஊடக சுதந்திரத்தின் குரல்வளையை நெரித்தல் இத்தியாதி சாமுத்திரிகா அழகுகள் நிறைந்த ஆட்சிக்கு நியாய அநியாயம் தெரிந்தவர்கள் வாக்களிப்பார்களா?

வட - கிழக்கு மாகாணங்களில் நடந்த தேர்தலில் தென்னிலங்கை போலவே மிகக் குறைந்தளவு விழுக்காடு தமிழ் மக்களே வாக்களித்துள்ளார்கள். காரணம் 400,000 மக்கள் இடப்பெயர்வு காரணமாக வாக்களிக்க முடியாது போய்விட்டது. குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மூதூர் மாவட்டங்களில் குறைந்தளவு வாக்காளர்களே வாக்களித்துள்ளார்கள். திருமலையில், கும்புறுப்பிட்டி, குச்சவெளி, சாம்பல்தீவு, மூதூர் போன்ற கிராமங்களில் அத்துமீறி நுழைந்த சிங்களக் காடையர்கள் துப்பாக்கிகளைக் காட்டித் தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்காதவாறு தடுத்துள்ளனர். இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டாவது இருக்கை 2,000 வாக்குகள் வித்தியாசத்தில் கை நழுவிப் போயுள்ளது.



நக்கீரன்

> மாணவர் ஒன்றியங்கள் விடுத்த வெற்றறிக்கைகள் விழலுக்கு இறைத்த நீராகப் போய்விட்டன. கனடாவில் சிரிஆர் வானொலி செய்த இமாலயப் பரப்புரை மலை வயிறு நொந்து எலியைப் பெற்ற கதையாகப் போய்விட்டது.

யாழ்ப்பாணத்தில் 23.33 விழுக்காட்டினரே (168,277/721,359) வாக்களித்துள்ளார்கள். ஆட்சித்தலைவர் தேர்தலில் 25.66 விழுக்காட்டினர் வாக்களித்திருந்தார்கள். இதை வைத்துக்கொண்டு மிகுதி 76.67 விழுக்காடு வாக்காளர்கள் தேர்தலைப் புறக்கணித்துவிட்டார்கள் என்று தேர்தலில் மூக்குடைபட்டு நாலாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு கட்டுக்காசையும் கோட்டை விட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிப் பேச்சாளர்கள் வழக்கம் போல பொய்யான பரப்புரையில் ஈடுபட்டுள்ளார்கள். உண்மை என்னவெனில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 721,359 ஆகும். இந்த எண்ணிக்கை 1988 ஆண்டு எடுக்கப்பட்ட வாக்காளர் கணிப்பாகும். ஆனால் இன்று அந்த மாவட்டத்தில் வாழும் மொத்த மக்கள் தொகை 500,000 தாண்டாது. இவர்களில் 350,000 மக்கள் மட்டுமே வாக்காளர்கள் என எடுத்துக் கொண்டால் விழுந்த வாக்கு விழுக்காடு 48.08 (168,277-350,000) ஆகும். ஆட்சித்தலைவர் தேர்தலில் விழுக்காடு 25.66 (185,132/350,000) ஆகும். எனவே பெரும்பான்மை மக்கள் தேர்தலைப் புறக்கணித்துவிட்டார்கள் என்ற பரப்புரை பொய்யானதாகும்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்த மக்கள் எண்ணிக்கை 305,043 ஆகும். மொத்த வாக்காளர் எண்ணிக்கை 721,359. எனவே விழுக்காடு 42.29 மட்டுமே! மேலே குறிப்பிட்டவாறு நடந்து முடிந்த தேர்தலில் பெரிய எடுப்போடு களம் இறங்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி படுதோல்வி அடைந்துள்ளது. வெறுமனே 6,362 (4.28 விழுக்காடு) வாக்குகளைப் பெற்று கட்டுக்காசையும் இழந்துள்ளது.


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு நாடு இரண்டு இறைமையுள்ள தேசம் என்ற கோட்பாட்டைக் கொண்ட 24கறட் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெறும் பித்தளை என்ற பரப்புரை மக்கள் மத்தியில் எடுபடவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்மக்களின் அடிப்படைக் கோட்பாடான தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை, இறைமை ஆகியவற்றைக் கைவிட்டு விட்டது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் போன்றோரின் பொய்ப் பரப்புரையும் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

திருமலையில் சம்பந்தனைத்
தோற்கடிக்க வேண்டும்
யாழ்ப்பாணத்தில் மாவை
சேனாதிராசா மற்றும் சுரேஷ்
பிரேமச்சந்திரன் ஆகியோரைத்
தோற்கடிக்க வேண்டும் என்று இந்த
இரு கஜேந்திரன்களும் பேசிய
வீராப்புப் பேச்சை மக்கள்
இரசிக்கவில்லை.

இரசிக்காதது மட்டுமல்ல சம்பந்தன், மாவை சேனாதிராசா, பிரேமச்சந்திரன் ஆகியோரைத் தோற்கடிக்கக் கச்சை கட்டிப் புறப்பட்ட வீரவான்களை மக்கள் தோற்கடித்து விட்டார்கள். இவர்களைப் போலவே தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கடிதத் தலைப்பை வைத்துக்கொண்டு அரசியல் பிழைப்பு நடத்தும் ஆனந்தசங்கரி, அய்க்கிய இடதுசாரி முன்னணியில் கேட்ட சிவாஜிலிங்கம், சிறிகாந்தா, புளொட் சித்தார்த்தன், கிழக்கில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என எல்லோரும் கூண்டோடு கயிலாசம் போய்விட்டார்கள்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் சார்பாக ஊர் பேர் தெரியாத ஊர்ச்சங்கங்கள், பழைய மாணவர் ஒன்றியங்கள் விடுத்த வெற்றறிக்கைகள் விழலுக்கு இறைத்த நீராகப் போய்விட்டன. கனடாவில் சிரிஆர் வானொலி செய்த இமாலயப் பரப்புரை மலை வயிறு நொந்து எலியைப் பெற்ற கதையாகப் போய்விட்டது. அல்லது பிள்ளையார் பிடிக்கக் குரங்காகப் போன கதையாகப் போய்விட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சலுகை அரசியல் வணிகம் செய்யும் வியாபாரியான டக்ளஸ் தேவானந்தா எந்த வெட்கமோ துக்கமோ இன்றி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து 3 இருக்கைகளை மட்டும் பிடித்துள்ளார். வெற்றி பெற்ற தமிழத் தேசியக் கூட்டமைப்புக்குப் பாரிய அறைகூவல்கள் காத்திருக்கின்றன. வாழ்வாதாரங்களை இழந்த 400,000 மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும். முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள 12,000 போராளிகளுக்குப் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். அது போலவே தென்னிலங்கைச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த உடனடிச் சிக்கல்களில் கவனம் செலுத்த வேண்டும்.


GRADE 1 TO 10
HOME WORK HELP
PRIVATE TUTION
HOME VISITING
THUVARAGA: 416.298.7132

தமிழரின் நிர்வாகத்தில்...

# GRAND CAR WASH

**HAND CAR WASH & PROFESSIONAL DETAILING**





**Wash & Vaccum - Interior Shampoo - Leather Treatment**
**Engine Shampoo - High Speed Buff - Detailing - Waxing - Polishing**





**752 Warden Ave (3 Blocks South of Eglinton)**
**Tel 416 757 8200, Cell 647 831 2709 (Tamil)**

info@grandcarwash.ca / www.grandcarwash.ca

# பேச்சுவார்த்தைக்கு தயார்.

## அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்க மாட்டோம்! சம்பந்தன் உறுதி!!

தேர்தலுக்குப்பின் தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வைக் கொண்டு வருவேன் என்று ஜனாதிபதி கூறுகிறார். இந்தத் தேர்தல் முடிவின் பின் அரசு எங்களை பேச்சுவார்த் தைக்கு அழைத்தால் நாங்கள் போகத் தயாரா கவுள்ளோம்.

ஆனால், எந்தக்காலத்திலும் எங்களது அடிப்படைக் கோட்பாடுகளுக்கு மாறாக அவற்றை விட்டுக்கொடுத்து அரசுடன் பேச்சு வார்த்தை நடாத்த நாங்கள் தயாராக இல்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்டத்தின் முத ன்மை வேட்பாளருமான இரா.சம்பந் தன் பொங்குதமிழுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வருகின்ற தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ் வதன் ஊடாகத்தான், எதிர்காலத்தில் எமது இனத்துக்கு ஏற்படக்கூடிய சவால்களிலிருந்து எம்மைக் காப்பாற்ற முடியும்.

தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் வடக்கு - கிழக்கில் ஒன்றுபட்டுச் செயற் படுவதன் மூலமே பொது எதிரியை வெற்றி கொள்ள முடியும் என்பதை இருதரப்பினரும் உணர்ந்துள்ளோம். இது எமக்குக் கிடைத்த நல்லதொரு வாய்ப்பு. இவ்வாய்ப்பினை தமிழ், முஸ்லிம் மக்கள் இத்தேர்தலில் சரியா கப் பயன்படுத்திக் கொள்ள வேண் டும். சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர் தலின் போது எப்படி ஒருமித்த கருத் தோடு வாக்களித்து எமது எதிர்ப்பை ஜனாதிபதிக்கு எதிராக இரு இனத்த வரும் காட்டினோமோ, அதேபோன்று எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலி லும் இவ்விரு இனமும் ஒன்று சேர்ந்து நின்று மகத்தான வெற்றியை எங்க ளுக்குத் தரவேண்டும் என அவர் வேண்டிக் கொண்டார்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறி யிருந்தபடி, இத்தேர்தல் முடிந்ததும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத் தவுள்ளது. எமது மக்களின் ஜனநாயக ரீதியான ஆணையை அரசாங்கம் மதித்து, தமிழ் மக்களின் இறையாண் மையை அங்கீகரிக்கக் கூடிய வகை யில் ஆட்சி முறையை மீளக் கட்டி யமைப்பதற்கான பேச்சுவார்த்தையை எம்முடன் நடாத்த வைப்பது முதற் கட்டம். தமிழ் மக்களாகிய நாம் தன் மானத்துடனும், கௌரவத்துடனும் வாழ விரும்புகின்றோம். இறைமை மக்களுக்கு உரியது. அந்த இறை மையின் அடிப்படையில் தான் சுய நிர்ணய உரிமை நிர்ணயிக்கப்பட்டு சகல இனங்களுக்கும் பகிர்ந்தளிக் கப்பட வேண்டும்.

தேசப் பாதுகாப்பு, கல்வி, காணி, விவசாயம், வேலைவாய்ப்பு போன்ற வற்றை ஆட்சியைப் பயன்படுத்தி நிறைவேற்றும் அதிகாரம் எமக்கு இருக்க வேண்டும் என்று விரும்புகின் றோம். எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். அதற்காகவே இந்த தேர்தலும், அதன் முடிவுகளும் முக்கியமானது என நாம் கருது கின்றோம் என வலியுறுத்திய அவர் தொடர்ந்து கூறுகையில்:

திருகோண மலை மாவட்டத்தில் எனது வெற்றி வாய்ப்பு குறித்து நான் எதுவும் கூற விரும்பவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகள் மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் தொடர்பாக மக்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றோம். மக்க ளும் அதில் தெளிவாகவும் உறுதியாக வும் இருக்கின்றார்கள். மக்கள் பலம் தான் எங்கள் சக்தி.

> “வடக்கு, கிழக்கில் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வருகின்ற தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதன் ஊடாகத்தான், எதிர்காலத்தில் எமது இனத்துக்கு ஏற்படக்கூடிய சவால்களிலிருந்து எம்மைக் காப்பாற்ற முடியும்.”

ஆனால் திருகோணமலையில் மேற் கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட குடியேற்றங்கள் பற்றி உங்களுக்குத் தெரியும். வட கிழக்கின் அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் பிரதேசங் களின் குடிசனப் பரம்பலை மாற்றி சிங்களக் குடியேற்றங்களாக ஆக்கு வதற்கு பல முன்னெடுப்புக்கள் தீவி ரமாக நடைபெறுகின்றன. அதனைவிட தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்கு சில சக்திகள் திட்டமிட்டு செயலாற்றுகின்றன. இவர்கள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தி இருக்கின் றோம். இனி மக்கள் தீர்ப்பளிக்கட்டும் என திரு சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி தேர்தலில் போட்டியிடுவது குறித்து பொங்குதமிழ் வினாவியபோது, நான் ஏற்கெனவே கூறியது போல, திரு கோணமலை தேர்தல் மாவட்ட நிலை



மைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தி இருக்கின்றோம். உண் மையை அறிந்த மக்கள் தமிழ்த் தேசி யத்திற்கான மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் பற்றி அறிந்து கோப முற்றிருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் ஒரு பொதுப்பட்டியலின் கீழ் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது குறித்து கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள் ளையான் உங்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தியதாகவும், நீங்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் வெளிவந்துள்ள செய்திகள் குறித்து நாம் கேட்டோம்.

அவர்கள் இதுகுறித்து எம்முடன் பேச் சுவார்த்தை நடாத்தியது உண்மை. ஆனால் தேர்தலில் போட்டியிடுவது என்பதற்கு அப்பால் கொள்கைகள் முக்கியமானது. மக்களின் நலன் கருதியே நாம் தேர்தலில் போட்டி யிடுகின்றோம். இந்நிலையில் இருதரப் பினரும் கிழக்கு மாகாணத்தில் ஒரு பொதுப் பட்டியலின் கீழ் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதாயின் முத லில் அவ்விரு தரப்பினருக்கும் இடை யில் ஒரு கொள்கை இணக்கப்பாடு இருக்க வேண்டும். அவ்வகையில் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளை நாம் தெளிவாக எடுத்துக் கூறினோம். இக் கொள்கைகளில் எவ்வித சமரசத்துக் கும் இடமளிக்கமாட்டோம் எனத் தெரி வித்தோம்.

ஆனால், அதற்கு அவர்கள் உடன் படவில்லை. தமது கொள்ளைகளுக் கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருப்பதாகக் கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள் என பதிலளித்தார் திரு சம்பந்தன்.

இத்தேர்தலின் பின் தமிழ் மக்களுக்கு இந்த அரசு நியாயமான தீர்வை வழங்கவேண்டும். தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய, அவர்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு தீர்வை அரசாங்கம் முன்வைப் பதற்கு சர்வதேச நாடுகளும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.


இதை உணர்ந்து எல்லா மக்களும் ஆர்வத்து டன் இந்தத் தேர்தலில் கலந்து கொண்டு எமக்கு மகத்தான வெற்றியை பெற்றுத் தந்து சர்வதேச சமூ கத்தையும், இந்த அரசாங்கத்தை யும் திரும்பிப் பார்க்க வைக்க வேண் டும் என்று எதிர்பார்க்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வரும், திருகோணமலை மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந் தன் பொங்கு தமிழ் இணையத் தளத்திற்குத் தெரிவித்தார். ✹

# படைப்புவாதமும் பரிணாமக் கோட்பாடும்: தொடரும் போர்

"டார்வினின் புத்தகம் மிக முக்கியமானது. வரலாற்றில் நிகழும் வர்க்கப் போராட்டத்திற்கான இயற்கை அறிவியல்பூர்வமான அடிப்படையை அது எனக்கு வழங்குகிறது."- கார்ல் மார்க்ஸ். "உயிரின இயற்கையின் வளர்ச்சி விதியை டார்வின் கண்டுபிடித்ததைப் போல மனித வரலாற்றின் வளர்ச்சி விதியை மார்க்ஸ் கண்டுபிடித்தார்." - எங்கெல்ஸ்.

மனித குல வரலாற்றில் மனிதர்களின் சிந்தனைப்போக்கின் மீதும் அதன் விளைவாக வரலாற்றின் மீதும் மிகுந்த செல்வாக்கு செலுத்திய நூறு பேர் கொண்ட ஒரு பட்டியலை யார் தயாரித்தாலும் அதில் நிச்சயம் சார்லஸ் டார்வினுக்கு ஓர் இடம் இருக்கும். கடந்த நானூறு வருட கால நவீன அறிவியல் வரலாற்றில் தோன்றிய அதிமுக்கியமான பத்து அறிவியலாளர்களைக் கொண்ட எத்தனை மாறுபட்ட பட்டியல்கள் தயாரிக்கப்பட்டாலும் அவை அனைத்திலும் டார்வினுக்கு ஓர் இடம் இருக்கும். கலிலியோ, நியூட்டன், ஐன்ஸ்டீன் போன்ற ஒரு சில அறிவியலாளர்களின் செல்வாக்குடன் மட்டுமே ஒப்பிடத்தகுந்தது டார்வினின் செல்வாக்கு. நியூட்டனின் கண்டுபிடிப் புகள் நவீன இயற்பியலுக்கு வித்திட்டு அறிவியல் உலகில் ஒரு மாபெரும் புரட்சியையே கொண்டு வந்தன. ஐன்ஸ்டீனின் சார்பியல் தத்துவம் பிரபஞ்சத்தைப் பற்றி அதுகாறும் அறிவியலாளர்கள் கொண்டிருந்த பார்வையையே முற்றிலுமாய்ப் புரட்டிப்போட்டது. ஐன்ஸ்டீன், நீல்ஸ் போர், ஹைசன்பெர்க், ஷ்ரா டிங்கர் போன்றோரால் உருவான குவான்டம் இயற்பியலின் கண்டு பிடிப்புகள் அறிவியல் உலகிலேயே பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தின (குவான்டம் அறிவியலின் உண்மைகளை விளங்கிக் கொள்ளும் விதத்தில் ஐன்ஸ்டீனுக்கும் நீல்ஸ் போருக்கும் இடையில் மிக அடிப்படையான முரண்பாடு நிலவியது).

ஆனால் இவையெதுவுமே மத நம்பிக்கைகளை, கடவுளின் இருப்பை நேரடியாகக் கேள்விக்குட்படுத்தவில்லை. குறைந்தபட்சம் மத நம்பிக்கையாளர்கள் அப்படிக் கருதவில்லை. பூமியானது நாம் நினைப்பதுபோல் பிரபஞ்சத்தின் மையம் அல்ல மாறாக அது சூரியனைச் சுற்றிவரும் பல கோள்களுள் ஒன்று என்று அறிவியல்பூர்வமாக கலிலியோ 17ஆம் நூற்றாண்டில் நிரூபித்ததும் பைபிளில் கூறப்படுவது போல் முதல் நாளன்று வானத்தையும் பூமியையும் படைத்த தேவன் இறுதியாக ஆறாம் நாளன்று தனது சாயலில் ஆணையும் பெண்ணையும் படைத்தார் என்பதை மறுத்து ஒரு செல் உயிரியிலிருந்து அடுத்தடுத்து ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் விளைவாக உருவானவனே மனிதன் (இந்தப் பரிணாம வளர்ச்சி நடந்தேறப் பல கோடி ஆண்டுகள் பிடித்தன) என்பதைத் தனது ஆராய்ச்சியின் மூலம் டார்வின் 19ஆம் நூற்றாண்டில் நிரூபித்ததும் மதத்தின் - குறிப்பாக கிறிஸ்துவ மதத்தின் - அடிப்படைகளை உலுக்கின.



காலச்சுவடில் க. திருநாவுக்கரசு

கோபர்நிகஸின் தத்துவார்த்தக் கோட்பாட்டை அறிவியல்ரீதியாக முன்வைத்து 1632ஆம் ஆண்டு எழுதப்பட்ட "இரு தலையாய உலக அமைப்பு முறைகள் பற்றிய உரையாடல்" (Dialogue Concerning the Two Chief World Systems) என்னும் புத்தகத்திற்காக போப் மற்றும் கத்தோலிக்க மதத்தின் Inquistion அமைப்பால் கலிலியோ விசாரிக்கப்பட்டார். கலிலியோவே தனது கோட்பாட்டை மறுக்கும்படி செய்யப்பட்டார். அப்படிச் செய்யாத பட்சத்தில் கொளுத்தப்படுவார் என்றும் அச்சுறுத்தப்பட்டார். அதற்குப் பணிந்த கலிலியோவிற்கு வாழ்நாள் வீட்டுக் காவல் தண்டனை 1633இல் வழங்கப்பட்டது. தனது எஞ்சிய வருடங்களைக் கலிலியோ வீட்டுக்காவலில் கழித்தார். 359 வருடங்கள் கழித்து, 1992இல் போப் ஜான் பால் இதற்கு வருத்தம் தெரிவித்து கலிலியோவின் கருத்தே சரி என்றும் ஒப்புக்கொண்டார்.

1859, நவம்பர் 22இல் டார்வினின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளை உள்ளடக்கிய "இயற்கைத் தேர்வின் வழியே உயிரினங்களின் தோற்றம்: அல்லது, வாழ்க்கைக்கான போராட்டத்தில் சிறப்பான இனங்கள் பாது காக்கப்படுவது" (The Origin of Species by Means of Natural Selection: Or the Preservation of Favored Races in the Struggle for Life) என்னும் புத்தகம் வெளியானது.

ஆனால் கலிலியோவிற்கு நேர்ந்த கதி டார்வினுக்கு நேரவில்லை. மதவாதிகள் திருந்தியிருந்ததல்ல இதற்குக் காரணம். மாறாக ஐரோப்பிய அறிவொளிக் காலகட்டத்தில் (18ஆம் நூற்றாண்டு) மத நம்பிக்கைகளுக்கும் பகுத்தறிவிற்கும் இடையில் நடந்த கடும் போராட்டத்தில் மனிதப் பகுத்தறிவின் மேன்மை நிறுவப்பட்டதும் உறுதிசெய்யப்பட்டதுமே இதற்குக் காரணம். கோபர்நிகஸ் புரட்சியைப் போலவே டார்வினின் கண்டுபிடிப்பும் நாத்திகவாதத்திற்குப் பெரும் வலு சேர்த்தது. டார்வின் பிறப்பதற்கு முன்பு ஒருவர் நாத்திகவாதியாக இருப்பது


**கனடிய பாடத்திட்டத்திற்கு (TDSB) அமைய Grade 11-12 வகுப்புக்களுக்கு இரசாயனம் (chemistry) கற்பித்தல்.**



**இலங்கையில் முன்பு மிகப் பிரபல்யமான BOND கல்வி நிலையத்தில் க.பொ.த உயர்தர வகுப்புகளுக்கு Chemistry கற்பித்த புகழ்பெற்ற ஆசிரியர் க.சிவகுமார்**

**உங்கள் பிள்ளைகள் இலகுவாகப் பல்கலைக்கழகம் நுழைந்திட இன்றே தொடர்புகொள்ளுங்கள்**

**(416) 447-6860**

என்பது மிகக் கடுமையான சவால். ஆனால் டார்வினின் கண்டு பிடிப்பு அதை இன்று எளிதான காரியமாக ஆக்கியிருக்கிறது என்று புகழ்பெற்ற அறிவியலாளரும் நாத்திகவாதியுமான ரிச்சர்ட் டாக்கின்ஸ் ஒரு பேட்டியில் குறிப்பிட்டார்.

இதில் உண்மை இருக்கிறது என்றாலும் மிகைப்படுத்தப்பட்ட கூற்று என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் நாத்திகவாதமானது மிக வலுவான அறிவியக்கமாக வரலாற்றில் எப்போதுமே இருந்துவந்திருக்கிறது. இந்தியத் தத்துவ மரபில் சார்வாகத்தின் பங்களிப்பு எவ்வளவு மகத்தானது என்பதைத் தத்துவவியலாளர் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா நிறுவியிருக்கிறார். இதில் ஆர்வமூட்டக் கூடிய விஷயம் என்னவெனில் டார்வின் தன்னை நாத்திகவாதியாக ஒருபோதும் பிரகடனப்படுத்திக் கொண்டதில்லை. நாத்திகம் அறிவாளிகளுக்கு உகந்த விஷயம் என்று கருதிய டார்வின் சாதாரண மக்களுக்கு அது இன்னும் ஏற்புடையதாக இல்லை என்று கருதினார். ஆகவே தான் நாத்திகத்திற்கு ஆதரவாகப் பேசுவது தனது குடும்பத்தினரையும் வேறு பலரது மனங்களையும் புண்படுத்தும் என்று கருதிய டார்வின் தன்னை ஒரு ஐயவாதி (Agnostic) என்றே கூறிக்கொண்டார்.

மதம் பற்றிய தனது கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவிப்பதை எப்போதுமே தவிர்த்துவந்தார். கார்ல் மார்க்ஸின் மகளான எலியனோரின் காதலன் எட்வர்ட் எவ்லிங்கிற்கு டார்வின் எழுதிய கடிதத்தில் இது வெளிப்படுகிறது. மதம் பற்றிய அவரது கருத்துகளை இக்கடிதம் வெளிப்படுத்துவதுடன், பல காலமாக நம்பப்பட்டுவந்த கார்ல் மார்க்ஸ் - டார்வின் சம்பந்தமான ஒரு சர்ச்சைக்கும் வழிவகுத்தது. மார்க்ஸ் தனது மூலதனம் புத்தகத்தை டார்வினுக்குச் சமர்ப்பிக்க விரும்பியதாகவும் ஆனால் அதை டார்வின் மறுத்துவிட்டார் என்றும் நம்பப்பட்டு வந்தது. ஆனால் உண்மை என்னவெனில் எவ்லிங் தனது The Students' Darwin என்னும் புத்தகத்தை டார்வினுக்குச் சமர்ப்பிக்க விரும்பி அதற்கு அனுமதி கோரியிருந்தார்.


அப்புத்தகத்தில் தனது தீவிர நாத்திக வாதக் கருத்துகளை எவ்லிங் கூறியிருந்த காரணத்தால் அது தனக்குச் சமர்ப்பிக்கப்படுவதை மென்மையான முறையில் டார்வின் மறுத்து விட்டார். 1895இல் எலியனோர் தனது தந்தைக்கு வந்த கடிதங்களை ஆவணப்படுத்திய போது தனது காதலருக்கு டார்வின் எழுதிய கடிதத்தை அவற்றுடன் தவறுதலாகச் சேர்த்து விட்டதுதான் எல்லாக் குழப்பங்களுக்கும் காரணம். மதத்துடன் டார்வினுக்கு இருந்த உறவை அக்கடிதம் (13.10.1880இல் எழுதப்பட்டது) மிகத்தெளிவாக வெளிப்படுத்தும் ஓர் அபூர்வமான ஆவணம் என்பதால் அதை முழுமையாகப் படித்துவிடுவது நல்லது:

அன்புள்ள ஐயா, உங்கள் அன்பான கடிதத்திற்கும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள புத்தகத்திற்கும் நான் மிக்கக் கடன்பட்டுள்ளேன். எனது எழுத்துக்கள் மீதான உங்களது கருத்துகளை எந்த வடிவத்திலும் வெளியிட எனது அனுமதி தேவையில்லை. அனுமதி தேவையற்ற ஒரு காரியத்திற்கு அனுமதி வழங்குவது நகைப்பிற்குரியது. எனக்குத் தெரியாத ஒரு விவகாரத்தைப் பற்றிய வெளியீட்டிற்கு எனது அங்கீகாரத்தை இது வழங்கும் என்பதால் அந்தப் புத்தகம் எனக்குச் சமர்ப்பிக்கப்படுவதை மறுக்க விரும்புகிறேன் (என்னைக் கௌரவிக்க நினைத்ததற்கு நன்றி கூறுகிறேன்).

மேலும், எல்லா விவகாரங்களைப் பற்றியுமான சுதந்திரச் சிந்தனையை நான் தீவிரமாக ஆதரிப்பவன் என்ற போதிலும் கிறித்துவத்திற்கும் கடவுள் நம்பிக்கைக்கும் எதிரான வாதங்கள் பொதுமக்கள்மீது பெரிதாகத் தாக்கம் எதையும் ஏற்படுத்த மாட்டா என்று எனக்குத் தோன்றுகிறது (இது சரியாகவோ தவறாகவோ இருக்கலாம்). அறிவியல் முன்னேற்றத்தின் விளைவாக மனிதர்கள் படிப்படியாக அறிவுத் தெளிவைப் பெறுவதன் மூலமே சுதந்திரச் சிந்தனையை முன்னெடுத்துச் செல்ல இயலும். ஆகவே மதத்தைப் பற்றி எழுதுவதை நான் எப்போதுமே தவிர்த்து வந்திருக்கிறேன். எனது பணியை அறிவியலுடன் மட்டும் நிறுத்திக்கொண்டேன். மதத்தின் மீதான நேரடியான தாக்குதலுக்கு நான் உதவினால் அது என் குடும்பத்தினருக்கு மிகுந்த வேதனையைத் தரும் என்ற காரணத்தால் இத்தீவிர நிலைப்பாட்டை எடுத்துள்ளேன். உங்கள் வேண்டுகோளை மறுப்பதற்காக வருந்துகிறேன். எனக்கு வயதாகிவிட்டது, உடலில் வலு இல்லை மற்றும் அச்சிடப்பட்ட தாள்களைப் பிழை பார்ப்பது என்னை மிகுந்த சோர்வுக்குள்ளாக்குகிறது. உங்கள் உண்மையுள்ள - சார்லஸ் டார்வின்.

✸

“ அறிவியல் முன்னேற்றத்தின் விளைவாக மனிதர்கள் படிப்படியாக அறிவுத் தெளிவைப் பெறுவதன் மூலமே சுதந்திரச் சிந்தனையை முன்னெடுத்துச் செல்ல இயலும். ”




AR RAHMAN Tax & Accounting

ஆகக் கூடியது

$12 Student

$15 $0 Income

$18

பதினெட்டு டொலர்களுக்குமேல் கொண்டு வர தேவையில்லை!

(பதினெட்டு டொலர்களுக்கு மேல் ஒரு சதம் கூட மேலதிகமாக அறவிடப்படமாட்டாது)

(647) 348-9091




பிறிம்பிளி வீதி பக்கம் இருக்கும் வாசல் வழியாக உள்ளே சென்று, வலது பக்கம் இருக்கும் படி வழியாக கீழே இறங்கி, நேரே இருக்கும் கதவு வழியாக உள்ளே சென்றால் இலக்கம் 111 வலது புறத்தில் உள்ளது.

1560 BRIMLEY ROAD, UNIT 111, SCARBOROUGH

OPEN 7 DAYS A WEEK - 9am to 9pm

# "சிங்களப் பேரினவாதமும் மகிந்தவின் சிந்தனாவாதமும்" சிந்திப்போமா?

குளோபல் தமிழில் **ராஜா பரமேஸ்வரி**

ஆம் மகிந்த ராஜபக்ஸவின் அரசியல் குழந்தையான விமல் வீரவன்சவே இம்முறை கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றார். அவர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 280,672. இதுவரை காலமும் கொழும்பில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெறும் கட்சியாக ஐக்கியதேசியக் கட்சியே இருந்தது. அதிலும் றணில் விக்கிரமசிங்கவே அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெறுபவராக இருந்தார். ஆனால் இம்முறை தெற்கின் கரையோரப் பிரதேசத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்து ஜே.வீ.பீயின் தீவிரவாதத்தின் ஊடாக அரசியல் வாழ்வை தொடங்கி பின் பாராளுமன்ற அரசியலுக்குள் பிரவேசித்த விமல் பெற்றிருக்கிறார். கொழும்பு 7 எனப்படும் கறுவாக்காட்டை உள்ளடக்கிய நாட்டின் தலைநகர மேட்டுக்குடியினரும் கரையோர மாவட்டத்தின் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒருவரை அரசியல் தலைவனாக ஏற்றுக்கொள்கிற மனோ நிலையினை மகிந்த சிந்தனை ஏற்படுத்திவிட்டது.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இரண்டாம் இடத்தை கோத்தபாய ராஜபக்ஸவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற துமிந்தசில்வாவும் (146336 வாக்குகள்) மூன்றாம் இடத்தை ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளர் சம்பிக்க றணவக்கவும் பெற்றுள்ளனர். சம்பிக்க றணவக்கவின் இனவாதம் பற்றி பேசுவதானால் ஒரு புத்தகமே எழுதிவிடமுடியும். இவர் சூழல் பாதுகாப்பு அமைச்சராக இருந்து மட்டக்களப்பு குடும்பி மலை இப்போ தொப்பிகலவாக அழைக்கப்படும் பிரதேசத்தை பௌத்தத்தின் புனித பிரதேசமாக்கி அங்கு பெரியதொரு விகாரையை அமைத்து இப்போ சுதந்திர வர்த்தக வலையத்தின் ஊடாக விவசாய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். இந்த பாரிய அபிவிருத்தித் திட்டத்தில் பெருமளவில் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படுகின்றன.

அது மட்டும் அன்றி சூழல் பாதுகாப்பைக் காரணம் காட்டி அம்பாறையில் முஸ்லீம்களின் பாரிய நிலப்பிரதேசத்தை அரசாங்கம் கையகப்படுத்தவும் காரணமாகியிருந்தார். அடுத்து கொழும்பு மாவட்டத்தில் மற்றும் ஒருவர் 5ஆவது இடத்தில் வெற்றிபெற்று இருக்கிறார். அவர்தான் மக்கள் ஐக்கிய விடுதலைமுன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன. இவரது கட்சி சார்பாகவே பிரபல இனவாதியும் பல்கலைக்கழக பேராசிரியருமான நளின் டீ சில்வா இனப்பிரச்சனை குறித்து ஆராய்ந்த அனைத்து கட்சி மகாநாட்டிற்கு சென்றவர். இவர் அண்மையில் திவயின பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரையில் கொழும்பு மக்கள் தினேஸ குணவர்த்தனவை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என எழுதி இருந்தார். அதற்கு அவர் கூறிய காரணம் "எக்கராட்சிய" (ஒரே நாடு) என்ற கோட்பாட்டில் அன்று தொடக்கம் இன்றுவரை உறுதியாக இருந்தவர் என்பதோடு மேற்கத்தேயத்திற்கு சார்பான அரசியலை கடுமையாக விமர்சித்து வந்தவர் என குறிப்பிட்டு இருந்தார்.

கொழும்பை அண்மித்த அடுத்த பெரிய மாவட்டமான கம்பஹாவில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றவர் மகிந்தராஜபக்ஸவின் சகோதரரும் அவரது அரசியல் மூளை எனப்படுபவருமான பசில் ராஜபக்ஸ. இவர் 425861 அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று இலங்கை முழுவதுமாக அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவராக விளங்குகிறார்.

இங்கு இரண்டாம் இடத்தை சிங்கள தேசியவாதம் பற்றி உரத்துப் பேசியவரும் மகிந்தவின் மிக்க நன்பருமாக இருந்த ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளேயின் மனைவி சுதர்சினி பெர்னான்டோபுள்ளே பெற்றுள்ளார். 3ஆவது இடத்தை 151085 வாக்குகளைப்பெற்ற மேவின் சில்வாவும், 4 ஆவது இடத்தை 112010 வாக்குகளைப் பெற்ற அத்துரலியே ரத்னதேரும் பெற்றுள்ளனர்.

மேர்வின் சில்வா தன்னை துட்டகெமுனு என்றே கூறித் திரிவார். அண்மையில் நாடாளுமன்றில் தானே சிரச ஊடக நிறுவனத்தைத் தாக்கியது எனக் கூறியும் மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கம் அமைதி காத்தது. அத்துரலியே ரத்ன தேரர் பற்றியும் அவரது இனவாதம் பற்றியும் சொல்லித் தெரிய வேண்டியது அல்ல. அவரும் ஜாதிக ஹெல உறுமயவின் மிக முக்கியமான புள்ளி.

அம்பாறையில் முஸ்லீம்களின் நிலம் திட்டமிடப்பட்டு ஆகிரமிக்கப்பட்ட போதெல்லாம் அமைச்சரவையில் மௌனம் காத்த பேரியல் அஸ்ரப் இனவாதத்திற்கு எதிராக வாக்களியுங்கள் என கோசமிட்டும் இறுதியில் அவர் தோற்றுப் போக எல்லைப்புற மாவட்டமான அம்பாறையில் இனவாதத்தின் அடையாளமான சரத் வீரசேகரவே வெற்றி பெற்றுள்ளார்.



திருகோணமலையில் சுசந்த புஞ்சி நிலமே அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். அவரது சகாவும் இங்கு வெற்றி பெற்றுள்ளார். இரத்தினபுரியில் அரசியல் முக்கியஸ்த்தரைக் கொலை செய்ய முயன்று கொலைக் குற்றச் சாட்டில் அகப்பட்டு பின்னர் தன்னைக் காப்பாற்ற ஐக்கியதேசியக் கட்சியில் இருந்து மாறி அரசாங்கத்துடன் இணைந்தவர்தான் இந்த சுசந்த புஞ்சிநிலமே. தேசநிர்மான அமைச்சராக மகிந்தவினால் நியமிக்கப்பட்டவர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளரும் இவரே. இரத்தினபுரியில் அரசியல் செய்தவரை திருகோணமலைக்கு பொறுப்பாக மகிந்த நியமிக்கிறார் என்றால் சும்மா விளையாட்டாக எடுக்க முடியுமா? இவர் இம்முறை திருகோணமலையில் கால் பதிக்காத கிராமங்களே இல்லை என்ற அளவுக்கு அனைத்துப் பிரதேசங்களுக்கும் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்தவர். காணாமல் போனோரைக் கண்டு பிடித்துத் தருவேன் எனக் கூறிப் பிரச்சாரம் செய்து அப்பாவித் தமிழர்களின் வாக்குகளையும் பெற்றவர். திருகோணமலையில் நின்மதியாக வாழ வேண்டுமானால் தன்னை வெற்றிபெறச் செய்யுங்கள் என மக்களை மறைமுகமாக மிரட்டியவர். கும்புறுப்பிட்டிய வாக்குச் சாவடியில் இவரது கையாட்களே அட்டகாசம் புரிந்தவர்கள்.

அம்பாந்தோட்டையில் அதி கூடிய விருப்பு வாக்குகளை நாமல் ராஜபக்ஸ பெற 3ஆம் இடத்தை சமல் ராஜபக்ஸ பெற 5ஆம் இடத்தை நிருபமா ராஜபக்ஸ பெற்றுள்ளார். இலங்கையின் அதி உச்ச இடங்களில் 4 சகோதரர்களும் மகனும் மருமகளும் உள்ளனர். சமல் ராஜபக்ஸவின் மகன் ஊவா மாகாண முதலமைச்சராகவும் உள்ளார்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு நாடு அதள பாதாலத்தில் நிற்கும் போது, அரசியல், சமூக, பொருளாதரத் துறைகள் அனைத்திலுமே அதி உச்ச நெருக்கடிகளைச் சந்திக்கும் போது, சர்வதேச அளவிலும் என்றுமில்லாதவாறு பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் போது காலி, மாத்தறை அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்பு கறுவாக்காடுவரை மிகத் தெளிவாக மக்கள் தமது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்றும் அது ஒரு சிங்கள் ராட்சியம் என்றும் அதனை ஒரு போதும் மற்றவர்கள் உரிமை கொண்டாட முடியாது என்றும் மற்றும் ஒரு முறை அறைந்து கூறியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை அழிப்பதற்கு சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் சமாந்தரமாக ஒரே தளத்தில் அரசியல் நகர்வையும் இராணுவ நகர்வையும் மேற்கொண்டு பாரிய வெற்றியை மகிந்த ராஜபக்ஸக்கள் பெற்றுக்கொண்டனரோ அதேவீச்சில் இப்போ உள்நாட்டில் சிறுபான்மையினரின் அரசியல் இருப்பையும் தகர்த்தெறிவதற்கான நகர்வுகளை மகிந்த ராஜபக்ஸக்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டனர். நடந்து முடிந்த தேர்தலில் அதில் வெற்றி பெற்றும் விட்டனர்.

ஏற்கனவே சிறுபான்மைக் கட்சிகளை சின்னாபின்னமாக்கிய ராஜபக்ஸக்கள் அக்கட்சிகளில் இருந்து உடைத்தெடுத்தவர்களை அரசியல் அனாதைகளாக்கி விட்டனர். இந்த வகையில் முஸ்லீம் காங்கிரசில் இருந்து உடைத்தெடுத்தவர்களில் ரிசாத்பதியுதீன், ஹிஸ்புல்லா, அத்தாவுல்லா தவிர்ந்த அனைவரும் இந்த தேர்தலில் தோல்வி கண்டுவிட்டனர். புத்தளத்தில் பாயிஸில் இருந்து அம்பாறையில் பேரியல் அஸ்ரப், ஏ.எம்.எம்நௌசாத், மட்டக்களப் பில் அமீர் அலி, ஏற்கனவே சேகுஇஸதீன், திருகோணமலையில் நஜீப்.எம் மஜீத், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் இருந்து பிரித்தெடுத்த பாயிஸ் முஸ்தபா (கண்டி) வடிவேல் சுரேஸ் (பதுளை) புத்திரசிகாமணி (நுவரெலியா) ஐக்கியதேசியக் கட்சியில் இருந்து கொண்டு சென்ற மயோன் முஸ்தபா(அம்பாறை) அலிசாகீர் மொலானா (மட்டக்களப்பு) என ஒரு பெரிய பட்டியலே நீண்டு செல்கிறது. இவர்கள் இவர்கள் அரசில் அனாதைகளாக்கப்பட்டு உள்ளனர்.

அத்துடன் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த பௌசி போன்ற பலம் பொருந்திய சிறுபான் மையின முக்கியஸ்த்தர்களும் ஓரம் கட்டப்பட்டுள் ளனர் அரசியலில் தோல்விகாண வைக்கப்பட்டுள் ளனர். மறுபுறம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த சிவநாதன்

கிஸோர், தங்கேஸ்வரி கதிர் காமர், கனகரட்ணம், போன்றவர்களையும் உள் வாங்கி அவர்களும் தமிழர்களால் நிராகரிக்கப் பட்டவர்களாக முத்திரை குத்தப்படுவதற்கு கார ணமாகினார் மகிந்த.

கூடவே மே 18ற்கு முன் அரசாங்கத்திற்கு கடுமை யான பிரச்சனைக்கு உரியவர்களாகக் காணப் பட்ட சிவாஜிலிங்கம், கஜேந்திரன், பத்மினி, போன்றோரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிறீக்காந்தா போன்றோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான அரசியல் செய்ய தயா ரானபோது அவர்களைக் கண்டும் காணாது விட்டு விட்டார் மகிந்த. இதன் அர்த்தம் மகிந்தவுடன் இவர்கள் சமரசத்திற்குப் போனார்கள் எனபதல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக அவர்கள் எடுக்கும் முடிவு தனக்குச் சார்பானது என்பதனை கணிப்பட்ட மகிந்த அவர்களுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டாம் என தனது தரப்பிற்கு உத்தரவிட்டார்.

“

**விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை அழிப்பதற்கு சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும் சமாந்தரமாக ஒரே தளத்தில் அரசியல் நகர் வையும் இராணுவ நகர்வையும் மேற்கொண்டு பாரிய வெற்றியை மகிந்த ராஜபக்ஸக்கள் பெற்றுக்கொண்டனரோ அதேவீச்சில் இப்போ உள்நாட்டில் சிறுபான்மையினரின் அரசியல் இருப்பையும் தகர்த்தெறிவதற்கான நகர்வுகளை மகிந்த ராஜபக்ஸக்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டனர்.**

”

சுயேட்சைக் குழுக்களுக்கும் பணத்தை வாரியி றைத்து தேர்தல் களத்தில் இறக்கினார். இறுதியில் 22 ஆசனங்கள் 13ஆக குறைந்தது. வடகிழக்கு எங்கும் வெற்றிலை தனது பிரதிநிதித்துவத்தை நம்மவரின் உதவியோடே உறுதிசெய்தது. யாழ்ப் பாணத்தில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தவும், அசோக்கும் அலஸ்டினும் ஈ.பீ.டீ.பீ உறுப்பினர்கள் எனபதுவும் வெற்றிலை யாக மகிந்தவினால் இறக் கப்பட்ட எவரும் வெற்றி யடையவில்லை என்ப தைத் தவிர வேறொன்றும் இல்லை.

ஆக மதமுலன ராஜபக்ஸக்கள் மீண்டும் ஒரு முறை மகிந்த சிந்தனையை வெற்றிபெறச் செய் திருக்கிறார்கள். அதன்மூலம் சிங்களப் பேரின வாதம் மகிந்தவின் சிந்தனாவாதமாக நாடு முழு வதும் வியாபிக்கிறது. ஆனால் நாம்......... ஒரு கணம் நின்று நிதானித்து சிந்திப்போமா? ✹

# சொற்போராட்டமும் அரசியல்-சரியாக்கமும்



வார்த்தைகள் தன்னிச்சையாக வாழ்வ தில்லை. அவற்றின் அர்த்தங்கள் உருவாக்கிய அரசியல், சமுதாய, கலாச்சார, பொருளாதாரச் சூழலமைவு களுக்குள் உட்பொதிந்துள்ளவை. ஆனால் அவற் றின் பொருளைக் கட்டுப்படுத்த முடியாது. மாறுபட்ட சூழ்நிலையில் அவை மறு உற்பத்தி செய்யப்படுகின் றன. சில சொற்கள் காலம் கடந்தாலும் அவை சுமந்து வரும் கறைபட்ட சில கருத்துகள் எளிதாக மறைவ தில்லை. முழுதாக விட்டுப்போவதும் இல்லை. அவற்றில் உள்ளடங்கிய களங்கமான அர்த்தம் மேலும் தொடர்வதுண்டு. அவை ஒருவித இறுக்கத் தையும் கொண்டுள் என. அப்படியான ஒரு வார்த் தைதான் ‘பாக்கீ (Paki). இது பாகிஸ்தானியர் என்பதன் சுருக்கம். இதை 70களில் ஆங்கிலேய இனவெறுப்பு இயக்கமான தேசிய முன்னணி வாழ்ந்த ஐக்கிய இராச்சியத்தில் பாகிஸ்தானியருக்குச் சூட்டிய அவப் பெயர். அந்த நாட்களில், ஏன் இப்போதும் கூட ஐக்கிய இராச் சியத்தின் சில சுவர்களிலும் பொது மலசலக் கூடங்களிலும் Paki go home என்ற வார்த்தை கள் அலங்கரிப்பதைப் பார்க்கலாம்.

சமீபத்தில் Strictly Come Dancing என்ற பிபிசி தொலைக் காட்சியில் பங்கு கொள்ளும் Anton Du Beke என்ற நடனக்காரர் தன் சோடி ஆட்டக்காரப் பெண்ணான Laila Rouass யை ‘பாக்கீ என்று அழைத்திருக்கிறார். லைலாவின் தாய் இந்தியர், தந்தை மொறொக்கோ நாட்டைச் சேர்ந்தவர். இதுமட்டுமல்ல ஒத்திகை பார்க்கும்போது கூட லைலா வைப் பயங்கரவாதி என்று அன்ரன் வர்ணித்திருக்கிறார். Strictly Come Dancing ஒரு இயல்பு தொலைக்காட்சி (reality tv) நிகழ்ச்சி. சனிக்கிழமை மாலையில் இந்த நடனப் போட்டி ஒளிபரப்பாகும். ஏழு மில்லியன் பார்வையாளர்கள் மிக விசுவாசத்துடன் பார்வையிடும் தொடர் இது.

அன்ரனின் இனத்துவ உபயோகம் குறித்து ஆயிரக் கணக்கானவர்கள் தொலைக்காட்சி நிறுவனரிடம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள். இது போன்ற இனவாத எண்ணங்களை நாங்கள் ஒருபோ தும் ஆதரிப்பதில்லை என்று உற்பத்திசெய்யப்பட்ட ஒரு போலியான தார்மீக உச்சநிலையிலிருந்து, சின்ன பிரசங்கம் செய்தது நிர்வாகம். அண்டன் மன் னிப்புக் கேட்டுவிட்டார் ஆகையால் இந்த விஷயம் இத்துடன் முடிந்துவிட்டதென்று பிபிசி இந்தப் பிரச்சி னையிலிருந்து விலகிக்கொண் டது. களிப்பூட்டும் இந்த நடனத் தொட ரைக் காப்பாற்றுவதுதான் பிபி சியின் குறிக்கோளே தவிர சிறுபான்மை மக்களின் துயரங்களை ஈடேற்றம் செய் வதல்ல.

‘பாக்கீ ஆங்கிலேய அன்றாட வழக் கில் இன வெறுப்பையும் ஆங்கிலேய ரின் எரிச்சலையும் காண் பிக்கும் ஒரு இழிச் சொல்லாகவேதான் பாவிக்கப் படுகிறது. முதலில் பாகிஸ்தானியரைக் குவியமாகக் கொண்ட ஒரு சொல் நாளடைவில் பாகிஸ்தானியர், இந்தியர், வங்காள தேசியர்கள் இடையே இருக்கும் சமய, இன, மொழி வேறு பாடுகளைத் தட்டைப் படுத்தி, இச் சொல் அகல்விரிவாக்கப்பட்டு இந்தி யத் துணைக்கண்டத்திலிருந்து குடியேறியவர்களைத் தூற்றும் வார்த்தையாக மாறிற்று. மேற்கோளாக உதைப்பந்தாட்ட மைதானங்களில் இனவெறிக் குண் டர்களால் பாடப்படும் ஒரு பாடலைத் தருகிறேன். A Man That Knew Too Much என்ற சினிமாவில் Dorris Day பாடிய que sera.seara பாட்டு மெட்டில் அமைக்கப்பட் டது. இப்பாடலை இன்னும் கொழும்பு, சென்னை, பெங் களூர் இரவு விடுதிகளில் கேட்கலாம். இந்த வரி களில் உட்பொதிந்திருக்கும் இன வாதத்தைச் சற்று மறந்துவிட்டு முடியுமானால் முணுமுணுத்துப் பாருங் கள்:

When I was just a little boy.
I asked my mother what will I be.
Will I be Pakistan. will I be India?
And here's what she said to me: Go wash out your mouth son.
And go get your fathers gun.
Shoot some India Scum.

ஆங்கிலேயர்கள் மற்ற இனத்தவர்க ளுக்குச் சூட்டிய சில நாமங்கள்: ஆப் பிரிக்கர்களுக்கு நீக்ரோ (negro, coon), யூதர்களுக்கு Yid, அயர்லாந்துக்காரர்க ளுக்கு Paddy, வேல்ஸ்சில் (Wales) உள்ளவர்களுக்கு வுயக கல, பிரான்சு நாட்டவருக்கு frogs, ஜெர்மானியருக்கு krauts. இதே வரிசையில் பாக்கி என்ற பதமும் அடங்கும். பிரித்தானியர்களைச் சுருக்கி Brits என்று அழைப்பது போல் பாகிஸ்தானியரைப் ‘பாக்கீ என்று கூப்பிடுவதில் என்ன தவறு என்று ஒரு வாதம் உண்டு. ஆனால் ஒரு வித்தியாசம் உண்டு. ‘பாக்கீ இன வெறியையும் இஸ்லாம் மீதுள்ள அச்சத்தை உறுதி- செய்யும் அவதூறான, புண்படுத்தும் சினமான வார் த்தை. சீராட்டுப்பதமல்ல.



விளிம்புநிலை மக்கள் பற்றிய இன வாத இழிபெயர் கள் அடிக்கடிப் பிரப லங்களால் உபயோகிக்கப்பட் டிருக்கின்றன. சில நாட்களுக்கு முன்பு பழைய பிரதமர்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**

மார்கிறெட் தட்சரின் மகள் கரல் தட்சர் ஒரு வெளி நாட்டுக் கறுப்பு டென்னிஸ் ஆட்டக்காரரை Golliwogg என்று அழைத்திருந்தார். Flosrence Kate Upton எழுதிய The Adventures of Two Dutch Dolls and a Golliwogg என்ற சிறுவர்க ளுக்கான புதினத்தில் வரும் ஒரு கறுப்புப் பொம்மைக் கதாபாத்திரம். 1895இல் வெளிவந்த நாவலின் பாத்தி ரத்தின் பெயர் வெள்ளையர் பொதுக் களத்தில் கறுப்பர்களுக்கெதிரான ஒரு வசைச் சொல் லாக மாறிற்று. பிற இனத்தவரைக் கேலி செய்வதைப் பிரிட்டிஷ் இராச குடும்பம் ஒரு கலைப் படிமமாக மாற்றியிருக்கிறது. இளவர சர் பிலிப்பு ஒரு சமவாய்ப்பு வைப் பாளர். ஒரு நைஜிரீய அரசியல் தலைவரின் நீண்ட அங்கியைப் பார்த்து நித்திரைக்குத் தயாராகி விட்டீர்களா? என்று கேட்டார். ஒருமுறை சீனாவிற் குப் போனபோது அதிக நாட்கள் இங்குத் தங்கி விட்டால் கண்கள் சீனர்க ளுடையதுபோல் குறுகிவி டாதா என்று கேட்டிருக்கிறார். பிறரைக் கேலி செய் வது பிரித்தானிய அரச மரபணு வின் குணாம்சம் போல் தெரிகிறது. அவருடைய புத்திரன் இளவரசர் சார்ல்ஸ் போலோ (polo) விளையாடும் ஒரு இந்தி யரை sooty என்று அழைத்தி ருக்கிறார். இது காலனிய நாட்களில் இந்தியர் நிறம் புகைக்கரிக்கு ஒத்தி ருப்பதை எள்ளலாக அடையாளப் படுத்தும் வார் த்தை. பேரன் வில்லியம் கூடச் சளைத்தவர் அல்ல. தன்னுடன் பணிபுரியும் சக இராணுவத்தினரை ‘பாக்கீ என்று அழைத்திருக்கிறார்.


பங்களிப்போம்! பரிசு வெல்வோம்!
நாடு கடந்த தமிழீழ அரசின் தேர்தல் நிதியத்திற்கான
அதிர்ஸ்டலாபச் சீட்டு
முதலாவது பரிசு
ரொயோட்டா கார்
இரண்டாவது பரிசு
தம்பதிகட்கான கப்பல் பயணம்
மூன்றாவது பரிசு
52" ரிவி
ரிக்கற் ஒவ்வொன்றும் 10 டொலர்கள் மட்டுமே
சகல வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்
மே 15ம் திகதி அதிர்ஸ்டம் பார்க்கப்படும்
416 264 5550, 416 995 0152
www.cptgte.org
வாங்கிடுவீர்! பங்களிப்பீர்! உருவாக்கிடுவீர்!
நாடு கடந்த தமிழீழ அரசு

Tamil Canadian Graduates Association

# தமிழ் கனேடிய பட்டதாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை

தமிழ் கனேடிய பட்டதாரிகள் சங்கம் (TCGA) இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட கட்சியினை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டு எந்த ஒரு அறிக்கையினையும் விடவில்லை

தமிழ் கனேடிய பட்டதாரிகள் சங்கம் (TCGA Reg.No 1792481) இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட கட்சியினை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவோ அல்லது தேர்தலில் யாரையும் ஆதரிக்க வேண்டும் என்றோ எந்த ஒரு அறிக்கையினையும் விடவும் இல்லை என்பதனை மிகத் தெளிவாகவும் திட்ட வட்டமாகவும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அண்மையில் பத்திரிகை, வானொலி, இணையத் தளங்கள் போன்றவற்றில் ஒரு அறிக்கை வெளியாகி இருந்தது. இந்த அறிக்கைக்கும் எமக்கும் ஒரு வித சம்பந்தமும் இல்லை. என்பதயும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று எமது மக்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளைச் செய்வதே எமது நோக்கம்.

தமிழ் கனேடிய பட்டதாரிகள் சங்கம் Tamil Canadian Graduate Association (TCGA) ஈழத்திலும் சரி புலத்திலும் கட்சி அரசியல் சார்பாக எந்த நிலைப்பாட்டுடன் இல்லை என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது உறுப்பினர்கள் தமது விருப்பத்திற்கேற்ப அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது அவர்களது தனிப்பட்ட முடிவுகள் ஆகும்.

## நாங்கள் யார்?

நாம் தமிழ் கனடிய பட்டதாரிகளின் ஓர் அமைப்பு . கனடா ஒன்ராறியோ மாகாணத்தில் ச்ட்டபூர்வமக பதிவு செய்து இயங்கும் இலாப நோக்கற்ற ஒரு சமூக அமைப்பு. எமது பதிவு இலக்கம் (Reg.No): 1792481 .(Tamil Canadian Graduates Association (TCGA) is a Not-for-Profit Organization). எமது இணைய முகவரிகள்
www.tamilgraduates.ca
www.justice4tamils.com

யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணம், பேராதனை, மொரட்டுவா, கொழும்பு, இந்தியா, கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் கல்விப் பீடங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் கல்வி கற்ற, கற்பித்த தமிழர்களின் அமைப்பு. எம்முடன் info@tamilgraduates.ca என்னும் மின்ன்ஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.

எமது நோக்கம்

- தற்போது ஈழத்தில் இருக்கக் கூடிய போரினால் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு உதவிகளை வழங்குவதும்.
- வெளிநாடுகளில் ஊடகங்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் ஆகியோருக்கு ஈழத்தமிழர்கள் சார்பாக குரல் கொடுப்பதும்.
- உள்ளூர் வெளியூர் தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து எமது மக்களுக்கு உதவுவதும்.

## இதுவரையில் நாம் என்ன செய்துள்ளோம்

"Justice4tamils" என்ற உப அமைப்பினை உருவாக்கி ஈழத்தமிழ் மக்கட்கு நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற அவலங்களை வெளி உலகுக்கு வெளிப்படுத்தி வருகின்றோம்.
http://www.justice4tamils.com/campaign.aspx

1. இதன் செயற்பாட்டிற்காக Billboard Campaign at Yonge/Bloor, St.George Subway station. June 2009

2. 50,000 flyers titled " Refugee camps in SriLanka", "Pray for us", "Save Us" இத் துண்டுப் பிரசுரங்கள் ரொரன்ரோ, ஒட்டாவா, வாஷிங்டன் ஆகிய நகரங்களில் விநியோகிக்கப் பட்டன.

3. 2000 துண்டுப் பிரசுரங்களை கனடா, அமெரிக்கா, ஐ. நா சபை ஆகிய இடங்களில் உள்ள அரசியல் தலைவர்களுக்கு அனுப்பி வைத்தோம்.

4. ஒட்டாவா நகரத்தின் 75 க்கும் மேற்பட்ட பேருந்துகளில் உட்புறத்தில் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் "Speak for silenced" என்ற விளம்பர (Page4). சட்டங்களை செப்ரெம்பர்29 – ஒக்டோபர் 29 இல் அநுமதிபெற்று செய்திருந்தோம்

5. நவம்பர் 18 தொடக்கம் டிசம்பர் 14 வரையில் Ottawa Metro நாளிதளில் 5 விளம்பரங்களை பிரசுரம் செய்தோம். (pages 5,6,7& 8)

6. வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் இருந்த க.பொ.த உயர்தர மாணவ மாணவியர்க்கு பிரதியாக்கிகளையும் (Photo copy machine), தாள்களையும் கொழும்பு தமிழ் சங்கங்கத்தினூடாக கொடுத்து மாணவ மாணவியர்க்கு க.பொ.த உயர்தர பரீட்சை தயார் படுத்தலுக்கு உதவி புரிந்தோம்.

7. போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு Children aid Rehabilitation and Education Program ( CREP) மூலமும் இடம் பெயர்க்கப்பட்ட தமிழ்க் குடும்பங்களுக்கு வாழ்வாதர அடிப்படை உதவிக்காக கத்தோலிக்க நலன்புரி சமூகம் அமைப்பின் மூலமும் மொத்தமாக $12,000 டொலர்களையும் கொடுத்து உதவியுள்ளோம்.

இனியும் தொடர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கு துணையாக பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம். அவற்றில் சில

- போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் இடங்களில் உள்ள கிணறுகளை துப்புரவு செய்து அவற்றை பொதுமக்கள் மீண்டும் பயன்படுத்தக் கூடிய நிலைக்கு கொண்டுவருதல்.
- போரினால் அழிக்கப்பட்டிருந்த வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான சீமேந்து கற்களை உருவாக்கும் குடிசைக் கைத்தொழிலை உருவாக்குதல் போன்றன.
- மெழுகுவர்த்தி உருவாக்கும் தொழிற்சாலை (குடிசைக் கைத் தொழிலை)
- மீன்பிடி வலை உருவாக்கும் தொழிற்சாலை

இவற்றினை எவ்வாறு செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம் எனபது பற்றிய எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஏப்ரல் 11ம் திகதி West shore community center,1011-1015 Bayly St. West Pickering, ON., L1W 1L3 View MapQuest Map இல் நடைபெற இருக்கும் நிகழ்வில் பங்கு பற்றி எங்கள் முயற்சிகளுக்கு உங்களது அதரவினை வழங்குங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேம். உங்கள் ஆதரவில் தான் மேற்கொண்டு எமது பணி தொடர இருக்கின்றது.


கனேடிய வழக்கறிஞர்
Raphael Maharaja
Law Office



IMMIGRATION LAW, REAL ESTATE LAW
STUDENT VISA & WORK PERMITS
GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2
(Middlefield & Finch)

Tel: 416-847-7077 416-847-7093 (Injury Claims) Fax: 416-847-7088
www.maharajalaw.com

# அரசுகளும் அதற்கான கருத்தியல்களும் - 2

மையத்தேசியம் சார்ந்த கனவு யாரிடம் இருக்கிறது என்று பார்த்தால் உலகமெங்கும் சில பொதுத்தன்மைகள் உள்ளன.

1. மரபுகளை அப்படியே பேண வேண்டும் என எண்ணுகிற பாரம்பரிய வாதிகள் இயல்பாகவே மையத் தேசியத்தை நோக்கிச் செல்கிறார்கள். அவர்களைப்பொறுத்தவரை மேலான வாழ்க்கை என்பது இறந்த காலத்திலேயே இருக்கிறது. பழைய பெருமையை மீட்பது என்பது இவர்களிடம் எப்போதும் இருக்கும் கனவு. அப்பெருமையை இழக்கக் காரணமான வரலாற்று எதிரிகள் அவர்கள் முன் எப்போதும் இருப்பார்கள்.

2. தேசியத்தை அரசியல், பொருளியல் ஆதிக்கத்துக்கான கருவியாகக் காண்பவர்கள் மையத்தேசியமே அதற்குச் சிறந்தது என்று எண்ணுகிறார்கள். மையத்தேசியம் இயல்பாகவே ராணுவத்தன்மை கொண்டது. ஒரு இயந்திரம் போல விரைவானது, கச்சிதமானது, தாக்கும் தன்மை கொண்டது. பிற நாடுகளை வெல்லத் தேவையான சுயபெருமிதக் கருத்தியலை அதனால் எளிதில் உருவாக்கிக் கொள்ள முடியும்.

3. தன்னுடைய சொந்த அறிவுத்திறன் மற்றும் நிர்வாகத்திறனில் அபரிமிதமான மதிப்புக் கொண்டுள்ள அறிவு ஜீவிகள் மையத்தேசியத்தை விரும்புகிறார்கள். சமூகத்தில் தாங்கள் உத்தேசிக்கும் மாற்றங்களை மையத்தேசியம் அளிக்கும் முற்றதிகாரம் மூலம் மிக எளிதாக மக்களிடையே பரப்பிச் சமூகத்தைத் தலைகீழாகத் திருப்பிவிடலாமென இவர்கள் நம்புகிறார்கள்.

4. சமூக இயக்கம் குறித்த இயந்திரவாதப் புரிதல்கள் உள்ள கோட்பாட்டாளர்கள். இவர்கள் சமூகத்தை திட்டவட்டமாக பகுத்துப் பிரித்து, ஆராய்ந்து உறுதியான புரிதல்களை அடைய முடியும் என நம்புகிறார்கள். ஆகவே இவர்களுக்குப் பழுதில்லாத செயல்பாடுள்ள தேசிய அமைப்புத் தேவைப்படுகிறது. அது மையத்தேசியமே.

ஐரோப்பாவில் உருவான இரண்டாவது வகையான தேசிய உருவகம் தாராளப்போக்குள்ள லிபரல் தேசியம். தாராளத்தேசியத்தின் வேர்களும் ஐரோப்பிய மறுமலர்ச்சியின்போதே உருவாகி வந்தவைதான். தாராளவாதம் என்பது ஐரோப்பிய சிந்தனையின் ஒரு முக்கியமான அடித்தளம்.

ஐரோப்பிய சிந்தனையில் ஆழமான பாதிப்பைச் செலுத்திய தனிமனித உரிமை என்ற கருதுகோளின் சிருஸ்டி இது. இன்றும் ஐரோப்பிய - அமெரிக்கச் சிந்தனையில் அடிப்படை இயக்க விசையாக இது உள்ளது.

தாராளவாதம் மேலைச்சிந்தனையில் அறிவொளிக்காலம் [Age of Enlightenment] முதல் ஆரம்பித்தது என்று சொல்வது மரபு. ஆனால் அதன் வேர்கள் கிரேக்கச் சிந்தனையில் உள்ளன. அரிஸ்டாடிலின் உலகியல் வாதம், ஞானத்தை ஒரு குறிப்பிட்ட வகையான அறிதல்முறைக்குள் நிறுத் தாமல் எல்லா அறிதல்களையும் தொகுத்து சிறந்ததை எடுக்கவேண்டும் என வாதிடும் தெரிவுவாதம் [Eclecticism] பிரபஞ்சமும் இயறகையும் அளிக்கும் இயல்பான அறிவுடன் மனிதன் தன் சிந்தனையைப் பொருத்திக் கொள்ள வேண்டும் என வாதிடும் இயல்பறிவு-வாதம் [Stoicism] போன்ற வற்றை இச்சிந்தனைகளின் அடிப்படைகளை அமைத்தவை என்கிறார்கள்.

பதினாறாம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவில் இருந்து வந்த இரண்டு மையக்கருத்தோட்டங்களுக்கு எதிராக அவை உருவாயின. ஒன்று பிறப்பிலேயே மன்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் மண்ணையும் மக்களையும் ஆளும் புனித உரிமைகள் உள்ளன என்ற எண்ணம் [Divine Right]. இரண்டு, ஒரு மதநம்பிக்கையாளனின் ஆத்மா தேவாலயத்துக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது என்ற கருத்து.

அவற்றை எதிர்த்து பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய நாடுகளில் உருவானதே அறிவொளிக்காலம் என்று சொல்லலாம். அறிவொளிக் காலம் தனிமனிதன் சுதந்திரமான ஆன்மீகத்தேடலுக்கும் தன் ஆளுமையை முழுமை செய்து கொள்ளுதலுக்கும் உரிமை கொண்டவன் என வாதிட்டது. ஒவ்வொரு தனிமனிதனும் கரரணிய ஞானம் [Reason] கொண்டவன், அவ



ஜெயமோகன்

னது செயல்களுக்கு அதன் மூலம் அவனே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும், சமூகம் என்பது அத்தகைய சுதந்திரமான தனிமனிதர்களால் ஆனதாக இருக்கவேண்டும், அரசு அவர்களின் காரணியஞானத்தின் மலர்தலுக்கு இடமளிப்பதாக இருக்க வேண்டும் என்றது.

காரணிய ஞானத்தை மானுட சாரமாக முன்வைத்தவர் இமானுவேல் காண்ட். அறிவொளிக்காலத்தின் ஒரு கட்டமாக காரணிய ஞானக்காலகட்டம் [Age of Reason] உருவாகி வந்தது. அதிலிருந்து பின்னர் பகுத்தறிவுக்கால கட்டம் [Age of Rationality] உருவாகியது. நவீன அறிவியல் சிந்தனைகளுக்கான தத்துவ அடிப்படையை இதுவே உருவாக்கி அளித்தது. மார்க்ஸியம் உட்பட உள்ள சமூகவியல், அரசியல் கோட்பாடுகளுக்கு விதை நிலமாக அமைந்தது.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவரான பிரிட்டிஸ் தத்துவ சிந்தனையாளர் ஜான் லோக் [John Locke] தாராளவாதத்தின் தந்தை என்று சொல்லப்படுகிறார். சமூகநலனால் மட்டுமே தனிமனித உரிமை எல்லை வகுக்கப்படவேண்டும் என்பதே அவரது சிந்தனையின் சாரம் எனலாம். சமூகம் என்பது சுதந்திரமான தனிம னிதர்கள் தங்கள் பொதுநன்மைக்காக உருவாக்கிக்கொள்ளும் ஓர் அமைப்பே.

தனிமனிதனின் மனத்தைப்பற்றிய லோக்கின் கருத்துக்கள் விரிவான சிந்தனைகளுக்கு தளம் அமைத்தன. எந்த தனிமனிதனும் சமூகத்தின் சிருஸ்டியே என்று லோக் சொன்னார். இன்று வரை மேலைச்சிந்தனையின் ஒரு முக்கியமான கருத்தோட்டமாக இது உள்ளது. ஒவ்வொரு மனிதனும் வெற்றுத்தாளாக [tabula rasa] பிறக்கிறான் என்றும் சூழலே அவனது எல்லா சிந்தனைகளையும் ஆளுமையின் தனித்தன்மையையும் உருவாக்குகிறது என்று அவர் சொன்னார். இது ஆதிபாவம் முதலிய கிறித்தவ சிந்தனைகளுக்கு மாற்றாக அமைந்தது.

தனிமனிதனின் ஆளுமையை முழுமையாக விரிவடையச்செய்வதாக அமையும் ஒரு சமூக அமைப்புக்காக லோக் வாதாடினார். ஆகவே சுதந்திரம் என்பதே சமூகத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்கு சமூகத்துடன் ஒரு கடமைப்பாடு உள்ளது. ஒரு சமூகமாக மனிதர்கள் கூடி வாழ்வதென்பது அச்சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் பொதுவாகவே கொள்ளும் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையிலேயே ஆகும். அதில் அச்சமூகத்தின் கூட்டுநலன்களுக்கு எதிராக இல்லாமலிருப்பத்தான் அதன் சாரம்.

அந்த கடமைப்பாட்டை மீறாதவரை அவனுடைய தனிமனித உரிமைகளை சமூகம் தடுக்கக் கூடாது. ஒவ்வொரு தனிமனிதனின் அனுமதியுடன்தான் சமூக அதிகாரமும் அரசாங்கமும் உருவாக்கப்படவேண்டும் என்று லோக் வாதிட்டார். இதை அவர் ஆளப்படுபவனின் அனுமதி [consent of the governed.] என்றார். நவீன ஜனநாயகத் தின் அடிப்படை விதி என்பது இதுவே. தனிமனிதர்கள் அளிக்கும் ஒட்டு மொத்த அனுமதியினாலேயே சமூக விதிகள் நிலைநிற்கின்றன, அவற்றுக்கு எந்த புனிதமும் இல்லை என்ற இச்சிந்தனை மேலைநாட்டு அரசியலில் மிகப்பெரிய பாதிப்புகளைச் செலுத்திய ஒன்றாகும்.

தனிமனித அடிப்படை உரிமைகள் இயற்கையே மனிதனுக்கு அளித்தவை என்று இச்சிந்தனைகள் வாதிட்டன. ஆகவே சுயமாகச் சிந்திக்கவும் தன் விருப்பபடி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் அவனுக்கு உரிமை இருக்கிறது. அது பிறர் உரிமையை தடுக்காத வரை அதன் மீதான கட்டுப்பாட்டை விதிப்பது இயற்கைக்கு மாறான செயல் என்றனர் இவர்கள். இன்றுவரை இந்திய அரசியல் சட்டம் உட்பட அனைத்திலும் ஆழமான பாதிப்பைச் செலுத்தியிருக்கும் கருத்துநிலை இது. அடிப்படை உரிமைகள் என்று இந்திய அரசியல்சட்டம் இதையே சொல்கிறது.

> “ சுதந்திரம் என்பதே சமூகத்தின் இலட்சியமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்கு சமூகத்துடன் ஒரு கடமைப்பாடு உள்ளது. ஒரு சமூகமாக மனிதர்கள் கூடி வாழ்வதென்பது அச்சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் பொதுவாகவே கொள்ளும் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையிலேயே ஆகும். ”

# சினிமா




## அ.முத்துலிங்கம்

ரொறொன்ரோவில் இப்படியான ஒரு போஸ்டரை நான் இதற்கு முன்னர் கண்டதில்லை. ஆகவே நின்று வாசித்தேன். அங்காடித்தெரு திரைப்படத்தின் போஸ்டர். இயக்கம் வசந்தபாலன் என்று கொட்டை எழுத்தில் எழுதியிருந்தது. அதே அளவு எழுத்தில் உரையாடல் ஜெயமோகன் என்றும் இருந்தது. வசனம் இன்னார் என்று சிலவேளைகளில் போடுவதுண்டு ஆனால் உரையாடலுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தது கிடையாது. மனைவியிடம் அங்காடித்தெரு சினிமாவை தியேட்டரில் போய் பார்க்கலாம் என்று சொன்னேன். அவர் நடிக நடிகைகளின் பெயர்களைக் கேட்டுவிட்டு வர மறுத்துவிட்டார். நான் 'வசந்தபாலன் இன்றைக்கு இயக்குனர் வரிசையில் முதல் வரிசையில் இருப்பவர். உச்சமான இலக்கியப் படைப்புகளை தருபவர் ஜெயமோகன்.

இவர்கள் இருவரும் இணைந்து உருவாக்குவது அபூர்வமானதாக இருக்கும், நிச்சயம் பார்க்கவேண்டும்" என்று சொன்னேன். அப்படித்தான் இருவரும் படம் பார்க்கப்போனோம். பள்ளிக்கூட பிள்ளைகள் மணியடித்ததும் வெளியே ஓடுவதுபோல படம் முடிந்ததும் மனைவி முதல் ஆளாக வெளியேறிவிடுவார். ஆனால் அன்றைக்கு படம் முடிந்த பின்னரும் அவர் ஒரு நிமிடம் அசையாமல் உட்கார்ந்திருந்தார். படத்துக்கு கிடைத்த ஆகப் பெரிய விருது என்று நான் அதை நினைக்கிறேன்.

வழக்கமான தமிழ் திரைப்படங்களில் கதாநாயகன் முழுப்படத்தையும் ஆக்கிரமித்து இருப்பார். கதாநாயகி, பெரும்பாலும் இரண்டு நாயகிகள், 33 வீதம் இடஒதுக்கீட்டில் வந்து போவார்கள். இதிலே அப்படியில்லை. படத்தின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை இருவருமே வருகிறார்கள். வெறுப்பில் தொடங்கிய அவர்கள் அறிமுகம் காதலாக மாறி ஒரு கட்டத்தில் ஒருவருக்கு ஒருவர் உயிரைக் கொடுப்பதற்கும் தயாரான தீவிரமான காதலாக மாறுகிறது. இறுதிக் காட்சியில் அவர்களுக்கு ஒரு பாட்டைக் கொடுத்து அது முடிவதற்கிடையில் அவர்கள் கம்புயூட்டர் நிபுணர் உருவாக்கிய பெரும் தொழில் சாலைக்கு உரிமையாளர்களாகி நிறைந்த செல்வச் செழிப்புடன் வாழ்கிறார்கள் என்று திரையில் காட்டவில்லை. அது பெரும் ஆறுதலை தந்தது. இதுதான் யதார்த்தம் உண்மை வாழ்க்கையில் இப்படித்தான் நடக்கும்.

> "300 றாத்தல் எடையுள்ள 19 வயது பெண்தான் கதாநாயகி. வீட்டிலே அவளுடைய தாயும் தகப்பனும் அவளுக்கு இழைக்கும் கொடுமைகள் விவரிக்க முடியாதவை. தாயார் அவளை துன்புறுத்துவதை ஒரு கலையாகவே செய்கிறாள்."

இதற்கு முதல்நாள் நான் "Precious" திரைப்படத்தை பார்த்திருந்தேன். இந்தப் படத்துக்கு 2010ம் ஆண்டு ஒஸ்கார் விருதுகள் இரண்டு கிடைத்திருந்தன. 300 றாத்தல் எடையுள்ள 19 வயது கறுப்பின பெண்தான் கதாநாயகி. வீட்டிலே அவளுடைய தாயும் தகப்பனும் அவளுக்கு இழைக்கும் கொடுமைகள் விவரிக்க முடியாதவை. தாயார் அவளை துன்புறுத்துவதை ஒரு கலையாகவே செய்கிறாள்.

தகப்பனின் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகிய மகள் ஏற்கனவே ஓர் ஊனமுற்ற பிள்ளையை பெற்றிருந்தாள். இரண்டாவது தடவையும் தகப்பனால் கர்ப்பமானபோது பள்ளிக்கூடத்திலிருந்து அவளை துரத்துகிறார்கள். ஆனால் தலைமையாசிரியர் மாற்றுக் கல்வி திட்டத்துக்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறார். வறுமை, வன்முறை, இகழ்ச்சி எல்லாத்தையும் எதிர்கொண்டு தன் சொந்த முயற்சியில் முன்னேறிய அந்தப் பெண் தனக்கென்று ஒரு வாழ்க்கை அமைத்துக் கொள்வதுதான் கதை. இதிலே முக்கியமாகக் கவனிக்கவேண்டியது வில்லன்களாக வருபவர்கள் படத்தின் இறுதியில் தண்டிக்கப்படாமல் போவதுதான்.

அங்காடித்தெரு படத்தை பார்த்த போது அந்தக் கதைதான் ஞாபகத்துக்கு வந்தது. உலகில் பிறக்கும் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு திறமை ஒளிந்துகொண்டிருக்கிறது. உயிர் வாழ அந்த திறமை போதுமானது.

எல்லோரும் யானையாக இருக்க முடியாது. ஒரு யானை இருந்தால் ஒரு கோடி எறும்புகளும் இருக்கத்தான் செய்யும். ஒரு படத்தின் முடிவில் வழக்கமாக வில்லன் பிடிபடுவான் கதாநாயகன் தன் வெற்றியை கொண்டாடுவான். இங்கே அப்படியெல்லாம் இல்லை. வில்லன் வில்லனாகவே தொடர்கிறான். நாயகனும் நாயகியும் உலகப் பெரும் இயக்கத்தில் ஒரு துளிதான். அவர்கள் தங்களுக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். வில்லனைத் தண்டிக்க முயற்சிக்கவில்லை. உலகத்தை திருப்பி போடவில்லை. அதுவே நிஜம். அதைத்தான் திரையில் காட்டியிருக்கிறார்கள்.

செந்தில் முருகன் ஸ்டோர் அங்காடித்தெருவில் உள்ள மிகப் பெரிய நிறுவனம். ஆயிரக்கணக்கானவர்கள் ஊழியம் செய்கிறார்கள். கதாநாயகனும் கதாநாயகியும் இங்கேதான் வேலை பார்க்கிறார்கள். நிறுவனம் தங்க இடமும் கொடுத்து சாப்பாடும் போடுகிறது. தினமும் 12 மணிநேர வேலை. சிறைச்சாலையை விட பயங்கரமான வாழ்க்கை. ஆனாலும் வேலையை விட்டு நீக்கிவிடக்கூடும் என்ற பயத்தில் நடுங்கி நடுங்கி வாழ்கிறார்கள். கண்டியில் தேயிலைத் தொழிலாளியின் வாழ்க்கையை உருக்கமாக எழுதினார் புதுமைப்பித்தன். பீஜித்தீவின் அடிமைகளுக்காக கண்ணீர் விட்டார் பாரதியார். ஆனால் இன்றைக்கும் தமிழ்நாட்டின் தலைநகரத்தில் பெரிய நிறுவனங்கள் தொழிலாளிகளை அடிமைகளிலும் கேவலமாக நடத்துவதை திரையில் காணும்போது அதிர்ச்சி ஏற்படுகிறது.

ஒரு பெரிய மரம் இருந்தால் அதிலே படரும் பல கொடிகளும் இருக்கும். படம் நிறைய சின்னச்சின்ன கதைகள். ஒரு நிமிடம் மட்டுமே வந்துபோகும் அந்தக் காட்சிகள் மனதிலே அப்படியே நிற்கின்றன:

- குழந்தை ஊனமாகப் பிறந்ததை எண்ணி மகிழும் தாய்.

- வேலைபோய்விடும் என்று காதலை மறுத்து காலில் விழுந்து கதறும் காதலன்.

- பெரிய பிள்ளையான வேலைக்காரச் சிறுமியை வீட்டுக்காரர்கள் நாய் கூண்டில் அடைத்து வைப்பது.

- பொதுக் கழிப்பறையை கட்டணக் கழிப்பறையாக மாற்றும் பிழைக்கத் தெரிந்தவன்.

- இப்படி படம் முழுக்க நிறைய வருகிறது.

'அவன் உன்னை என்ன செய்தான்? " 'கட்டயமாய் சொல்லணுமோ?"

'ம்'

'என் மார்பைக் கசக்கினான். போதுமா?"

படத்தின் திருப்பமே இந்த உரையாடல்தான். விளையாட்டாக ஆரம்பித்த அவர்கள் சண்டை தீவிரமான காதலாக மாறும் இடம் இதுதான். நெஞ்சை உலுக்கிவிடும் காட்சி.

ஒருகாலத்தில் அடுக்கு வசனத்துக்கு கைதட்டல் கிடைத்தது. அந்தக் காலம் போய்விட்டது. உரையாடல்கள் நறுக்கென்று கூராக விழுகின்றன. உண்மை பேசுகின்றன. அதிகப்படியான ஒரு வசனம்கூட கிடையாது. ஒவ்வொரு வசனமும் கதையை மேலுக்கு நகர்த்துகிறது. காட்சிக்கு வசனமும் வசனத்துக்கு காட்சியுமாக இணைந்துபோன திரைப்படம் என்பது தமிழில் மிக அபூர்வமானது. ஒரு நடிகருக்காகவோ நடிகைக்காகவோ இயக்குனருக்காகவோ ஒரு படம் ஓடலாம். ஆனால் ஓர் இலக்கியக்காரரின் பங்களிப்புக்காக படம் ஓடினால் அது எவ்வளவு பெருமை.

ரசிகர்கள் சினிமாவை உண்டாக்குகிறார்கள் என்பதை பொய்ப்பித்து கலாபூர்வமான ஒரு படைப்பு நல்ல ரசிகர்களை உருவாக்குகிறது என்ற உண்மை உறுதியாக்கப்படுகிறது. படத்திலே எனக்கு கிடைத்த மிகப் பெரிய ஆறுதல் கம்பிகளில் தொங்கி பறந்து பறந்து அடிக்கும் சண்டை காட்சிகள் இல்லாதது. எது எது யதார்த்தமாக நடக்குமோ அதுவே காட்டப்படுகிறது.

படம் முடியும்போது அங்காடித்தெருவில் செந்தில் முருகன் ஸ்டோர் பிரம்மாண்டமான காட்டு யானைபோல நிற்கிறது. அதன் இருப்பை யாருமே ஒன்றும் செய்யமுடியாது. எறும்புகள் போல நடைபாதை வியாபாரிகள் சுறுசுறுப்பாக இயங்குகிறார்கள். நாயகனும் நாயகியும் சாமான்களை விற்பதற்கு அடுக்கிவைத்து ஒரு புது நாளை தொடங்குகிறார்கள். உலகில் எல்லோருக்கும் இடம் இருக்கிறது. யானையோ எறும்போ அதற்கு விற்கத் தெரிய வேண்டும். தெரிந்தால் வாழ்ந்து விடலாம்.

✸

# ஆயுட்காப்புறுதி

நிம்மதியான வாழ்க்கைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு

**RESP, RSP Funds**
**Non-Medical Insurance, Life Insurance,**
**Disability, Critical-Illness, Mortgage Insurance,**

**மருத்துவ பரிசோதனை அற்ற காப்புறுதி**

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

Menan Rasanayagam
மேனன் இராசநாயகம்
காப்புறுதி முகவர்
416-564-2008

ROYAL BROKERS
INSURANCE & INVESTMENT SOLUTIONS



Canada Life · Manulife Financial · Assumption Life · Unity Life of Canada

# முழுநேர வீடு விற்பனை முகவர்

**Saturday April 10th - 1-5 pm**




## OPEN HOUSE
**44 Royal Rouge Tr**
**Sheppard & Port Union**
4+1 Bedrooms, 4 Washrooms
Over 3000 Sq.ft.

Century 21
Affiliate Realty Inc. Brokerage*
416.290-1200
PUNCH SOCKALINGAM
Broker
416.786.2463




**Sunday April 11th - 1-5 pm**




## OPEN HOUSE
**60 Scunthorpe Rd**
**McCowan & Sheppard**
4+1 Bedrooms, 4 Washrooms
close to school, TTC, Mall




FOR SALE NEW HOUSE
4 Bedrooms, 3 Washrooms

**PUNCH SOCKALINGAM - 416-786-2463**


ராசியான மங்கையரது தெரிவு
ஸ்காபுறோ ராசி சில்க்ஸ்
11வது ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும் ராசி சில்க்ஸ்
ஸ்தாபனத்தார் வழங்கும் நம்பமுடியாத கழிவுகள்
அனைத்து ஆடை வகைகள் மற்றும் தூய பட்டுப் புடவைகள் பஞ்சாபி உடைகள், கடைாவில் எப்போது சென்றாலும் பெண்களுக்கான புதிய ரக ஆடைவகைள் மற்றும் சேலைகள் கிடைக்கும் நம்பிக்கையான இடம் உங்கள் ராசி சில்க்ஸ் ஆகும்
30%
தொடக்கம்
70%
வரையும் கழிவு விலையில் நீங்கள்
அள்ளிச் செல்லலாம்...
Rashi Silks House
2649 Eglinton Avenue East
Scarborough, Ont.
416 264 1939

# புலம்பெயர் தமிழ் மக்கள்

## மிகப் பெருமளவில் எமக்கு ஆதரவு -இரா.சம்பந்தன்

புலம்பெயர்ந்த எமது மக்கள் தந்த பின்புல ஆதரவும் பலமும் தான் தேர்தலுக்கு முன் நாம் எதிர்கொண்ட உட்கட்சி முரண்பாடுகளினை துணிவுடனும் தெளிவுடனும் கையாள்வதற்கு உதவியது எனப் புதினப்பலகையிடம் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

திருக்கோணமலை முடிவுகள் அறிவிக்கப்படாத பரபரப்புக்கும், தனது தலைமைக்கு கிடைத்த வெற்றியின் உற்சாகத்திற்கும் இடையில், தனது பழுத்த அரசியல் முதிர்ச்சியுடன் தற்போதைய அரசியல் நிலமை, தேர்தல் நிலவரங்கள் பற்றி 'புதினப்பலகை' ஆசிரியர்களுடன் உரையாடினார்.

குரல்வழியான அவரது உரையாடலின் எழுத்துவடிவம் இது. அதிலிருந்து முக்கிய பகுதிகள்:

*இம்முறை வாக்களித்த தமிழ்மக்களின் அளவு எதிர்பார்த்ததினைவிட குறைவாக இருந்துள்ளது? இந்நிலைமை குறிப்பாக யாழ்ப்பாணம் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் முடிவுகளில் வெளிப்பட்டிருந்தது. இதற்கு குறிப்பான காரணங்களினை எதனையும் கூறமுடியுமா?*

நீங்கள் கூறுவதில் வெளிப்படையான உண்மை உண்டு. யாழ்ப்பாண மாவட்டத்தினைப் பொறுத்தவரை மாவட்டத்தின் மக்கள் முழுமையாக மீண்டும் அங்கு வந்து குடியமரவில்லை. இது மிகமுக்கியமான விடயமாகும்.

இதற்கு மேலாக நடந்து முடிந்த தேர்தலின்போது அதிக எண்ணிக்கையான கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தெளிவான அரசியற் கொள்கைகளோ, வேலைத்திட்டங்களோ இல்லாமல் போட்டியிட்டமையும், ஏற்படுத்தப்பட்ட குழப்பகரமான பரப்புரைகளும் மக்களினை விரக்தி நிலைக்கு தள்ளி தேர்தலிலிருந்து தூர நிற்பதற்கு தூண்டியுள்ளதாகவே உணர்கின்றோம்.

திருகோணமலையைப் பொறுத்தவரை தமிழ்மக்கள் தங்களது அடிப்படைச் சனநாயக உரிமையான வாக்குப் பிரயோகத்தினை பயன்படுத்துவதற்கு எதிராக மிகத்திட்டமிட்டு செயற்பாடுகள் மேற்கோள்ளப்பட்டிருந்தன. குறிப்பாக ஆளுங்கட்சியின் முக்கிய அரசியல் பிரமுகரும், அவரது குண்டர்கள் அணியும் மிகமோசமான அச்சுறுத்தல்களிலும் தடைகளினை ஏற்படுத்துவதிலும் தமிழ்மக்களினை வாக்களிக்கச் செய்யவிடாமல் தடுப்பதிலும் ஈடுபட்டனர்.

தமிழ்மக்களின் அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டன. திருகோணமலை வடக்கில் சலப்பையாற்றுப் பகுதியில் தமிழ்மக்களிடமிருந்து வாக்காளர் அட்டைகள் பறித்துக் கிழிக்கப்பட்டன. வாக்காளர்களின் போக்குவரத்திற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொதுப்போக்குவரத்து வாகனங்கள் சேவையில் ஈடுபடமுடியாமல் தடுக்கப்பட்டன. அதன் சாரதிகள் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டனர்.

திருகோணமலையின் தொலைதூரக் கிராமங்களுக்கு இடையில் ஏற்கனவே காணப்படும் போக்குவரத்து தொடர்பாடல்களின் மட்டுப்பாடுகளுக்கு மேலாக மென்மேலும் திட்டமிட்டு சிரமங்கள் உருவாக்கப்பட்டன. மூதூர், ஈச்சிலம்பற்று, நிலாவெளி, குச்சவெளி, திரியாய் ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்கள் இன்னமும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம் மாறியும் சிதறியும் வாழுகின்றார்கள். அவர்கள் மிகுந்த சிரமங்களினைத் தாண்டி வாக்களிக்க வேண்டிய நிலை இங்கு காணப்பட்டது.

இத்தகைய நிலைமைகளினைத்தான் அம்பாறை மாவட்ட தமிழ் வாக்காளர்களும் எதிர்நோக்கவேண்டி இருந்தது. வன்னி மாவட்டத்தினைப் பொறுத்தவரை ஏற்கனவே இடம்பெயர்ந்து பல திக்குகளிலும் தற்காலிக இடங்களிலும் முகாம்களிலும் தங்கியுள்ள மக்களினை ஒருங்கிணைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதில் குறைபாடுகள் அதிகம் காணப்பட்டன.

குறிப்பாக உரிய வாக்குச் சாவடிகளுக்கு மக்களினை பேருந்து வண்டிகளில் அழைத்துச் செல்வதில் ஏற்பட்ட குளறுபடிகள் காரணமாக மக்கள் ஆர்வம் கொண்டிருந்தும் உரியநேரத்திற்குள் அவர்களால் வாக்குகளினை அளிக்க முடியவில்லை. இதனை தற்செயல் நிகழ்ச்சியாக நாங்கள் கருத முடியாது. இவற்றுக்கு மேலாக பெருமளவில் பணபலமும் அதிகாரபலமும் பிரயோகிக்கப்பட்டது. பலமுனைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் மத்தியிலேயே மக்கள் வாக்களிக்க வேண்டியிருந்தது.

இம்முறை நடந்த தேர்தல் நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தலாக எம்மால் கொள்ளமுடியாது. எனினும் நாம் தெளிவான குறிக்கோள்களுடனும் உறுதியான தீர்மானத்துடனும் எம்மக்களுக்காக எவ்வித தடுமாற்றமுமின்றி செயற்பட்டோம். தேர்தலினை அண்டிய காலங்களில் சில கட்சிகளும் குழுக்களும் மிகத்தவறான முறையில் மக்களினை திசை திருப்புவதற்கு முற்பட்டன. பொய்யான தகவல்களினையும், பிழையான வாதங்களினையும் மக்கள் மத்தியில் பரப்பி மக்களினை குழப்பத்தில் ஆழ்த்தின. இது ஏற்கனவே துன்பத்தில் வாழுகின்ற மக்களினை மேலும் குழப்புவதற்கும் தேர்தலில் பங்கேற்கும் ஆர்வத்தினைக் குறைப்பதற்கும் முக்கிய காரணமாக இருந்தது.

**"புலம்பெயர் சமூகத்துப் பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் மக்களுக்கு உண்மைகளினைத் தெரிவிப்பதிலும் ஆரோக்கியமான விவாதங்களினை உருவாக்குவதிலும் துணை நின்றன. அவைகளின் பங்களிப்பினைக் குறைத்து மதிப்பிட என்னால் முடியாது."**



*புலம்பெயர் தமிழர்கள் நடந்துமுடிந்த தேர்தல் தொடர்பாக எத்தகைய செல்வாக்கினை அல்லது தாக்கத்தினைச் செலுத்தியிருந்தனர்?*

முதலில் உங்களுடைய கேள்விக்குச் செல்வதற்கு முன்பு புலம்பெயர் மக்களுக்கு எமது நன்றியினைத் தெரிவிக்

கும் பாரிய கடமை எனக்குண்டு. மிகப் பெரும்பான்மையான புலம்பெயர் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டன் மிகநெருக்கமாகவும் ஆதரவாக வும் செயற்பட்டனர்.

அவர்கள் தந்த பின்புல ஆதரவும் பலமும் தான் தேர்தலுக்கு முன் நாம் எதிர்கொண்ட உட்கட்சி முரண்பாடுக-ளினை துணிவுடனும் தெளிவுடனும் கையாள்வதற்கு உதவியது. அவர்க ளுக்கு எங்கள் மக்கள் சார்பான நன்றிகள். பலமுனைகளிலும் நெருக் கடிகளினை உருவாக்கியிருந்த இந்தத் தேர்தலினை, வெற்றிகரமாகக் கையா-ளுவதற்குப் புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ்மக்கள் தனியாட்களாக வும் குழுக்களாகவும் அமைப்புக்களாக வும் உதவி செய்தனர்.

புலம்பெயர் சமூகத்துப் பொதுசனத் தொடர்பு ஊடகங்களும் மக்களுக்கு உண்மைகளினைத் தெரிவிப்பதிலும் ஆரோக்கியமான விவாதங்களினை உருவாக்குவதிலும் துணை நின்றன. அவைகளின் பங்களிப்பினைக் குறை த்து மதிப்பிட என்னால் முடியாது. ஆனால் அவர்களின் பணி முடிந்து விட்டது எனத் திருப்திப்பட இயலாது. குறிப்பாகத் தாயகத்தின் கிராமங்களும் மக்களின் வாழ்வும் யுத்தத்தினாலும் சிங்கள ஆட்சியாளரின் தொடர்ந்த தமிழின விரோத செயற்பாடுகள் காரணமாகவும் சிதைந்து போயுள்ளன. மீள்கட்டமைப்பும் இயல்பு வாழ்க்கை யும் கூட அம்மக்களுக்கு மிகப்பாரிய சவால்களாக உள்ளன.

எல்லா விடயங்களுக்கும் அரசாங்கத்தி னையும், அரசுசாரா தொண்டர் நிறு வனங்களினையும் நம்பி காத்திருக்க முடியாது. அதுவும் ஒருவிதமான அடி மைத்தன நிலைக்கே இட்டுச்செல்லும். இத்தகைய நெருக்கடியிலிருந்து தாய கத்து மக்களினையும் அவர்களது கிரா மங்களினையும் மீட்டெடுக்கப் புலம் பெயர் தமிழர்களின் பொருள்வளமும், மனிதவளமும், மூளைவளமும் அவசிய மாக உள்ளது.

கடந்த காலத்தில் அவர்கள் செய்த பங்களிப்பு அளப்பரியது எனினும், வேறு பட்ட பரிமாணத்தில் தேசியப் போராட் டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு புதிய சவால்களினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. புலம்பெயர் தேசத்து தமிழ்மக்கள் தங்கள் பொறுப்பினை உணர்ந்து தாயகத்து மக்களால் இன்று உறுதிப்படுத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையு டன் கைகோர்த்து ஆக்கபூர்வமாக செயற்படுவார்கள் என்பதில் எங்களு க்கு துளியளவும் சந்தேகம் இல்லை.

*நடந்து முடிந்த தேர்தலினூடாக சிறீ லங்கா பாராளுமன்றத்தின் மூன்றாவது தனிப்பெரும் கட்சியாக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு இருக்கப்போகின்றது. இந்நிலையில் தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக எதிர் காலத்தில் எவ்வாறு செயற்படப் போகின்றீர்கள்?*

இங்கு நாங்கள் இரண்டு விடயங்களி னைக் கவனிக்கவேண்டும். சிறீலங்கா பாராளுமன்றத்தில் மூன்றாவது தனிப் பெருங்கட்சி என்பதனைவிட முக்கி யமானது வடக்கு கிழக்கு தமிழர் தாய கத்தில் தமிழர்களினைப் பிரதிநிதித் துவப்படுத்தும் தனிக்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழ்மக் கள் தெரிந்தெடுத்து ஆணைப்படுத் தியிருக்கின்றார்கள். இதுவே மிகமிக முக்கியமான விடயமாகவுள்ளது.

தேர்தலில் போட்டியிட்ட ஏனைய சகல தமிழ்க்கட்சிகளும் சுயேட்சைகளும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனர். தமிழ்மக்களின் அரசியல் எதிர்காலத் தினை சரியான திசையில் பொருத்த மான அணுகுமுறைக்கு ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் தலைமையும் முன்னெடுக்கும் என்ற தங்களுடைய அசையாத நம்பிக்கை யினை மக்கள் வெளிப்படுத்தியிருக் கின்றார்கள்.

எங்களது தேர்தல் அறிக்கையில் 'விஞ்ஞாபனத்தில்" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு எதிர்காலத்தில் செயற்படும் என்பது மிகத்தெளிவாக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. எமது தமிழ்த் தேசியவிடுதலையின் அடிப் படைகளிலிருந்து எவ்விதத்திலும் பிற ழாமல் உறுதியாக நின்றுகொண்டு நாங்கள் செயற்படுவோம்.

அதன்பொருட்டு நிலைமைகளினை புரிந்துகொண்டு எங்களுடன் இணை ந்து செயற்படவிரும்பும் சகல தமிழ் சக்திகளினையும் அணைப்பதில் எங்க ளுக்கு எவ்வித தயக்கமுமில்லை. அமையப்போகும் புதிய அரசாங்கமும் குடியரசு அதிபர் ஜஜனாதிபதிஸ மகிந்த இராஜபக்சவும் தமிழர்கள் பிரச்சனை தொடர்பாக பேசவேண்டிய ஓரேயொரு தரப்பாக நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது.

விரைவில் எங்களுடன் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளினை திருப்திப் படுத்துவது தொடர்பான பேச்சுவார்த் தைகளினை குடியரசு அதிபர் ஜனாதி பதி மகிந்த இராஜபக்ச ஆரம்பிப்பார் என எதிர்பார்க்கின்றோம். ஆரம்பிக்க வேண்டும். சர்வதேசநாடுகளினதும், சிறப்பாக இந்தியாவினதும் ஆதரவுடன் தமிழ்மக்களின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வுகாணும் முயற்சிகளினை முன் னெடுக்க இருக்கின்றோம்.




**“ அமையப்போகும் புதிய அரசாங்கமும் குடியரசு அதிபர் ஜனாதிபதி மகிந்த இராஜபக்சவும் தமிழர்கள் பிரச்சனை தொடர்பாக பேசவேண்டிய ஓரேயொரு தரப்பாக நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது. ”**

*தாங்கள் குறிப்பாக புலம்பெயர் தமி ழ்ச் சமூகத்திற்கு கூறவிரும்புவது....?*

தமிழ்த் தேசியத்தின் உயிர்நாடியே வடக்கு கிழக்கு இணைந்த தாயகத் தின் அரசியல் அடையாளமும், சமூக இருப்பும், பொருளாதாரச் செழுமையு மாகும். இது மூன்று பரிமாணங்களில் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. தமிழ்மக்களினை அரசியல் தெளிவுள் ளதும் விழிப்புடன் தொடர்ச்சியாக ஜனநாயக செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டக்கூடியதுமான பலம் வாய்ந்த மக்கள் கட்மைப்பாக தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வளப் படுத்த வேண்டியுள்ளது.

இரண்டாவது தமிழ்த் தேசிய விடுத லைக்கான முயற்சிகளில் முழுமை யான பலத்துடனும் தீர்க்கமான பார் வையுடனும் உறுதியான முன்னெடுப் புக்களினை சாத்தியமான நெகிழ்வுக ளுக்கூடாக சகல தளங்களிலும் முன் னெடுப்பது. மூன்றாவதும் முக்கியமான தும் தமிழர் தாயகத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு அபிவி ருத்தி ஆகியவிடயங்களினை சிறப்பா கவும் உரித்துடனும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய வழிமுறைகளினைக் கண்டறிந்து செயற்படுத்துவது.

இவற்றினை மேற்கொள்வதற்கு வேண் டிய தலைமைத்துவத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித கேள் விக்கும் அப்பாற்பட்ட வகையில் வழங் கும். அதனோடு இணைந்து தோள் கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் புலம்பெயர் தேசத்து மக்களுக்கும் குறிப்பாக அறிவாளிகள், வல்லுனர்கள், தொழில் முனைவோர் கள், முதலீட்டாளர்கள், அரசியற் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரினதும் தவிர்க்க முடியாத கடமையாகும். அத னை அவர்கள் எவ்வித தயக்கமுமின்றி நிறைவேற்ற வேண்டும்.

✸



சிறுகதை

# மட்டுப்படுத்தப்பட்ட வினைச்சொற்கள்

பச்சை, மஞ்சள், வெள்ளை பரிசாரகி உடையணிந்து நிற்பவள் ஓர் அகதிப் பெண் இலங்கை அல்லது இந்தியப் பெண்ணாக இருக்கும். கயானாவாகக் கூட இருக்கலாம். கறுப்பு சருமம், கறுப்பு தலைமயிர், கறுப்பு கண்கள். அவள் உதட்டுச் சாயம், நகப்பூச்சுக் கூட கறுப்பாகவே இருந்தது. அவள் பெயர் நீளமாகவும் அதிக மெய்யெழுத்துக்கள் நிரம்பியதாகவும் இருந்திருக்கக்கூடும். அதைச் சுருக்கி 'ரத்னா" என்று தன் உடையின் ஒரு பக்கத்தில் குத்தி வைத்திருந்தாள். பரிசாரகப் பயிற்சி வகுப்பில் சொல்லிக் கொடுத்ததுபோல அவள் மேசைக்கு சற்று தூரத்தில் நின்றாள். கண் பார்க்கக் கூடிய தூரம், காது கேட்கக்கூடாத தூரம். அதுவே விதி. இன்னும் பல விதிகள் அவளுக்கு தெரியும்.

உணவை மேசையின் மேல் வைக்கும் போது அதை விருந்தினரின் இடது பக்கத்தில் நின்று வைக்கவேண்டும்.

**விதி-12.** மீதமான உணவை மேசையில் இருந்து எடுக்கும்போது அதை விருந்தினரின் வலது பக்கத்தில் நின்று எடுக்கவேண்டும்.

**விதி-11.** விருந்தினரின் நாற்காலியை இழுத்து வசதிசெய்து கொடுக்கும் போது இடது பக்கமாக நிற்க வேண்டும்.

**விதி-26.** நாப்கினை மடித்து பிளேட்டின் இடது பக்கத்தில் வைத்தால் விருந்தினர் முடித்துவிட்டார் என்று அர்த்தம்.

**விதி-7.** நாப்கினை மடித்து பிளேட்டின் நாற்காலியின் மேல் வைத்தால் விருந்தினர் இன்னும் முடிக்கவில்லை என்று அர்த்தம்.

**விதி-9.** சாப்பிட பயன்படுத்தும் உபகரணங்கள் வெளியில் இருந்து உள்ளுக்கு குறைந்து கொண்டே வர வேண்டும்.

**விதி-19** இன்னும் இருக்கின்றன. அவளுக்கு எல்லாமே மனப் பாடம்.

அவளுக்கு தொல்லை கொடுப்பது விதிகள் அல்ல. ஆங்கில வகுப்பு. பெயர் சொற்களையே அவளுடைய ஆசிரியர் படிப்பிக்கிறார் அவையே முக்கியம் என்றும் சொல்கிறார். சாலட், நாப்கின், சீஸ், கூகம்பர், கிளாம் சூப், ஒலிவ், லெட்டுஸ். வினைச்சொற்கள் இப்போது தேவை இல்லை, அவை தானாகவே வந்து இணைந்துகொள்ளும் என்கிறார். எப்போது, எந்தத் தேதியில் வந்து சேரும் என்பதை அவர் சொல்லவில்லை. ஸ்தோத்திரம் போல அவள் ஓர் ஒற்றை ரூல் கொப்பி நிறைய பெயர்ச் சொற்களையே எழுதி வைத்து பாடமாக்குகிறாள். வினைச் சொற்கள் இல்லாமல் அவற்றை எப்படி பயன்படுத்துவது? ஆனால் அவள் ஆசிரியர் சொன்னால் அது சரியாகத் தான் இருக்கும்.


அவளுடைய அறைச் சிநேகிதி அவள் படிக்கும் முறையை பரிகாசம் செய்கிறாள். இதனிலும் உத்தமமான ஒரு வழி அவளுக்கு தெரிந்திருக்கும். ஒரு காதலன் கிடைத்தபிறகு அவள் காலண்டரில் புள்ளடி போட்டு வைக்கத் தொடங்கியிருந்தாள்.

அந்த தினங்களில் அகதிப் பெண் பதினொரு மணிக்கு முன்னர் அறைக்கு திரும்ப முடியாது. காதலர்கள் சந்திக்கும் புனித கணத்துக்கு அவளால் கெடுதல் வரக்கூடாது என்கிறாள். தகரக் குழாய் சத்தத்தில் அவள் காதலன் பேசுகிறான். அவன் கையை நீட்டும்போது அது திராட்சைக் குலை போல தொங்கும். அவள்தான் அதைப் பிடித்துக் குலுக்கவேண்டும். அவன் கண்களும் அவள் முகத்தை நேரே பார்க்காமல் அவனுடைய வலது தோளுக்கு மேலால் பார்க்கின்றன.

அன்றைய விருந்தை கனடாவின் அதி செல்வந்தர்களில் ஒருவர் ஏற்பாடு செய்திருந்தார். அவர் வீட்டிலே நாளுக்கு ஒரு தடவை திரைச் சீலைகளையும், இரண்டு தடவை படுக்கை விரிப்புகளையும், எட்டு தடவை பல்புகளையும் மாற்றுவார்களாம். அவ்வளவு பெரிய பணக்காரர். மணி பதினொன்றைக் கடந்து வெகு நேரமாகி விட்டது. அவளுக்கு மணித்தியாலத்துக்கு இவ்வளவு என்று சம்பளம். திருமண விருந்து, பிறந்ததின விருந்து போன்ற கொண்டாட்டங்களின்போது அவள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பாள். அவளுடைய மேலாளர் தவறுகளை அனுமதிப்பதில்லை. கறுப்பு ஸ்டொக்கிங்க்ஸ் அணிந்து, கைகளை ஒரு பறவை பறக்க ஆயத்தம் செய்வது போல விரித்து, தட்டு தட்டென்று அறை யினுள் நுழையும்போது அவள் அளவு கன அடி காற்று வெளியேறிவிடும். இதைக் கண்டுபிடிப்பதற்கு "ஆர்க்கிமிடிஸ்" தேவையில்லை. அகதிப் பெண்ணே அதைச் செய்துவிடுவாள்.

திடீர் திடீரென்று மேலாளர் பரீட்சை வேறு வைப்பார். 'இதற்கு என்ன பெயர்?' 'புட்டிங்.' கரண்டியால் ஒரு துண்டை வெட்டி வாயிலே வைத்து சுவைப்பார். 'இப்போது இதற்கு என்ன பெயர்?' 'எச்சில் உணவு." 'இதை என்ன செய்யவேண்டும்?' 'குப்பையில் வீச வேண்டும்." அவள் பரீட்சையில் பாஸ். புத்தகத்தில் சொல்லப்பட்ட ரூல்கள் தவிர தனிப்பட்ட முறையில் அவளுக்கும் சில விதிகளை மேலாளர் உண்டாக்கியிருந்தார். விருந்தினர்களுடன் இன்முகமாய் இருக்கவேண்டும். அது அவளுக்கு தெரியும். விருந்தினர்கள் குறிப்பறிந்து அவர்களை திருப்திப் படுத்தவேண்டும். அது அவளுக்கு தெரியும். விருந்தினர்களுக்கு எரிச்சலூட்டும் காரியத்தை செய்யக்கூடாது. அது அவளுக்கு தெரியும்.

அகதிப் பெண்ணின் ஆங்கிலம் குறைபாடுள்ளது. ஆகவே விருந்தினர்களுடன் அவள் பேசுவதை தவிர்க்கவேண்டும். அவர்கள் ஏதாவது கேட்டால் புன்னகையை தாராளமாக செலவு செய்யலாம். இந்தக் கடைசி விதி அவசியமில்லாதது என்றே அவள் நினைத்தாள். வினைச்சொற்கள் இல்லாத வசனங்களை அவள் பேசும்போது அவை யாருக்குமே புரிவதில்லை.



அ.முத்துலிங்கம்

பிரதம மேசைக்கு எதிர் மேசையில் இருந்த குடும்பம் வினோதமாக இருந்தது. தாய்போல தோற்றமளித்தவளுக்கு வயது 30 இருக்கலாம். தகப்பனுக்கு 50. மகனுக்கு 18, மகளுக்கு 8 என்று அவள் கணக்கு போட்டாள். அப்படியானால் அந்த மனைவி இரண்டாம் தாரமாக இருக்கலாம். மகன் முதல் தாரத்துக்கு பிறந்திருக்க வேண்டும். எல்லாம் ஒரு ஊகம்தான். ஊகிப்பதில் அவள் மிகவும் கெட்டிக்காரி.

அவர்களுடைய மேசை அவள் பொறுப்பில் இருந்தது. அது மிகவும் கலகலப்பானது. ஐந்து நிமிடத்துக்கு ஒருமுறை ஏதோ பேசி சிரித்து சத்தம் போட்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் பேசியது போலந்து மொழியாக இருக் கலாம். அதில் நிறைய மெய்யெழுத் துக்கள் கலந்து கிடந்தன, ஆனால் அவை பெயர்ச்சொற்களா, வினைச்சொற்களா என்பது தெரியவில்லை. ஒரு ஐம்பது வயது தகப்பனுக்கும், முப்பது வயது மனைவிக்கும், 18 வயது மக னுக்கும், 8 வயது மகளுக்கும் இடையில் பொதுவாக என்ன இருக்கும். அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் பரிசாரகிக்கும் சிரிப்பு தொற்றியது.

அப்பொழுதுதான் அவன் அவளைப் பார்த்தான். அவளை ஒருவருமே பார்ப்பதில்லை. இந்த பதினெட்டு வயது, சிவப்பு தலைமுடிக்காரன் அவளைப் பார்க்கிறான். அவன் கண்கள் துளைத்து விடும்போல இருக்கின்றன. அந்த விருந்தில் கலந்துகொண்ட எத்தனையோ இளம் பெண்கள் அங்கே இருந்தார்கள். ஆனால் இவளையே அவன் பார்த்தான். விதிகள் என்ன சொல்கின்றன. மேலாளர் இதைப்பற்றி என்ன நினைப்பார். அவள் அந்தப் பார்வையை திருப்பித்தர முடியுமா? அவளுக்கு தெரியவில்லை. தன் வேலையை அவள் இன்னும் சிரத்தையுடன் கவனித்தாள்.

இதற்கு முன் என்றும் ஏற்பட்டிராத வகையில் அவள் மனதில் ஏதோ குறுகுறுவென்று ஓடியது. தன் தங்கையுடன் முகத்தை திருப்பி பேசிப் பேசி சிரித்தான் சிவப்பு முடிக்காரன். அந்த சிரிப்பின் மிச்சத்தை அவள் பக்கம் திரும்பி முடித்துக்கொண்டான். அவள் அவர்களுக்கு ஏதாவது பரிமாறப் போகும் போதெல்லாம் அவன் கண்கள் அவளைத் தொட்டு வாசல்வரை கொண்டு வந்து விடுவது வழக்கமானது.

அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது அவன் மடியிலிருந்த நாப்கின் மெதுவாக நழுவி கீழே விழுந்தது. அப்படி விழுவதற்கு அவன் விரல்கள் உதவிசெய்தன என்றே நினைக்கிறாள். அதற்கும் ஒரு விதி இருக்கிறது. அவள் நாப்கினை குனிந்து எடுத்து அவன் கையில் கொடுத்தாள். அவன் நன்றி என்று வாங்கிக்கொண்டான். அப்படிச் சொன்ன அதே நேரம் அவன் கைவிரல்கள் அவள் உள்ளங்கையை ஒருவித சந்தேகத்துக்கும் இடமில்லாமல் அழுத்தின. நடுக்கம் வழக்கம் போல அடிக்காலில் இருந்து தொடங்கியது. ஒன்றுமே நடக்காததுபோல அவள் மறுபடியும் தன்னிடத்துக்கு நகர்ந்தாள். அவளைச் சுற்றியிருக்கும் காற்றைக் கலைத்து விடக்கூடாது என்பதுபோல நின்றாள். மேசையில் பேசுவது கேட்கக்கூடாத தூரமாகவும், அவர்கள் பார்க்கக்கூடிய தூரமாகவும் அது இருந்தது. அது ரூல் 17.

இப்பொழுது நடனம் ஆரம்பமாகி விட்டது. அவனுடைய தாயும் தகப்பனும் எழுந்து மேடைக்கு போய்விட்டார்கள். தாய் சுழன்று சுழன்று ஆடினாள். ஆடலறை முழுக்க அவள் நிறைந்து இருந்தாள். தகப்பன் ஆகக் குறைந்த அங்க அசைவுகளை வெளிப்படுத்தி தன் பங்கு நடனத்தை கச்சிதமாக நிறைவேற்றினார். அவன் தங்கை நாற்காலியை நகர்த்தி வைத்து நடனத்தையே கண் கொட்டாமல் பார்க்கத் தொடங்கினாள்.

திடீரென்று அவன் முகத்தில் புன்னகை தோன்றியது. கையை உயர்த்தி அவளை அழைத்தான். ரூல் 16. அவள் விரைந்து சென்று பணிவுடன் ஒரு குளவியின் இடைபோன்ற தன் இடையை கண் மதிக்க முடியாத அளவுக்கு வளைத்து எஸ் என்றாள். அந்த வார்த்தை பேசுவதற்கு அவளுக்கு அனுமதி இருந்தது. அவன் 'கொஃபி, டீ காஃப், டூ சுகர்' என்றான். அவன் அந்த வார்த்தைகளை

சொன்னது, அவளுடைய பெயரை யாரோ கனிவுடன் உச்சரித்ததுபோல இனிமையாக இருந்தது. 'கொஃபி, டீகாஃப், டு சுகர்' அவன் நாக்கில் தொடாமல் அந்த வார்த்தைகள் உருண்டு வந்து விழுந்தன. அன்று விருந்து முடிவதற்கிடை யில் அவன் மூன்றுதரம் கொஃபி ஓடர் பண்ணிவிட்டான். அவளுடைய கடமை அவன் கேட்டதை பரிமாறுவது. ரூல் 22. அவன் இன்னும் 20 தடவை கேட்டாலும் அவள் பரிமாறத் தயாராக இருந்தாள்.

விருந்தினர்கள் ஒவ்வொருவராக புறப்பட்டுப் போயினர். இவர்களும் விரைவில் போய்விடுவார்கள். அவனுடைய தாயார் கைப்பையை திறந்து ஏதோ சரிசெய்தபடி அதை தோள் மூட்டிலே மாட்டி தயாரானாள். இவன் தன் நாப்கினை எடுத்து நாலாக மடித்து தன் பிளேட்டின் மேல் அவளைப் பார்த்தபடியே வைத்தான். பிறகு கண்களால் சைகை காட்டினான்.

இவள் ஒரு விதியையும் மீறவில்லை. நிதானமாக எல்லா கோப்பைகளையும் ஒவ்வொன்றாக அகற்றினாள். அவன் முறை வந்தது. அவன் உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தான். அவனுடைய பிளேட்டை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள். நாப்கினை அகற்றியபோது கீழே ஐந்து டொலர் நோட்டு இருந்தது. பேனையால் நாப்கினில் ஒரு டெலிபோன் நம்பர் வேறு எழுதியிருந்தது. அவள் அந்த நம்பரை தன் உள்ளங்கையில் உடனேயே எழுதி வைத்தாள். அன்று இரண்டாம் முறையாக அவளுடைய உள்ளங்கை அவளுக்கு பயன்பட்டது.

அறைச் சிநேகிதியை காணவில்லை. கையை திருப்பி நம்பரைப் பார்த்தாள். அது இன்னும் அழியவில்லை. உரத்து அந்த இலக்கத்தை சொன்னாள். அந்த இலக்கம்கூட இனிமையாக ஒலித்தது. அவள் மனம் என்றும் இல்லாதவிதமாக அந்தரத்தில் உலாவியது. சிவப்பு முடிக்காரன் இப்பொழுது என்ன செய்வான். அவளை நினைப்பானா? அறை அமைதியாக இருந்தது. ஒரு முறை அவனை அழைத்தால் என்ன வென்று தோன்றியது. அந்த நடுநிசியில் யாரும் பேசமாட்டார்கள் என்றே நினைத்தாள். ஆகவே ஒவ்வொரு தானமாக மெதுவாக டயல் பண்ணினாள்.

மறுமுனையில் இருந்து ஒரு குரல் உடனேயே ஒலித்தபோது இவளுக்கு புரிந்துவிட்டது அவன்தான் என்று. 'கொஃபி, டீ காஃப், டு சுகர்' என்று உச்சரித்த அதே உருண்டையான குரல். ஆனால் அவளுடைய கைகள் நடுங்கின, வாய் நடுங்கியது. தொடைகள் நடுங்கின. உடனே அவள் டெலி-போனை திருப்பி வைத்துவிட்டாள். ஆனால் சரியாக ஒரு நிமிடத்தில் தொலைபேசி திரும்பவும் ஒலித்தது.

கடைசியாக வந்த நம்பர் பட்டனை அவன் அமுக்கியிருக்கிறான். அவள் தொலைபேசியை எடுக்கவில்லை. சுருண்டுபோய் இருக்கும் ஒரு பாம்பை பார்ப்பதுபோல எட்டத்தில் நின்று அதைப் பார்த்தாள். அது அடித்துக் கொண்டே போனது. இறுதியில் அவனிடம் இருந்து வந்த ஒரு தகவலை டெலி-போன் சேமித்து வைத்துக் கொண்டது. அவள் அந்த தகவலை ஓடவிட்டுக் கேட்டபோது பாதிதான் புரிந்தது. அவன் குரலில் தகவலை சரியான இடத்தில் விடுகிறோமோ என்ற தயக்கம் தெரிந்தது. யார் அழைத்தது என்ற ஊகமும் இருந்தது. அவளை திருப்பி அழைக்கும்படி மன்றாட்டமாகக் கேட்டிருந்தான்.

அவள் அவனை அழைக்கவில்லை. ஆனால் வேண்டியபோது அவனுடைய குரலை ஓடவிட்டுக் கேட்டாள். தினம் ஒரு சடங்குபோல அதைச் செய்து வந்தாள். அது எப்படியோ அவளுடைய அறைவாசிக்கு தெரிந்துவிட்டது. அவளுக்கு எரிச்சலைக்கூட உண்டாக்கியிருக்கலாம். ஒரு நாள் அவள் இல்லாத நேரம் பார்த்து அந்த அற்புதமான குரலை அறைவாசி அழித்து விட்டாள். அகதிப் பெண் அன்று துடியாய் துடித்துப் போனாள்.

அவர்கள் வசித்த அறை ஒரு கூரை, ஒரு கதவு, ஒரு யன்னல் கொண்டது. அவளுடைய கட்டிலுக்கு பக்கத்தில் அவள் சிநேகிதியின் கட்டில் இருந்தது. கையை நீட்டினால் சிநேகிதி முகத்தில் அது இடிக்கும். ஆகவே அகதிப்பெண் சுவருடன் முட்டிக்கொண்டு படுப்பாள். இன்னும் பல இன்னல்கள் இருந்தன. தகரக் குழாய் குரல்காரன் அவளைப் பார்க்கும் விதம் அவளுக்கு பிடிக்கவில்லை. அவள் சிநேகிதி இல்லாத சமயங்களில் டெலிபோனில் கூப்பிட்டு சிநேகிதியைப் பற்றி விசாரிப்பான். அவள் இல்லையென்ற பிறகு தொலைபேசியை கீழே வைக்கவேண்டியது தானே. அவன் செய்வதில்லை, ஒரு சம்பாசணையை உண்டாக்கப் பார்ப்பான்.

தோள்மூட்டுக்கு மேல் சூரியன் உயர எழும்பாத ஒரு பனிக்காலத்து பகல் வேளை. அவளுடைய அறைத் தோழியும், காதலனும் அவளுக்கு ஒருவிருந்து கொடுத்தார்கள். அவள் எப்படி மறுத்தும் அவர்கள் கேட்கவில்லை. அவளை அன்றுடன் ஒரு வழி பார்த்துவிட வேண்டும் என்பதுபோல வருந்தி அழைத்தார்கள். சரி என்று அவளும் போனாள். அவளை இம்சிப்பதுதான் அந்த விருந்தின் முழு நோக்கமும் என்பது பின்னாலேதான் அவளுக்கு தெரிந்தது. மதிப்புக்காக கறுப்புக்கண்ணாடிகளை தங்கள் தங்கள் தலைகளில் குத்தி வைத்துக்கொண்டு காதலர்கள் இருவரும் அடிக்கடி கண் ஜாடையில் பேசினார்கள். திடீரென்று பெருங்குரலில் சிரித்தார்கள். அவளுக்கு புரியவில்லை. சிரிப்புக்கு காரணம் பல சமயங்களில் அவள்தானோ என்றும் தோன்றியது.

அவளுக்கு அது பிடிக்கவில்லை. தினம் ஒரு விருந்து என்று வெட்டி முறிகிறாள். அவளுக்கே ஒரு விருந்தா? ஆவு ஆவென்று அலுவலக மண்டபத்துக்கு அன்று வந்து சேர்ந்தபோது இன்னும் சில நிமிடங்களே இருந்தன. வழக்கத்தில் வேலை தொடங்க ஐந்து நிமிடம் முன்பாகவே வந்து சீருடை அணிந்து தயாராகிவிடுவாள். ரூல் 16. எந்த மண்டபத்துக்கு வேண்டுமானாலும் அவளை அவர்கள் அனுப்புவார்கள். ரூல் 18. அவளைப்போல பரிசாரகி வேலைகேட்டு வந்த சிலர் அங்கே காத்திருந்தார்கள். யாரையோ பழிவாங்கத் துடிப்பதுபோல அன்று பத்து மணி நேரம் தொடர்ந்து வேலை செய்தாள். ஒரு நிமிடம்கூட உட்காரவில்லை. கால்கள் கெஞ்சின. கைகள் பாரமான தட்டங்களை தூக்கியபடி அலைந்து சோர்ந்தன. அது அவளுக்கு பழக்கமாகிப் போயிருந்தது.

நடுநிசி தாண்டியும் விருந்து முடிந்தபாடில்லை. அப்படியான வேளைகளில் மேலாளருக்கு கருணை பிரவாகம் எடுக்கும். ஐந்து நிமிடம் ஓய்வு தருவார். சாப்பாட்டுக் கூடத்துக்கும், விருந்து மண்டபத்துக்கும் இடையில் ஒரு சின்ன ஒடுக்கமான அறை. அங்கே சுழட்டி டயல் பண்ணும் கறுப்பு டெலிபோன் ஒன்று இருந்தது. அதைக் கடந்து போகும் போதெல்லாம் அவள் மனம் அலைபாய்ந்தது; திக்திக்கென்று அடித்தது. என்றும் இல்லாதவாறு அன்று அவளுக்கு அவன் நினைவு வந்து கொண்டே இருந்தது.

பல வாரங்களுக்கு முன் முதல் தடவையாக அவனை அழைத்த பிறகு மேலும் மூன்று முறை அழைத்திருக்கிறாள். அப்பொழுதெல்லாம் ஒரு முரட்டு ஆண்குரல் பேசியது. அவனுடைய தகப்பனாக இருக்கலாம். அவள் உடனே தொலைபேசியை வைத்து விடுவாள். அன்று என்னவோ அவன் குரலை ஒரு முறையாவது கேட்க வேண்டும் என்று பட்டது. கையிலே இருந்த தட்டத்தை கீழே வைத்துவிட்டு டெலிபோனை சுழட்டி டயல் பண்ணினாள். விரல்கள் நடுங்கின. நெஞ்சு, இன்னும் சில கணங்களில் நின்றுவிடப் போகும் ஒரு குருவியின் இருதயம் போல, படபடவென்று அடித்தது.

அதிசயமாக அவன் குரல் கேட்டது. அவன்தான். அவளுக்கு சந்தேகமே இல்லை. உடனேயே உலகம் வரண்டு விட்டது. வாயிலே சத்தம் வருவது நின்றுவிட்டது. அவன் ஹலோ ஹலோ என்று விடாமல் ஒலித்தான். என்ன பேசுவது? என்ன பேசுவது? எந்த வார்த்தையை சொல்வது, என்ன சுருதியில் ஆரம்பிப்பது, ஒன்றையுமே அவள் சிந்திக்கவில்லை. அவனுடைய குரலைக் கேட்டாலே போதும் என்று நினைத்திருந்தாள். அவன் மீண்டும் ஹலோ என்றான். 'மொசரல்லா சாலட்" , 'லெட்டூஸ்', 'ப்ருஸெட்' , 'சுப்படீ வங்கோல' , 'லாசன்யா' அவளிடம் வினைச் சொற்கள் இல்லை. சில வாரங்களுக்கு முன்பு அவன் சாப்பிட்ட அத்தனை உணவு வகைகளையும் ஒப்பித்தாள். மறுபக்கத்தில் இருந்து சிரிப்புக்கு நடுவில் ஒரு சத்தம் கேட்டது. அத்துடன் பரிசாரகி டெலிபோனை துண்டித்து விட்டாள். இது நடந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. அவள் படுக்கையில் கால்களை நீட்டி, ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு, சிவப்பு முடிக்காரனின் முகத்தை ஞாபகத்துக்கு கொண்டுவர முயன்றாள். திடீரென்று அவளுடைய சிநேகிதி கதவைத் திறந்து பிரவேசித்தாள். அவள் கதவை அடித்துச் சாத்தும் சத்தத்திலும் பார்க்க திறக்கும் சத்தம் கூடுதலாக இருக்கும். இதை எப்படிச் சாதிக்கிறாள் என்பது தெரியவில்லை. நின்ற கோலத்தில் கால்களை உதறி சப்பாத்துகளை கழற்றினாள். கைப்பையை வீசி எறிந்தாள். அவள் உதடுகள் மேலும் கீழும் இமைகள் துடிப்பதுபோல அடித்தன, ஆனால் சத்தம் வரவில்லை.

அகதிப் பெண் வாயே திறக்கவில்லை. அப்போதுதான் விழித்ததுபோல மறு பக்கம் சுழன்று கழுத்தை இரண்டு பக்கமும் திருப்பி பார்த்தாள். மிக மட்டமான அறை மட்டமான சிநேகிதி மட்டமான போர்வை மட்டமான மணம். எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒரு சுவரைக் காணக்கூடிய அந்த அறையில் அவள் கண்களை மூடிக்கொண்டு மீண்டும் அவனுடைய முகத்தை நினைவில் மீட்டாள். அவனுடைய சொண்டுகள் உருண்டு வார்த்தைகள் வழுக்கி விழுந்ததை எண்ணிப் பார்த்தாள். 'கொஃபி, டீகாஃப், டு சுகர்' , 'கொஃபி, டீகாஃப், டு சுகர்'அப்படியே அவள் தூங்கிப்போனாள்.

டெலிபோன் சம்பாசணை வெட்டுப்பட்ட பிறகு அவன் சும்மா இருக்கவில்லை. விருந்தில் அவன் சாப்பிட்ட அத்தனை உணவு அயிட்டங்களையும் சொன்னது பரிசாரகி என்பதை ஊகிக்க அவனுக்கு சில நிமிடங்களே எடுத்தன. ஆனால் அவள் வேலை செய்யும் கம்பனியை கண்டு பிடிக்க கொஞ்ச அவகாசம் தேவைப்பட்டது. அந்தக் கம்பனி, தன் ஊழியர்களை எந்த விருந்து மண்டபத்துக்கு, எப்போது அனுப்புகிறது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது. ஆனாலும் அவன் முயற்சியைக் குறைக்கவில்லை. அடுக்கடுக்காக பல விருந்து மண்டபங்களுக்கு போய் அவளைத் தேடினான். அது ஒன்றும் அகதிப் பெண்ணுக்கு தெரியாது.

படிக்கட்டுகள் முடிவுக்கு வந்த உச்சிப் படியில் அவன் நின்றான். அகதிப் பெண் கீழே நின்றாள். அவன் இவளைப் பார்க்குமுன் இவள் அவனைப் பார்த்தாள். அவனும் இப்போது பார்த்து விட்டான். அவனுடைய பார்வையில் போலந்திலிருந்து அவன் கொண்டு வந்திருந்த அத்தனை வார்த்தைகளும் இருந்தன. அவளுடைய பார்வையில் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள், இன்னும் இலக்கணத்தில் சொல்லப் பட்ட அத்தனை வகையான சொற்களும் இருந்தன. அவனுக்கு அவை எல்லாம் தேவைப்பட்டன.

அவள் தன் கையிலே வைத்திருந்த தட்டத்தை பச்சை, மஞ்சள், வெள்ளை மார்போடு சேர்த்துப் பிடித்துக் கொண்டாள். சீருடையில் அவள் தேவதை போல காட்சியளித்தாள். இரண்டு இரண்டு படியாக அவன் பாய்ந்து நெருங்கியபோது அவர்களுக்கிடையில் அந்த தட்டம் இடைஞ்சலாக இருந்ததைக் கண்டான். அவள் அதை இறுக்கிப் பிடித்திருந்தாள். அவன் கீழே பார்த்தான். அவள் இரண்டு கைகளாலும் காவிய தட்டத்தில் இன்னும் சில நிமிடங்களில் யாரோ சாப்பிட்டு முடிக்கப் போகும் உணவு வகை இருந்தது. அவள் விதி 27 ஐயும், 32 ஐயும், 13 ஐயும் ஒரே சமயத்தில் முறித்தாள்.

முற்றும் ●

# தேர்தலின் பின்னர் சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளை இணைத்து பரந்த கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க இருக்கிறோம்

## தமிழ்தேசியக் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் மாவை. சேனாதிராஜா

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதி யில் தமிழ் மக்களின் பெரும் சக்தி என்று கருதப்படும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பல்வேறு சவால்களுடன் தேர்தல் போராட்டத்தை எதிர்கொள்கிறது. பேரினவாத அரசாங்கத்தின் தாக்குதல்கள், சூழ்ச்சிகள், தந்திரங்கள் எனப் பல நடவடிக்கைகளை எதிர் கொண்டுவருகிறபோதும்., உள் முரண்பாடுகள், இறுதிநேர தேர்தல் கால வெளியேற்றங்கள், அவைகளினால் ஏற்பட்ட வாதங்கள் எல்லாவற்றையும் எதிர் கொண்டபடி வடக்கு கிழக்கின் - தமிழ் ஈழ மக்களின் ஜன நாயகச் சக்தியாக நிமர்ந்து நிற்கிறது.

இவ்வாறான சூழலில் இயங்கிக் கொண்டிருக்கும் கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை. சேனாதிராஜா அவர்களை தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இறுதி நேரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய வேலைகள் அதற்கு அடுத்த கட்டமாக வரும், எதிர் காலத் திட்டங்கள் என்பன குறித்து சிறிய உரையாடல் ஒன்றை நடத்தினேன்.

***தீபச்செல்வன்:*** இந்தத் தேர்தலில் என்ன மாதிரியான சவால்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர் கொள்ளுகிறது? அவை தமிழ் மக்களின் வாழ்வு போராட்டத்தில் எவ்வகையில் மோதுகின்றன?

***மாவைசேனாதிராஜா:*** நாங்கள் எங்களுடைய தேசிய இனம் என்ற அடையாளத்தை இழப்பதா? சுய நிர்ணய உரிமை என்ற தத்துவத்தை இழப்பதா? என்ற கேள்விகளுடன் இருக்கிறோம் சவாலுடன் இருக்கிறோம். மகிந்த ராஜபக்ஷ அவர்கள் இன்று வரை ஒரே நாடு ஒரே மக்கள் என்று சொல்லுவதன் அர்த்தத்தை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதனுடைய மறுபக்கம் சொல்லுவது என்னவெனில் இந்த நாடு ஒற்றை ஆட்சிக்குள் பௌத்த சிங்கள நாடாக ஆக்கபடும் என்பதுதான் அவருடைய மகிந்த சிந்தனையாக இருக்கின்றது. மகிந்த சிந்தனையை அவருடைய நிகழச்சித் திட்டத்தை அவர் இன்று நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறார். இன்று கிழக்கு மாகாணத்தை தனிமைப்படுத்தி தமிழர்களின் தாயகத்தை தனிமைப்படுத்தி கிழக்கை இன்று இராணுவ மயமாக்கி சிங்கள மயமாக்கி தன்னுடைய பொம்மை ஆட்சி ஒன்றை அங்கு அமைத்திருக்கிறார். அதேபோன்ற நிகழ்ச்சித் திட்டத்தைான் வடக்கிலும் அவர் நிலை நாட்ட இந்தத் தேர்தலை பயன்படுத்துகிறார். அப்படி அவர் எடுக்கின்ற முயற்சிகளில் முதலில் புலிகளைதான் தோற்டித்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டு அந்தப் பிரதேசத்தை இராணுவ மயபடுத்தும் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். தமிழர்களின் நிலங்கள் வர்த்தக ரீதியாக விற்கப்படுகின்றன. எங்களுடைய நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இராணுவக் கட்டமைப்புக்கனளை விரிவடையச் செய்ய சீனா இந்த அரசாங்கத்திற்கு பெரியளவில் உதவி வருகிறது. அதைவிட பொலிஸ் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதன் வாயிலாக பொலிஸ் குடியிருப்புக்களை வடக்கில் குறிப்பாக வன்னியில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதைவிட தமிழர்களின் கலாசார சின்னங்கள் அழிக்கப்பட்டு வருவதையும் நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. பௌத்த கலாசாரத்தை திணிப்பதற்கு முயற்சிப்பதையும் நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. இவைகள்தான் நாங்கள் ராஜபக்ஷ அரசுமீது நாங்கள் குற்றம் சுமத்த காரணமாக இருக்கின்றன. வராற்று புகழ் பாரம்பரியம் மிக்க தமிழ் தேசிய இனத்தினுடைய அடையாாளத்தை அழித்து



விட்டு அவர்களுக்கு உரித்தான சுய நிர்ணய தத்துவத்தை அழித்துவிட்டு அவர்களை ஒரே மக்கள் ஒரே நாடு என்று சொல்ல வைக்க முயற்சி செய்கிறார். அதற்கும் பலர் இணங்கிப் போக தயராக இருக்கிறார்கள். இதிலிருந்து எம்மை மீட்கப் போகிறோமா இல்லையா? என்பதுதான் எமது உள்ள சவால். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமா இல்லையா?

இந்த நிகழ்ச்சித் திட்டத்தை தடுத்தி நிறுத்தி தமிழர்களுடைய தாயகத்தை தமிழர்கள் தங்களை ஆளும் சுய நிர்ணய உரிமையுடைய ஆட்சியை உருவாக்கும் வழியைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம். அல்லது விரைவல் தமிழர்கள் சிங்களவர்களாகவும் பௌத்தர்களாகவும் எங்களுடைய தேசம் பௌத்த சிங்கள தேசமாகவும் இராணுவ அடித்தளத்தை கொண்டு கட்டப்படுவதற்கான வேலைகள் நிறைவேற்றப்படும். இவைகளை தடுத்து நிறுத்த தமிழர்கள் இந்த தேர்தலில் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும். அதுதான் எமது பலம் மிக்க ஜனநாயக சக்தியாக இன்று இருக்கின்றது. அதன் மூலம் கொள்கைப்பற்றையும் இலட்சியப்பற்றையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துவதன் மூலம்தான் மகிந்தராஜபக்ஷவினுடைய மகிந்தசிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தை நாங்கள் முறியடிக்க முடியும்.

மகிந்தவினால் ஊக்கப்படுத்தப்பட்ட உதிரிக் கட்சிகள், பெருமளவு உதவி செய்யப்பட்ட சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றை இறக்கி தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தவும், தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யவும் தான் விரும்பிய பொம்மைகளை உருவாக்கி கிழக்கைப் போன்று வடக்கையும் தான் ஆட்சி செய்ய வேண்டும் என்று தன்னுடைய மகிந்த சிந்தனையை நிவேற்ற வேண்டும், திணிக்கவேண்டும் என்ற நிலைப் பாட்டுக்கு நாங்கள் முடிவு கட்ட வேண்டும். நிராகாக்க வேண்டும். தடுக்க வேண்டும்.

**கேள்வி:** தமிழ் தேசியக் கூட்டமைப்பு அடுத்த கட்டமாக யாருடன் எந்த நிலையிலிருந்து பேச்சுவார்த்தையை நடத்த இருக்கிறது?

**பதில்:** சுயநிர்ணய தத்துவத்தின் அடிப்படையில் எங்களை நாங்களே ஆள விரும்புகின்றோம் என்ற அந்த அடிப்படையில்தான், நாங்கள் சிங்கள தேசத்துடன் பேச்சு வார்த்தை நடத்த ஆயத்தமாக இருக்கின்றோம். விடுதலைப் புலிகளின் போராட்டம் இன்று சர்வதேச ரீதியாகவும் இலங்கையிலும் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. அதிலிருந்து மாறி நாங்கள் ஜனநாக பலத்தை அடையும் பொழுது எங்கள் ஜனநாயக பலத்தை அழிக்க அரசாங்கம் முனைகிறது. விடுதலைப் புலகளை நாங்கள் அழித்து விட்டோம் தமிழர்களின் குரல் இனி இல்லை தமிழர்களின் உரிமைக்குரல் இல்லை என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் தோற்றுவிக்கப் பார்க்கிறது. அதை முறியடித்து அரசாங்கத்தை நாங்கள் எதிர் கொண்டு பேச்சு நடத்த வேண்டும்.

தமிழ் மக்கள் இதனை நிராகரித்து ராஜபக்ஷவினுடைய மகிந்த சிந்தனையை நிராகரித்து தமிழ் மக்கள் தங்களினுடைய தனித்துவத்தையும் தங்களுடைய தன்னாட்சித் தத்துவத்தையும் தங்கள் தாயக சுயநிர்ணய அடிப்படைக் கோட்பாட்டை நிலை நாட்டுவது ஒன்றுதான் அவர்களது இலக்கு என்பதை இந்தத் தேர்தலில் நிருப்பிக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் நாங்கள் பேச வேண்டி உள்ளது. அல்லது நாங்கள் தமிழர்கள் என்ற அடையாளத்தை இழந்தவர்களாக தமிழர்களினுடைய தாயகத்தை இழந்தவர்களாக சுயநிர்ணய கோட்பாட்டை இழந்தவர்களாக தன்னாட்சி தத்துவங்களையும் இழந்தவர்களாக மாற்றப்படும் சூழல் உருவாகும் என்பதினால் ஒரு வாக்கையும் சிறதவிடாமல் உதிரிகளையும், சுயேச்சைகளையும் நிராகரித்து விட்டு எங்களுக்கு வாக்களியுங்கள்., தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துங்கள் என்று கேட்கிறோம். அதன் பின்னர் தமிழ் மக்களுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பலமிக்க சக்தியாக அரசுடனோ சர்வதேசத்துடனோ பேச்சு வார்த்தை ஒன்றை நடத்த முடியும்.

**கேள்வி:** நீங்கள் முன் வைத்திருக்கும் தீர்வு ஒஸ்லோ உடன்படிக்கையயின் அடிப்படையிலா தயாரிக்கப்பட்டதா? தீர்வுத் திட்டத்தினுடைய அடைவு எதை நோக்கியதாக இருக்கிறது?

**பதில்:** ஒஸ்லோ உடன்படிக்கை என்பது ஒரு தீர்வு அல்ல. அது தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கான ஆரம்பமான வழிகாட்டிதான். அது முடிந்த முடிபல்ல. தமிழ் மக்களிடம்தான் இறமை இருக்கிறது. அவர்களிடம்தான் சுயநிர்ணய உரிமை இருக்கிறது. அவர்கள் எதிர்கால அரசியல் தீவுத் திட்டத்தை முடிவு செய்வார்கள். அது பேச்சு வார்த்தையின் பொழுது முடிவு எடுக்கப்படும். அப்படி எடுக்கப்படும் முடிவானது மீண்டும் தமிழ் மக்களிடம் முன்வைக்கப்படபடும். நாங்கள் 1976 ஆம் ஆண்டில் ஒரு ஆணையைப் பெற்றிருக்கிறோம். அது வட்டுக் கோட்டை பிரகடனத்திற்காக முன் வைக்கப்பட்டிருந்தது. அந்த ஆனை 77இல் பெறப்பட்டது. ஒஸ்லோ உடன்படிக்கை அடிப்படையில் தீர்வுத்திட்டம் வருமாக இருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டால் அதை மக்கள் முன்வைப்போம்.

இதில் இரண்டு தேசம் என்று சொல்லிக் கொண்டு நாங்கள் இதற்குள் ஒரு மறைவை வைக்க விரும்பவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் இரண்டு தேசம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதை இறமை உள்ள மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். சில வேளை இரண்டு தனித்தனித் தேசங்களாகவும் இருக்கலாம். அதற்கான சாத்தியங்களை நிராகரிக்கவில்லை. அதனை மக்கள் தீர்மானிப்பார்கள். இறமை மக்களிடம்தான் இருக்கிறது. அது தேசத்திடம் அல்ல. மக்கள்தான்

அரசாங்கத்திற்கு இறமையை வழங்கலாம். தேசத்திற்கு வழங்கலாம். மக்களின் இறமையை அரசாங்கத்திடம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. மக்களிடம்தான் இறமை இருக்கிறது என்று நாங்கள் சொல்லுகிறோம். நாங்கள் அரசியல் தீர்வுக்கான அடிப்படையைத்ததான் தோற்றுவித்திருக்கிறோம்.

**கேள்வி:** *தேர்தலின் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன மாதிரியான வேலைகளை செய்யப் போகிறது? அரசாங்கத்தை அது என்ன வகையில் எதிர்கொள்ளப்போகிறது?*

**பதில்:** தமிழ் தேசியக் கூட்மைப்பு தன் எதிர்கால திட்டத்தை தெளிவாக தேர்தல் அறிக்கையில் வரைந்திருக்கிறது. உடனடியாக எமது மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு தேவைப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டு ஒரு இடைக்கால தன்னர்டசி அதிகார சபைக்கான அவசியம் இருந்தது. 2004இல் இருந்த நிலமையைவிட பல மடங்கு மிக மோசமான நிலையில் இப்பொழு மக்கள் இருக்கிறார்கள். அதனையடுத்து சர்வதேச நாடுகளின் உதிவிகளின் மூலம் எமது மக்களின் மீள் குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டியிருக்கின்றது.

இதற்கான பேச்சுவார்த்தைகளை ஏற்கனவே ஐரோப்பிய யூனியன் அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளுடன் நடத்தியிருக்கிறோம். தேர்தலின் பின்னர் மக்களின் ஆதரவைப் பெற்ற வலுவான கட்சியாக இருந்து கொண்டு அரசாங்கத்துடனும் சர்வதேசத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகத்தில் இந்தப் புனழ்வாழ்வு புனரமைப்பைப செய்ய ஒரு கட்டமைப்பை உரு வாக்க திட்டமிட்டிருக்கிறோம். தமிழ் மக்களின் பெரும்பான்மைத்து வத்தையும் முஸ்லீம்களின் பெரும்பான்மைத்துவத்தையும் சொந்த மண்ணிலேயே சிறுபான்மைகளாக மாற்றுவதற்கான திட்டத்தை தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

> ஒஸ்லோ உடன்படிக்கை என்பது ஒரு தீர்வு அல்ல. அது தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கான ஆரம்பமான வழிகாட்டிதான். அது முடிந்த முடிபல்ல. தமிழ் மக்கள்தான் அவர்களின் எதிர்கால அரசியல் தீவுத் திட்டத்தை முடிவு செய்வார்கள்.

அடுத்த கட்டமாக எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கிற முஸ்லீம் மக்களினுடைய பிரதிநிதித்துவத்தை, மலையக மக்களினுடைய பிரதிநிதித்துவத்தை உள்வாங்கி ஒரு பரந்த கூட்டமைப்பை உருவாக்கி அந்தக் கூட்டமைப்பு ஊடாக அரசிடம் பேரம் பேசவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம். அதன் வாயிலாக சிறுபான்மை கட்சிகளின் வலு இல்லாமல் அரசாங்கம் இயங்க முடியது என்ற நிலயை உருவாக்குவோம். இரண்டு மாதங்களில் இந்தக் கூட்டமைப்புகள் ஊடாக பெரிய மகாநாடு ஒன்றை நாங்கள் நடத்த இருக்கிறோம். தமிழ் தேசியக் கூட்டமைபின் தேர்தல் பிரேரணைகளுடன் பரந்த கூட்டமைப்பு வாயிலாக பெறபபடும் பிரேரணைகள் என்பவற்றுக்கு அங்கு வடிவம் கொடுக்கப்படும். அப்படி வடிவம் கொடுக்கப்படும் பிரேரணைகளை அரசாங்கத்தின் முன்பாகவும் சர்வதேசத்தின் முன்பாகவும் வைப்போம். அப்படி வைக்கும் பொழுது அது பற்றி அரசாங்கத்துடன் சர்வதேச சமூகம் பேச வேண்டிய நிலை ஏற்படும்.

அரசாங்கம்மீதான அழுத்தங்கள் இப்பொழுதே ஆரம்பித்துவிட்டன. அரசின் போர்க்குற்றங்களுக்காக அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. அரசாங்கத்திற்கு எதிராக பொருளாதார ரீதியான தடைகள் எழுந்து வருகின்றன. பரந்து பட்ட கூட்டமைப்பு டன் பேச மகிந்தராஜபக்ஷ தவறுவாராக இருந்தால் மக்களை ஜனநாயக வழிகளில் அணிதிரட்டி சாத்வீக போராட்டங்களை முன்னெடுப்பதற்கான திட்டத்தை மகாநாட்டிலே அறிவிப்போம். எனவே உலகின் கவனத்தை எங்கள் பக்கம் ஈர்க்கவும் அதன் மூலம் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தி தீர்வை பெறவும் நடவடிக்கைகளை செய்வோம்.

நேர்காணல் : தீபச்செல்வன்

# மகிந்தா திட்டினார்



நாங்கள் சிங்களம். நானும் சிங்களவன். அதனால் கேட்டுக்கொண்டு இரு, தமிழா. தலைதெறித்து நடந்துகொள்ளாமல்....

கேட்டுக்கொண்டு இருக்க முடியாவிட்டால் போ என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சா 01.04.10 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழ் மக்களைப் பார்த்து பகிரங்கமாகத் திட்டியுள்ளார். யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் 01.04.10 நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி “டெலிபுறம்டர்” இயந்திரத்தைப் பார்த்து தமிழை உச்சரித்து வாசித்துக் கொண்டிருந்த போது, அவரது தமிழைப் புரிந்துகொள்ள முடியாத யாழ் மக்கள், கூச்சலிட்டுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த ஜனாதிபதி மகிந்த தமிழர்களைப் பார்த்து திட்டியுள்ளார்.

ஜனாதிபதி சிங்களத்தில் திட்டியபோது அதனையும் புரிந்துகொள்ளாத தமிழ் மக்கள் தொடர்ந்தும் கூச்சலிட்டதால், மீண்டும் நான் நிறுத்த மாட்டேன். நீங்கள் சத்தம் போடப் போட இன்னும் இன்னும் நான் தமிழில் பேசத்தான் போகிறேன் என வீராப்பாகக் கூச்சலிட்டுள்ளார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாளர் ஒருவர் ஒலிவாங்கியை எடுத்து மக்களை அமைதிப்படுத்த முயற்சித்துள்ளார். மகிந்த ராஜபக்சா இவ்வாறு தமிழ் மக்களை இன ரீதியாகத் திட்டிக் கொண்டிருந்த போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை அருகில் அமர்ந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்துள்ளார். இந்தத் தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றுவதற்கு முன்னர் நாகவிகாரைக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்ட ஜனாதிபதி அதன் பின்னர் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்றிருந்தார்.

# சுதந்திரப் போராட்ட பாடலுக்கு தடை

அங்கு ஆளுகின்ற ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் இளைஞரணித் தலைவரான “ஜூலியஸ் மலேமா” அவர்கள் “வெள்ளையரைக் கொல்ல வேண்டும்” என்று கூறுகின்ற இந்தப் பாடலை பொது நிகழ்வுகளில் பாடுவது அங்கு வழமை. அவர் அங்கு ஒரு பெரும் செல்வாக்கு மிக்க தலைவரும் கூட. இருந்த போதிலும், வன்செயலைத்தூண்டும் இத்தகைய பாடல்களை அவர் பாடக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

இன வெறுப்பைத்தூண்டும் அனைத்தையும் தென்னாப்பிரிக்க அரசியலமைப்பு தடை செய்கிறது. அதிபர் ஜேக்கப் சூமா கூட அண்மைக் காலம் வரை'' எனது இயந்திர துப்பாக்கியை எடுங்கள்'' என்ற பாடலை மிகவும் விருப்பத்துடன் மேடைகளில் பாடுவார். இந்தப்பாடல் தடை செய்யப்பட்டமை, தமது வரலாற்றின் பாதியை தடை செய்யும் ஒரு செயல் என்று ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் கூறுகிறது. அதனை எதிர்த்துப் போராடப் போவதாகவும் அது கூறுகிறது.

ஆனால், இந்த பாடல்கள் தமது உரிமையை மீறுகின்றன என்று அங்கிருக்கும் வெள்ளையின மக்கள் கருதுகிறார்கள். நிறவெறிக் கொள்கை முடிவுக்கு வந்தது முதல் இன்று வரை சுமார் மூவாயிரம் வெள்ளையின விவசாயிகள் கொல்லப்படுவதையும், இத்தகைய பாடல்கள்தான் தூண்டின என்பதும் அவர்களது குற்றச்சாட்டு. அங்கு ஒரு கலாச்சார மோதல் தோன்றியுள்ளது என்பதை இந்த விவகாரம் தெளிவுபடுத்துகிறது. இன ஐக்கியம் தகரும் நிலை உருவாகியுள்ளதையும் இது கோடிட்டுக் காட்டுகின்றது.

# 'கெடுபிடிகளுக்கு மத்தியில் போட்டியிட்டோம்" இரா.சம்பந்தன் செவ்வி



த.தே.கூ வேட்பாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கும், கெடுபிடிகளுக்கும் மத்தியிலேயே நாடாளுமன்றத் தேர்தலை எதிர் கொள்ள நேரிட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் காரணமாக பெறப்பட்ட வெற்றியை இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் பெறமுடியாது போயுள்ளது, எனவே இத் தேர்தலில் பெற்ற ஆசனங்கள் தாம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான பலத்தைக் காட்டுவதாகக் கொள்ளலாமா என்று கேட்டதற்கு பதிலளித்த அவர், அதனை முற்றுமுழுதாக மறுக்கவில்லையெனக் கூறினார்.

சிறு தமிழ் அரசியல் குழுக்கள் எதனையும் சாதிக்காத போதிலும் தமது கட்சியின் வெற்றியை பாதிக்கச் செய்திருக்கின்றன என்றும் அவர் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட பிளவுகளைத் தவிர்க்கவும் ஒத்த கருத்துள்ள கட்சிளுடன் சமரசத்தை எட்டுவதற்கும் எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் ஏற்கப்படமுடியாத கோரிக்கைகள் காரணமாகவே தோல்விய டைந்ததாக இரா.சம்பந்தன் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளையும் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் வாடும் மக்களின் துயரங்களையும் தீர்க்கும் விதத்தில் தமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா. சம்பந்தன் கூறினார். புலம்பெயர் மக்களின் பலமும் ஆதரவும் தமக்கு அவசியமாக உள்ளதாகவும் இரு தரப்புக்கு இடையிலும் இடைவெளி ஏற்படுவதை விரும்பவில்லையெனவும் சம்பந்தன் தமிழோசையிடம் தெரிவித்தார்.

# கூட்டமைப்பு பழைய பாணியிலான அரசியலையே தொடர்கிறது - புதிய ஜனநாயகக் கட்சிப் பொதுச் செயலாளர் செந்தில்வேல் குற்றச்சாட்டு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரை அது மீண்டும் பழைய பாணியிலான மேட்டுக்குடி அரசியலையே தொடர்கிறது. இதற்காக அது தென்னிலங்கையின் சிறிய விசயங்களைக்கூட பெரிதுபடுத்தி இனவாதத்தை வளர்க்கிற, பகையை வளர்க்கிற அரசியலை முதன்மைப் படுத்துகிறது. இது நிலைமைகளை மீண்டும் பின்னோக்கிக் கொண்டு செல்லப் போகிறது. அபாயங்களை உருவாக்கப் போகிறது என புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேட்சைக்குழு சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுபவருமான சி.கா.செந்தில்வேல் பொங்கு தமிழ் இணையத்தளத்துக்குத் தெரிவித்துள்ளார்.

முப்பது ஆண்டுகால போருக்குப் பின்னர் நெருக்கடியான - அரசியல் வனாந்திரமான - சூழலில் வந்திருக்கும் இந்தத் தேர்தலை மீண்டும் இனவாத அரசியலுக்கே பலியிடும் போக்கே வடக்குக், கிழக்கில் நிலவுகிறது. இந்தப் போக்குக்கு மக்கள் இடமளிக்கக் கூடாது. போருக்குப் பின்னர் வந்திருக்கின்ற தேர்தல் என்பதால் இந்தத் தேர்தல் முக்கியமானதாக இருக்கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கோரியிருந்தோம். வடக்கு, கிழக்கில் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைந்திருந்ததை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் போட்டியிடத் தீர்மானித்ததற்கான காரணம் இவ்வளவு அழிவுகளைத் தந்த போருக்குப் பின்னரும் மக்கள் மீண்டும் அழிவைத் தரும் இனவாத அரசியலை நோக்கித் தள்ளப்படுவதைத் தடுக்க வேண்டும். பதிலாக ஒரு புதிய மாற்று அரசியலை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலும்தான்.



இந்தத் தேர்தலில் மக்கள் பொதுவாகவே வாக்களிக்கும் ஆர்வம் குறைந்த நிலையிலேயே இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் கடந்த காலத்தில் முன்நிறுத்தப்பட்ட அரசியலுக்காக தங்களை முழுமையாக ஈடுபடுத்தி உழைத்தும், இன்று அவை எல்லாம் பயனற்றுப் போன நிலையில் மீண்டும் அப்படியொரு அரசியலுக்குப் போக வேண்டுமா என்ற கேள்வி அவர்களுடைய மனதில் இருப்பதே.

இந்தத் தேர்தலில் பொதுவாக இரண்டு போக்குகள் நிலவுகின்றன. தமிழ்த் தேசிய வாதம் என்ற அரசியல் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்கும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தின் நிகழ்ச்சி நிரலுக்கும் மக்களைத் தயார்ப்படுத்தி வருகிறது. அரசாங்கத் தரப்பு அல்லது அரசாங்கத்துக்கு ஆதரவான தரப்புகளின் அரசியல் மக்களை நிரந்தர அடிமைகளாக உள்நாட்டிலேயே வைத்திருக்க முயற்சிக்கிறது. நாங்கள் சொல்கிறோம் மக்களுக்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கும் ஒரு மாற்று அரசியலே இன்று தேவை என்று.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரை அது மீண்டும் பழைய பாணியிலான மேட்டுக்குடி அரசியலையே தொடர்கிறது. இதற்காக அது தென்னிலங்கையின் சிறிய விசயங்களைக் கூட பெரிதுபடுத்தி இனவாதத்தை வளர்க்கிற, பகையை வளர்க்கிற அரசியலை முதன்மைப்படுத்துகிறது. இது நிலைமைகளை மீண்டும் பின்னோக்கிக் கொண்டு செல்லப் போகிறது. அபாயங்களை உருவாக்கப் போகிறது. மக்களின் அரசியல் தீர்வைப் பற்றிப் பேசாமலே அபிவிருத்தி பற்றிப் பேசி அவர்களை நிரந்தர அடிமைகளாக வைத்திருக்கப் பார்க்கிறது அரச சார்பு அரசியல். இதற்காக அரசாங்கத் தரப்பில் பெருமளவு பணம் செலவழிக்கப்படுகிறது.

பொதுவாக தமிழ் நாட்டுப் பாணியிலான பணத்தை வாரியிறைத்து வாக்கு வேட்டையைத் தேடும் அரசியல் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது இவ்வளவு இழப்புகள் போராட்டங்கள் நடந்த பிறகு மக்கள் இப்படிச் சில்லறைத்தனமாக பயன்படுத்தப்படுவதை பார்க்கும் போது பெரும் வேதனையாக உள்ளது. இதில் தமிழ்த் தேசிய சக்திகளில் இருந்து அரசாங்க சார்புக் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் உட்படச் சகலதும் உட்படும்.

> "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அது மீண்டும் பழைய பாணியிலான மேட்டுக்குடி அரசியலையே தொடர்கிறது. இதற்காக அது தென்னிலங்கையின் சிறிய விசயங்களைக் கூட பெரிதுபடுத்தி இனவாதத்தை வளர்க்கிற, பகையை வளர்க்கிற அரசியலை முதன்மைப்படுத்துகிறது."

மக்களிடம் நாங்கள் நேரில் சென்று இதைப்பற்றிக் கதைத்து விளங்கப் படுத்தும் போது அவர்கள் புதிய அரசியலுக்கான தேவை ஒன்று இருப்பதை விளங்கிக் கொள்கிறார்கள். எங்களின் தொடர்ச்சியான வேலைத்திட்டங்கள் நடைபெற்று வந்த இடங்களில் இருக்கின்ற மக்களுக்கு தெளிவிருக்கிறது. ஆனால் பொதுவாகத் தமிழ் ஊடகங்கள் மக்களைச் சிந்திக்க விடாமல் வன்முறையான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன.

எனவே மக்கள் முழுமையான விழிப்போடிருந்து இந்தத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். அவர்கள் முதலில் இந்தக் கட்சிகளிடம் இருந்து, இந்த மக்கள் விரோத அரசியலில் இருந்து விடுதலை பெற வேண்டும். இதற்கான ஒரு மாற்று அரசியலையே நாங்கள் கொண்டுள்ளோம் என செந்தில்வேல் பொங்கு தமிழுக்கு தெரிவித்துள்ளார்




# குரு சீடன்

-திருமகள்-

# இரண்டு இருக்கைகளுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குலைத்தவர்கள் கூண்டோடு கயிலாசம்!

***சீடன்*** - ஆடிய ஆட்டமென்ன பாடிய பாட்டென்ன? திட்டிய வார்த்தை என்ன? திரட்டிய நிதி என்ன? கூடுவிட்டு ஆவிபோனால் கூடவே வருவதென்ன. ...?

***குரு*** - நாடு கிடக்கிற நிலையிலே இப்படியான பாட்டுக்கு இப்பேது என்ன அவசியம்?

***சீடன்*** - அவசியம் இருக்கிறது குருவே? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு வெளியே வந்து திருமலையில் சம்பந்தனைத் தேற்கடிப்போம் யாழ்ப்பாணத்தில் சேனாதிராசாவையும் சுரேஷ் பிரேமச்சந்திரனையும் தோற்கடிப்போம் என ஊழையிட்டவர்கள் கூண்டோடு கயிலாசம் போய்விட்டார்கள்! குறிப்பாகச் செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன் ஆடிய ஆட்டம் சொல்லி மாளாது!

***குரு*** - கொஞ்சம் விபரமாகச் சொல்?

***சீடன்*** - தமிழ்த் தேசியக் கூட்டமை உடைத்ததன் மூலம் தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைத்தவர்களுக்கு தமிழ்வாக்காளர்கள் தக்க தண்டனை வழங்கியுள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் சரி, திருமலையில் சரி தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி சார்பாக போட்டியிட்ட 19 வேட்பாளர்களும் தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள்! கட்டுக்காசும் பறிபோய் விட்டது!

***குரு*** - நம்ப முடியவில்லையே! சிறிஆர் வானொலி நாளும் பொழுதும் செய்த பரப்புரையைப் பார்த்தால் யாழ்ப்பாணம், திருமலை இரண்டிலும் த.தே.மக்கள் முன்னணி பெரிய வெற்றிவாகை சூடப்போகுது என்ற தோற்றம் இருந்ததே?

***சீடன்*** - அப்படியொரு மாயை அந்த வானொலி உருவாக்கியது. தங்களோடு ஒத்தூதக் கூடிய ஆய்வாளர்களையும் அரசியல்வாதிகளையும் காற்றலைக்கு அழைத்து வந்து பேச்சுக் கச்சேரி வைத்தது. ஆய்வாளர்கள் தங்கள் பங்குக்கு துரும்பைத் தூணாக்கிக் காட்டினார்கள். நோஞ்சான்களைப் பயில்வான்களாக சித்தரித்துக் காட்டினார்கள். ஆய்வாளர்கள் நிலவன், துரைரத்தினம், வரதாசா போன்றோர் மட்டும் சிறிஆர் வானொலி அறிவிப்பாளர்கள் சக்தி பரமலிங்கம், பொன்னையா விவேகானந்தன் விரித்த வலையில் விழ மறுத்தார்கள். அப்படி விழ மறுத்தவர்கள் ஓரங்கட்டப்பட்டார்கள்!

***குரு*** - எப்படித்தான் உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது என்பது சரியாகத்தான் இருக்கிறது!

***சீடன்*** - அதைவிட சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடு வந்து சேராது என்பார்களே? அந்தப் பழமொழிதான் இன்னும் பொருத்தமாக இருக்கும்.
குரு - சரி தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கிறது?

***சீடன்*** - தேர்தல் முடிவுகள் இன்னும் முழுதாக வந்து சேரவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சி 5 இருக்கைகளும், ஆளும் அய்க்கிய மக்கள் சுதந்திர முன்னணி 3 இடங்களையும், அய்க்கிய தேசியக் கட்சி ஒரு இடத்தையும் கைப்பற்றியள்ளது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. உடுப்பிட்டி, பருத்தித்துறை தொகுதிகளில் மட்டும் சொற்ப வாக்குகளைப் பெற்று முக்கித்தக்கி மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது!

***குரு*** - திருமலையில் சம்பந்தரைத் தோற்கடித்து விட்டுத்தான் மறுவேலை என்று கொக்கரித்தார்களே? அங்கே என்ன நடந்தது?

***சீடன்*** - திருமலையில் சம்பந்தரைத் தோற்கடிப்பது என்பது கிழக்கே உதிக்கும் ஞாயிறு மேற்கே உதித்தால்தான் சாத்தியமாகும்! சம்பந்தனது வெற்றிபற்றி தொடக்கம் முதலே யாருக்கும் அய்யுறவு இருக்கவில்லை. முதலாவதாக வந்து மேலதிக இருக்கையையும் கைப்பற்ற முடியுமா என்பதுதான் கேள்விக் குறியாக இருந்தது. ஆளும் கட்சியைச் சேர்ந்த வெளிமாவட்ட சிங்களக் காடையர்கள் அங்கு தமிழ்மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதை துப்பாக்கிகளைக் காட்டிப் பயமுறுத்தித் தடுத்துவிட்டார்கள்! அதனால் வெறுமனே 2000 வாக்கில் ஒரு இருக்கையை இழக்க வேண்டிவந்து விட்டது.

***குரு*** - சம்பந்தருக்கு பாவ மன்னிப்புக் கொடுத்துவிட்டதாக உயிருக்குப் பயந்து கனடாவில் அரசியல் புகலிடம் கேட்டுள்ள ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னாரே?

***சீடன்*** - சம்பந்தனுக்குப் பாவமன்னிப்புக் கொடுக்க அவர் என்ன யேசுநாதரா? உண்மையைச் சொன்னால் அவர் ஒரு அரசியல் கோமாளி. அவரை யாரும் பொருட்படுத்துவதில்லை. நாட்டில் மேடையில் பேசிப் பேசி தொண்டை வரண்டு களைத்துப் போனவர். இங்கு வந்து சிறிஆர் வானொலியில் கத்திக் கத்தி தொண்டை வரண்டு போனவர்.

***குரு*** - 2004 இல் ஒரு இலட்சம் விருப்பு வாக்குகள் பெற்ற கஜேந்திரன் என்னவானார்? வெறுமனே 49,000 விருப்பு வாக்குகள் பெற்ற சம்பந்தர் எப்படி கஜேந்திரனுக்கு நியமனம் கொடுக்க மறுத்தார் என அவரை இங்கு பலர் வறுத்தெடுத்தார்களே?

***சீடன்*** - கஜேந்திரனுக்கு கிடைத்த வாக்குகள் வி.புலிப் போராளிகள் வீடு விடாகச் சென்று சேகரித்த வாக்குகள். அது மட்டுமல்ல சஜேந்திரனுக்குக் கிடைத்த விருப்பு வாக்குகளை சம்பந்தருக்குக் கிடைத்த விருப்பு வாக்குகளோடு ஒப்பிடுவது முட்டாள்த்தனம். திருமலை மாவட்டத்தில் விழுந்த மொத்த வாக்குகள் 191,657 ஆகும். அதே சமயம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விழுந்த மொத்த வாக்குகள் 284,026 ஆகும்.

***குரு*** - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி இப்படிப் படுதோல்வி அடைந்ததற்கு என்ன காரணம்?

***சீடன்*** - இதென்ன கேள்வி குருவே! அவர்களிடம் மூலோபாயத் திட்டம் (Strategic Planning) இருக்கவில்லை. கனடாவில் அந்த மூலோபாய திட்டத்தை கையில் வைத்திருக்கும் ஒரு அரசியல் ஞானி இருக்கிறார். என்ன காரணமாகவோ அந்த ஞானியிடம் அந்த மூலோபாயத் திட்டத்தைக் கேட்டுப் பெற்று தேர்தலைச் சந்திக்க அந்த இரண்டு அரசியல் கற்றுக் குட்டிக்களான கஜேந்திரனும் கஜேந்திரகுமாரும் தவறிவிட்டார்கள்!

***குரு*** - 2004 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது இன்று யாழ்ப்பாணம், திருமலை, வவுனியா எங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறைந்த வாக்குகளைப் பெற்றிருக்கிறது, குறைந்த இருக்கைகளைப் பெற்றிருக்கிறது என்று அரசியல் ஞானி சொல்கிறாரே?

***சீடன்*** - 2004 ஆம் ஆண்டில் தமிழ்மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தார்கள். இன்று 400,000 இலட்சம் மக்கள் முகாம்களில் அல்லது நலன்புரி சங்கங்களில் இரக்கிறார்கள். இந்த அடிப்படை உண்மையை இந்த அரசியல் ஞானி கணக்கில் எடுக்க வசதியாக மறந்து விட்டார்.

***குரு*** - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா கோடி கோடியாக பணம் கொடுத்தது என்று இங்குள்ள ஓர் ஆய்வாளர் சொன்னாரே?

***சீடன்*** - இந்தியா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கோடி கோடியாக கொடுத்தால் அது நல்லதுதானே? அது பலவீனத்தை அல்ல தேசியக் கூட்டமைப்பின் பலத்தைக் காட்டுகிறது என்றுதானே அறிவுடையோர் எண்ணுவர்.

***குரு*** - கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நினைக்கத்தான் பரிதாபமாக இருக்கிறது. சம்பந்தனுக்கு சவால் விடப் போய் உள்ளதும் கெட்டதடா கொள்ளிக் கண்ணா என்றது போலக் கட்டுககாசையும் இழந்து வெறுங்கையோடு கொழும்பு திரும்பியுள்ளார்.

***சீடன்*** - அவர் தோற்றது தனிப்பட்ட முறையில் எனக்குக் கவலை. உலகத்தமிழர், தமிழ்நெட், பிரித்தானிய தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை போன்றவை அவரைப் பப்பாசி மரத்தில் ஏற்றிச் சறுக்கி விழ வைத்துவிட்டார்கள். நம்ப வைத்துக் கழுத்தை அறுத்துவிட்டார்கள்!

***குரு*** - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இனித்தான் பொறுப்பு அதிகம். குறுக்குச்சால் ஓட்டுபவர்கள் தொல்லை இனி இருக்காது. எனவே ஒற்றுமையுடன் அவர்கள் இனி அரசியல் சதுரங்கத்தில் காய் நகர்த்தலாம். அதற்கு முதல் வாழ்வாதரங்களை இழந்து முகாம்களில் முடங்கிக் கிடக்கும் எமது மக்களயும் விடுவிக்க நாடாளுமன்றத்துக்கு உள்ளும் வெளியும் பாரிய போராட்டங்களை நடத்த வேண்டும்.

***சீடன்*** - அதுதான் குருவே அடியேன் விருப்பமும்!

***குரு*** - பிந்தி வந்த செய்தி ஏதாவது உண்டா?

***சீடன்*** - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மொத்தம் 14 இருக்கைகள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாணம் 5, திருமலை 1, மட்டக்களப்பு 3, வன்னி 3, அம்பாரை 1, தேசியப் பட்டியல் 1.

✸

# தென் சூடான்: பிறக்கப்போகும் புதிய தேசம்

ஏப்ரல் 11ஆம் நாள் சூடானில் அரச தலைவர் மற்றும் நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறவுள்ளது. அரை நூற்றாண்டுக்கு மேலான உள்நாட்டு இன முரண்பாட்டு சிக்கல்களுக்குள் மூழ்கியிருந்த சூடான் நாட்டில் 1986 ஆம் ஆண்டு இறுதியாக தேர்தல் நடைபெற்றது. எனவே இது 24 ஆண்டுகளுக்குப் பின் நடைபெறவுள்ள தேர்தல் என்பதால் அனைத்துலக கவனத்தை ஈர்த்துள்ளது.

அதுமட்டுமல்லாது தென் சூடானுடன் இடைக்காலச் சமாதானத் தீர்வு எட்டப்பட்ட பின்புலத்திலும், தென் சூடான் பிரிந்து தனிநாடாக உருவாகும் வாய்ப்பு நிலவுகின்ற புறநிலையிலும் இத்தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டு எட்டப்பட்ட சமாதானத் தீர்வுத்திட்டத்திற்கு அமைய, தென் சூடான் பிரிந்து சென்று தனிநாட்டினை அமைப்பதா அல்லது 'ஒன்றுபட்ட சூடான்' என்ற இறுதித்தீர்வை எட்டுவதா என்பதைத் தீர்மானிக்கும் மக்கள் கருத்து வாக்கெடுப்பு அடுத்த ஆண்டு ஜனவரியில் நடாத்தப்படவுள்ளது.

சமாதான உடன்படிக்கை: 2005ஆம் ஆண்டு சூடான் அரசுக்கும் சூடான் மக்கள் விடுதலை அமைப்பிற்குமிடையில் சமாதான உடன்படிக்கையினை (Comprehensive Peace Agreement, CPA) எட்ட முடிந்தது. கென்ய தலைநகர் நைரோபியில் 2005ஆம் ஆண்டு ஜனவரியில் இருதரப்பிற்குமிடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானது. உடன்படிக்கை எட்டப்படுவதற்கு முன்னர் ஐந்தாண்டு காலம் கென்யாவிலும் நைஜீரியாவிலும் பல கட்டப் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு, கடினமான பல கட்டங்களைத் தாண்டியே சமாதான உடன்படிக்கையை எட்ட முடிந்தது. அதிகாரப்பரவலாக்கல், வளப்பங்கீடு, பாதுகாப்பு சார்ந்த விவகாரங்களுடன், ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துதல் தொடர்பான விபரங்களும் உடன்படிக்கையின் உள்ளடக்கங்களாகும்.

## இடைக்கால தன்னாட்சி நிர்வாகம்

சமாதானத் தீர்வுக்கு அமைய, சூடான் மக்கள் விடுதலை அமைப்பினை அரசாங்கத்துடன் இணைத்து ஒரு தேசிய கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டது. இது ஆறு ஆண்டுகால ஆயுளைக் கொண்ட ஒரு இடைக்கால ஒழுங்காகும். இந்த இடைக்கால தன்னாட்சி நிர்வாகம் ஐந்து ஆண்டுகளைக் கடந்து விட்டது. ஆறு ஆண்டுகளின் பின்னர் தென்-சூடான் மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடாத்தப்படும். அவ்வாக்கெடுப்பின் மூலம் தென்- சூடான் மக்கள் பிரிந்து சென்று தனியரசை அமைப்பதா..? அல்லது இணைந்து வாழ்வதா..? என்ற முடிவு எட்டப்படும் என்பதே உடன்படிக்கையின் முக்கிய இணக்கப்பாடாக இருக்கின்றது. அதற்கமையவே அடுத்த ஆண்டு பிரிந்து செல்வது தொடர்பான வாக்கெடுப்பு தென்சூடான் மக்கள் மத்தியில் நடாத்தப்படவுள்ளது.

சமாதான உடன்படிக்கைக்கமைவான இடைக்கால அரச ஒழுங்கு அமைக்கப்பட்டு, சூடானின் துணை அரசுத் தலைவராக சூடான் விடுதலை அமைப்பின் தலைவரான ஜோன் கராங் 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொறுப்பேற்றார். பொறுப்பேற்ற 3 வாரங்களில் அவர் பயணம் செய்த உலங்குவானூர்தி சூடான்- உகண்டா எல்லையில் விபத்துக்குள்ளாகி ஜோன் கராங் உயிரிழக்க நேரிட்டது. இந்த விபத்து சூடான் அரசின் சதி என்ற பேச்சு ஆரம்பத்தில் வலுவாக இருந்தது. ஜோன் கராங்கின் மறைவை அடுத்து சூடான் விடுதலை அமைப்பின் துணைத் தலைவரான சல்வா கீர் (Salva Kiir) சூடானின் துணை அரசுத் தலைவராக பொறுப்பேற்றார்.



கிட்டத்தட்ட இதே சமகாலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள், இடைக்கால தன்னாட்சி அதிகார அவை (Interim Self Governing Authority) தீர்வுத் திட்டத்தினை ரணில் அரசாங்கத்திடம் கையளித்தனர். அனைத்துலக சமூகத்தினால் வரவேற்கப்பட்ட தமிழர் தரப்பின் அத்தீர்வுத்திட்டம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட சிறிலங்காவின் முன்நாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்காவினால் நிராகரிக்கப்பட்டது.

விடுதலைப் போராட்டங்கள் ஆதரிக்கப்படுவதற்கும், எதிர்க்கப்படுவதற்கும், அழிக்கப்படுவதற்கும் வல்லரசுகளின் நலன்சார் மூலோபாயங்களே மூலமாக உள்ளன. பொருளாதார நலனே தென் சூடான் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் கறமிறங்கியமைக்கான முதன்மைக் காரணியாகும். எண்ணெய் வளம் மிக்க சூடானில் தமது அதிகாரத்தை நிலை நிறுத்துவதே வல்லரசுகளின் மூலோ பாய அடிப்படையாகும்.

## இடைக்கால அரசு - நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்

உடன்படிக்கையின் படி சூடான் தேசிய கொங்கிரஸ் கட்சி, சூடான் விடுதலை அமைப்பு மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டது. உடன்படிக்கைக்கமைவான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்குழுக்களும் அமைக்கப்பட்டன. ஆனால் முக்கிய இணக்கப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தீர்வுத்திட்டத்திற்கு அமைய ஆறு மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய விவகாரங்கள் ஐந்தாண்டுகள் கடந்த நிலையில்கூட இன்னமும் தீர்வு காணப்படவில்லை.

இவற்றில் முக்கிய சிக்கல்கள் Abyei, Blue Nile மற்றும் Nuba Mountains ஆகிய மூன்று பிரதேசங்கள் தொடர்பானவை. இம்மூன்று பிரதேசங்களும் தென் சூடான், வட சூடான் ஆள்புலத்திற்கு (territory) இடையில் அமைந்துள்ளன. எனவே இவற்றை நிர்வாக ரீதியாக தென்சூடானுடன் இணைப்பதா அல்லது வட சூடானுடன் இணைப்பதா என்ற இழுபறி தொடர்கின்றது என்பது முதலாவது சிக்கலாகும். Abyei பிரதேசமும் பெரும் எண்ணெய் வளத்தினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. Abyei பிரதேசத்திற்கும் தனியான இடைக்கால நிர்வாக ஒழுங்கு ஏற்படுத்துவதாகவும் பின்னர் மக்கள் மத்தியில் 'கருத்து வாக்கெடுப்பு' நடாத்தப்பட்டு தென் சூடானுடன் இணைவதா அல்லது வட சூடானுடன் இணைவதா என்ற முடிவு எட்டப்படுவதெனவும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கேற்ற செயல் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை.

தென் சூடானிலேயே எண்ணெய் வளம் அதிகமுண்டு. வடக்குக்கும் தெற்குக்கும் இடையே எண்ணெய்ப்பங்கீடு தொடர்பான பிணக்கு தீர்வு காணப்படாத நிலையே தொடர்கின்றது. சமாதான உடன்படிக்கையின் படி, எண்ணெய் வருமானம் ஐம்பதுக்கு ஐம்பது (50:50) என்ற விழுக்காடு அடிப்படையில் வடக்கிற்கும் தெற்கிற்குமிடையில் பங்கிடப்படுதல் வேண்டும். ஆனால் எண்ணெய் வருமானப் பங்கீடு தொடர்பிலும் சரியான நடைமுறை இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. எண்ணெய் வள வருமானம், அதனைக் கையாளுகின்ற கட்டமைப்பில் (எண்ணெய் அகழ்வு, உற்பத்தி, ஏற்றுமதி, வருமானக் கணக்கு வழக்கு உட்பட்ட விவகாரங்களில்) SPLM தரப்பு உள்ளடக்கப்படவில்லை. மாறாக Khartoum அரசாங்கம் தீர்மானித்து வழங்குவதைப் பெறுகின்ற நிலையே இன்னமும் நடைமுறையிலுள்ளது.

பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கு சூடான் அரசாங்கம் ஆதரவு வழங்கி வருகின்றது. உடன்படிக்கைக்கமைய ஆயுதங்கள் களையப்படவில்லை. இதனால் பலவழிகளிலும் உடன்படிக்கை பெருமளவில் மீறப்படுகின்றது. இணக்கப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு உருவாக்கப்பட்ட செயற்குழுக்கள் சரியான முறையில் இயங்கவில்லை.

ஜோன் கராங்கின் மரணம் - இன்று உறுதியான தலைமைத்துவமின்மை

இவற்றுக்கெல்லாம் மேலாக SPLM தலைவர் ஜோன் கராங்கின் அகால மரணம் சமாதான ஒப்பந்தத்தின் நகர்வை வெகுவாகப் பாதித்துள்ளது.

அதாவது உறுதியான தலைமைத் தினை இழந்த பின்னர் சமாதான உடன்படிக்கையை காத்திரமாக முன்னகர்த்துவதில் பெரும் சவால்க ளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள் ளது. கராங்கின் மரணத்தின் பின் சமாதானத்திற்கெதிரான சக்திகள் மேலும் தீவிரமடைந்துள்ளன.

### சூடான் விடுதலை அமைப்பு எதிர்நோக்கும் சவால்கள்

சூடான் விடுதலை அமைப்பு சிவில் நிர் வாகக் கட்டமைப்பைக் கொண்டிராத, நிர்வாக அனுபவமற்றிருக்கின்ற ஒரு சூழலில் சிவில் நிர்வாகத்தை இயக் குவதற்குரிய வளப் பற்றாக்குறை பெருமளவில் நிலவுகிறது. சிவில் சமூ கத்திற்குரிய சேவைகளை வழங்கு வதற்கும் நிர்வாகக் கட்டமைப்புகளை இயக்குவதற்கும் தேவையான ஆள ணிவளம், தொழில்வளம், ஆளுமைத் திறன் போன்றவற்றில் பெரும் பற் றாக்குறை நிலவுகின்றது. சிவில் சமூ கத்திற்குரிய உட்கட்டுமானங்கள் உரு வாக்கப்படவில்லை. 1956இல் இருந்து உள்நாட்டு யுத்தத்திற்கு முகம்கொடுத் துள்ள நாடு என்பதால் நாட்டின் பெரும்பகுதிகளில் எவ்வித பொருளா தார மேம்பாடுகளும் மேற்கொள்ளப் படவில்லை.

எனவே 'வெறுமையிலிருந்தே' சகல தும் புதிதாக (தேசத்தின் நிர்வாக உட்கட்டுமானம்) கட்டமைக்கப்பட வேண்டிய-உருவாக்கப்படவேண்டிய பெரும் சவால்கள் நிறைந்த சூழ லையே தென்-சூடான் எதிர்நோக்கு கின்றது. மீள் கட்டமைப்புக்கென அனைத்துலக சமூகத்தினால் உறுதிய ளிக்கப்பட்டதற்கமைய நிதி உதவிகள் சென்றடையாமையும் பொருளாதார ரீதியில் தடையாக அமைந்துள்ளது.

90 விழுக்காடு வரையான மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். 60 விழுக்காடு வரையான மக்கள் எழுத்தறிவற்ற நிலையிலும், பல மில் லியன் கணக்கான சிறார்கள் கல்வி கற்கும் வசதியற்ற நிலையிலுமே இன்றைய தென் சூடான் உள்ளது. சுய உற்பத்தி, தொழில் வாய்ப்பற்ற நிலை யில் பொருளாதாரம் படுபாதாளத்தில் உள்ளது. தென் சூடான் தனித்து இயங்கக்கூடிய நிலையை எட்டுவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

### பிரிந்து செல்வதில் மக்கள் ஆர்வம்

நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாக தென் சூடான் மக்கள் பெரியளவில் ஆர்வம் காட்டவில்லை என்று கூறப் படுகின்றது. மாறாக அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள கருத்து வாக்கெடுப் பில் மக்கள் அதிகம் நாட்டம் கொண் டிருக்கின்றனர். பிரிந்து சென்று தனி நாடு அமைப்பது தொடர்பான மக்க ளின் அரசியல் வேணவாவின் வெளிப் பாடாக இது நோக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டு ஜனவரியில் பிரிந்து செல்வது தொடர்பான தேர்தல் நடாத் தப்படவுள்ள நிலையில், ஏப்ரல் 11இல் நடைபெறவுள்ள தேர்தலை வெளித் திணிப்பாகவே (அனைத்துலக சமூகத் தின்) சூடான் விடுதலை அமைப்பு கருதுகின்றது. ஆனபோதும் ஜனநாயக விரோதப் போக்காளர்கள் என்ற பார்வை தம்மீது படிந்து விடக்கூடாது என்பதில் அவர்கள் பிரக்ஞை கொண் டிருக்கின்றனர்.



"பொங்கு தமிழ்" இணையத்திற்காக ரூபன் சிவராஜா

### அரச பயங்கரவாதத்திற்கெதிரான போராட்டம்

தென் சூடான் மக்களின் விடுதலைப் போராட்டம் என்பதும் அரைநூற் றாண்டு கால நீட்சியைக் கொண்டதா கும். 1956ஆம் ஆண்டு பிரித்தானியக் கொலனித்துவ ஆட்சியிலிருந்து சூடான் விடுபட்ட காலகட்டத்திலிருந்து, காட் டும் அதிகாரமையத்தின் அடக்கு முறைக்கு எதிராக தென் சூடான் போராடி வந்துள்ளது.

சூடான் மக்கள் விடுதலை அமைப்பு சூடான் அரச அடக்குமுறைகளுக்கும், இஸ்லாமிய அடிப்படைவாத சாரியா சட்டங்களுக்கும் எதிராக தென் சூடான் மக்களின் உரிமைக்காக போராட் டத்தை தொடங்கியது. ஆனால் ஒன்று பட்ட சமத்துவமான சூடானை உரு வாக்குவதே SPLM அமைப்பின் கொள் கையாக இருந்தது. அதாவது பிரிவினை அல்லது தனிநாடு என்பது SPLMஇன் முதன்மைக் கொள்கையாக இருக்க வில்லை.

அமெரிக்காவுடன் பிரித்தானியாவும் சூடான் சமாதான முயற்சியில் பங்கு வகிக்கின்றது. இதில் நோர்வேக்கும் அனுசரணையாளர் என்ற முக்கிய பங்குண்டு. நோர்வேயின் முந்நாள் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் கில்ட பிறாபியூர்ட் ஜோன்சன் அவர்கள் நோர்வே தரப்பிலிருந்து முக்கிய பிரதி நிதியாகக் கடமையாற்றினார். அவ ரைத் தொடர்ந்து அந்தப்பணியினை எரிக் சூல்கைம் கையேற்றிருந்தார்.

### அனைத்துலக சமூகத்தின் தலையீடு

அடிப்படையில் அமெரிக்கா சூடானை பயங்கரவாத அரசாகவே கணிக்கின் றது. 90களின் நடுப்பகுதியில் ஒசாமா பின்லேடனுக்கு சூடான் அரசாங்கம் அடைக்கலம் கொடுத்தது. தவிர வட உகண்டாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் டுசுயு தீவிரவாத அமைப் புக்கு சூடான் அரசாங்கம் வழங்கிய ஆதரவு என்பன அமெரிக்காவின் சூடான் எதிர்ப்பு நிலைக்குரிய காரணியாகும்.

2008 ஆம் ஆண்டு நடுப்பகுதியில், சூடானின் இன்றைய அரசுத்தலைவர் Omar Hassan Al-Bashir மீது அனைத்து லக குற்றவியல் நீதிமன்றத்தினால் (International Criminal Court) இன அழிப்பு மற்றும் போர்க்குற்றம் (Genocide and War Crimes) சுமத்தப்பட்டு, அவர் மீதான கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சூடானின் டார் பர் பிரதேச மக்கள் மீது சூடான் அரசி னால் நடாத்தப்பட்ட இன அழிப்பு போர் குற்றங்களுக்காகவே இக்கைது ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சூடானில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பான அனைத்துலக சமூகத்தின் அக்கறை பற்றியும் சூடான் மீது செல் வாக்கு செலுத்த காய்நகர்த்தும் வல்ல ரசுகளின் உள்நோக்கம் பற்றியும் புரிந்துகொள்வது அவசியமாகும். தென் சூடான் எண்ணெய் வளமிக்க நாடு. வட சூடான் அரசு எண்ணெய் வள அபிவிருத்திக்கான ஏக உரிமையினை சீனாவிற்கு வழங்கியுள்ளது. எண் ணெய் அபிவிருத்திக்கான ஏக உரிமை, வல்லரசாக வளர்ந்துள்ள சீனாவை மேலும் அமெரிக்காவிற்குச் சவாலாக வளர்த்துவிடுமென்ற அமெரிக்காவின் அச்சமே சூடான் சமாதான முயற்சியில் அமெரிக்கத் தலையீட்டுக்கான அதி முக்கிய காரணியாகும்.

சூடான் விடுதலை அமைப்பினைப் பயன்படுத்தி சூடான் அரசு மீது அழுத் தங்களைப் பிரயோகிப்பதும், தனது செல்வாக்கினை நிலைநாட்டுவதுமே அமெரிக்காவின் உள்நோக்கமென்பது எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதே.

வல்லரசுகளின் உள்நோக்கம் பொரு ளாதார நலனாக இருந்தாலும் தென் சூடான் மக்களின் சுயநிர்ணய உரிமை (self-determination) அங்கீகரிக்கப்பட் டுள்ளது. தமது அரசியல் தலைவி தியைத் தாமே தீர்மானிக்கின்ற தமது இறைமையையும் சுதந்திரத்தையும் நிறுவிக்கொள்கின்ற அவர்களது உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதே அதீத முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று நிகழ்வாகியுள்ளது ✹



# குண்டுகளால் தரை மட்டமாக்கப்பட்டு நாசமாகி கைவிடப்பட்டுள்ள நகரில்

## ஓரேயொரு புதிய கட்டிடம் மேற்கிளம்பியுள்ளது

விடுதலைப் புலிகளின் தலை நகராக இருந்த கிளிநொச்சிக்கு விஜயம் செய்தோர் ஒரு விடயத் தினை அவதானித்திருக்கக் கூடும். குண்டுகளால் தரை மட்டமாக்கப் பட்டு நாசமாகி கைவிடப்பட்டுள்ள அந்த நகரில் ஒரேயொரு புதிய கட்டிடம் மேற்கிளம்பியுள்ளது எவரு டைய கண்களுக்கும் தட்டுப்படாமல் போகாது. அது ஒரு வெள்ளையடிக் கப்பட்ட பௌத்த விகாரை.

நாங்கள் நினைக்கிறோம். இது எங்க ளுக்குரிய ஒன்றல்ல. ஏனெனில் அங்கு படையினரைத் தவிர வேறெவரு மில்லை. பொதுமக்கள் எல்லோரும் அங்கிருந்து வெளியேறி விட்டிருந் தார்கள் என்றார் அப்பகுதிக்கு விஜயம் செய்த ஒருவர்.

விடுதலைப்புலிகளால் சேதமாக்கப் பட்ட அவ்விகாரையை கடந்த வரு டம் விடுதலைப்புலிகள் தோற்கடிக் கப்பட்ட ஒரு மாதத்தின்பின் - பெரும் பான்மையான சிங்கள பௌத்தர்க ளால் கட்டமைக்கப்பட்ட - இராணு வம் மறுசீரமைத்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது ஒரு புராதனப் பிரதேசம் என்று இராணுவத்தின் தலைமைப் பேச்சாளர் மேஜர் ஜென ரல் பிரசாத் சமரசிங்க “ரைம்ஸ்” ஏட்டுக்குத் தெரிவித்தார்.


அவரின் இந்தக் கூற்றுடன் தமிழ் தொல் பொருளியலாளரும், வரலாற் றாய்வாளரும், அரசியலாளரும் உடன் பட மறுக்கின்றனர். பல நூற்றாண்டு களுக்கு மேலாகவே அப்பிரதேசத் தில் சிறுபான்மை இனத்தினராகிய தமிழர்களே வாழ்ந்து வருகின்றனர் என அவர்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறு அங்கு எதுவுமே எப்போ தும் இருந்ததில்லை என்கிறார் ஓய்வு பெற்ற தமிழ் வரலாறு மற்றும் இலக் கியப் பேராசிரியரான கார்த்திகேசு சிவத்தம்பி.

சுதந்திரமான ஆய்வு ஒன்றில்லாமல் அப்பிரதேசத்தில் பூர்வகுடிகள் யார் என்பதைக் கண்டறிய முடியாது. ஆனால் இராணுவத்தினர் அப்பிரே-தசத்திற்குச் செல்வதை கட்டுப்படுத் தும் போது அது இப்போதைக்குச் சாத்தியமில்லை. பௌத்த பிரதே சங்களை மீள் கண்டுபிடிப்புச் செய் வது என்ற பெயரில் ஆயிரக்கணக் கான சிங்கள் மக்களைக் குடியேற்றி இப்பிரதேசத்தில் இன ரீதியான தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத் தைக் குழிதோண்டிப் புதைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியே இது என பல தமிழ் சமூகத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகள் நாட்டின் சிங்கள மக்களின் தலைவருமான மகிந்த ராஜபக்ச தலைமையில் ஆட்சியிலிருக்கும் கூட்டரசாங்கத்தை பலப்படுத்தும். இது வியாழக்கிழமை நடைபெறும் தேர்தலில் அவருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற வாய்ப்பேற்படுத்திக் கொடுக் கும். அரசாங்கம் பௌத்தவிகாரைக ளையும் படையினருக்காக நிரந்தர கட்டிடங்களையும் உருவாக்கி வரு கின்றது என தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித் தார். அவர்கள் இப்பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்து இப்பிரதேசம் சிங்கள மக்களுக்குச் சொந்தமானது எனக் காட்ட முனை கின்றனர் எனவும் அவர் குறிப்பிட் டார்.

போரின் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள மூன்று இலட்சம் மக்களும் குடியேற்றப்படுவதற்கு முன்பாகவே, வடக்கில் 40 ஆயிரம் படையினருக் கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வீடமைக்கும் திட்டத்தை அரசாங்கம் தொடங்கியிருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார். இது களத்தில் இருக் கும் படையினருக்காகவே அன்றி அவர்களது குடும்பத்தினருக்காக அல்லவென்று மறுத்த படையினர், முன்னைய இராணுவ முகாம்க ளையே தாம் குடியிருப்பு முகாம்க ளாக மாற்றி வருவதாகவும் தெரிவித் துள்ளனர்.

நாங்கள் மக்களைப் பாதுகாக்கவே முயற்சிக்கிறோம். அத்தோடு புலிகள் மீளெழும்பி வராதிருப்பதையும் உறுதி செய்ய விரும்புகிறோம் என்று ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித் துள்ளார். 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஸாரின் ஆட்சிக்காலத்தில் சர்ச்சைகளுடன் உருவான தொல் பொருளியலாய்வு ஒரு இலட்சம் மக்கள் கொல்லப்பட்ட கடந்த 26 வருட உள்நாட்டு யுத்தத்துடன் சேர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது. உள்நாட்டு யுத்தத்துடன் சேர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது. 1815 இல் பிரிட்டிஸ் நாட்டை முழுமையாகக் கையகப்படுத்திய போது அதனது புராதன வரலாறு குறித்த தெளிவி ருக்கவில்லை. ஆனால் விரைவி-லேயே கிறிஸ்துவுக்குப் பின் 500 அளவில் பௌத்த பிக்கு ஒருவரால் எழுதப்பட்ட புராணக்கட்டுக்கதை யான மகாவம்சத்தை அது தழுவிக் கொண்டது.



> “ தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று இலட்சம் மக்களும் குடியேற்றப்படுவதற்கு முன்பாகவே, வடக்கில் 40 ஆயிரம் படையினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வீடமைக்கும் திட்டத்தை அரசாங்கம் தொடங்கியிருக்கிறது ”

இது வடஇந்தியாவிலிருந்து கி.மு 500 அளவில் ஆரிய இளவரசனான விஜயன் வந்திறங்கியதைக் குறிப் பிடுகிறது. அதற்குப் பின்னர் 200 வருடங்கள் வரையிலும் கூட தமிழர் கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தி ருக்கவில்லை என்றும் அது கூறு கிறது. இந்த மகாவம்சம் இன்னமும் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகிறது. இந்த மகாவம்சம் தான் சிங்கள சோவனிசத்திற்கு ஆதாரமாகவுமுள் ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி களில் கி.மு 500க்கு முன்னராகவே மக்கள் வாழ்ந்திருந்ததாகவும் அவை தென்னிந்தியாவிகன் பல அகழ்வா ராய்வுடன் ஒப்பிடக்கூடியதாகவுள்ள தாகவும் அதன்படி மிக முந்திய காலத்திலேயே குடியேற்றங்கள் இடம் பெற்றிருக்கலாம் எனவும் கருதவும் இடமுண்டு.

மோதல் ஆரம்பித்த பிற்பாடு அகழ் வாய்வுகள் பலவந்தமாக நிறுத்தப் பட்டன. பல தமிழ் தொல்பொருளாய் வாளர்கள் நாட்டை விட்டு வெளி-யேறினர். போர் முடிவடைந்ததும் தொலிபொருளாய்வு மீள ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இது நாட்டின் புரா தன வரலாறு குறித்த விவாதத்தை மீண்டும் தொடக்கி விட்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களாக வடக் கில் எங்களால் எதுவும் செய்யமுடி யாமலிருந்தது என்றார் அரசாங்க தொல்பொருள் திணைக்களத் தலை வரான செனரத் திஸநாயக்கா. எங்களது மூதாதையர் இங்கு எப்படி வாழ்ந்தார்கள். அவர்களுடைய கலாசாரம் எப்படி இருந்தது.

*பொருளாதாரம் சமூகக் கட்டமைப்பு எவ்வாறு இருந்தது. வாழ்நிலைமை யும் மதமும் எவ்வாறு இருந்தன என்பதை நாம் கண்டறியலாம் என்றார் அவர்.*

*தனது திணைக்களம் கடந்த வருடம் 60 பழமையான களங்களைக் கண்டறிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவற்றுள் ஆறு இதுவரை கண்டறியப்படாதிருந்தவை. கி.மு 300இலிருந்து கி.பி ஆயிரம் வரைக்குமானவை என்றும் அவர் தெரிவித்தார்.*

*இப்புதிய அகழ்வாய்வக்களங்கள் ஏன் சிங்கள பௌத்த கலாசாரம் செழிப்படைந்ததற்குப் பின்னரான காலத்தைக் கொண்டவையாக இருக்கின்றன என தமிழ். கல்வியியலாளர் சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.*

*இன்னும் சிலரோ தமிழ் தொல்பொருளியலாளர் இதனுள் உள்ளடக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர். அதேவேளை வெளிநாட்டு நிபுணர்கள் அல்லது ஐநாவைச் சேர்ந்தவர்கள் இது புறநிலையாக மேற்கொள்ளப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றனர். தொல்பொருள் திணைக்களம் அரசாங்கத்தின் கையாளாகவே செயற்படுகிறது என்கிறார் தமிழின்*

## TIMES
## "ரைம்ஸ்" கட்டுரை

*முன்னணி அறிஞர் ஒருவர். அவர் தான் பழிவாங்கப்படலாம் என்பதால் தனது அடையாளத்தை தெரிவிக்க விரும்பவில்லை.*

*இவை சிங்கள தொல்பொருளாய்வுக்களமாகவே இனங்காணப்படும். பௌத்த விகாரைகள் உருவாக்கப்படும். பின்னர் சிங்கள மக்கள் இங்கு வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் இழந்த நிலமாகவே இது அடையாளம் காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். போர் முடிவடைந்த பிறகு உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணிகள் வந்து வடக்கிற்கு விஜயம் செய்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்களவர்களே என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*இதேவேளை இனரீதியாகவோ மத ரீதியாகவோ தொல்பொருள் ஆய்வுக்களங்கள் அடையாளம் காணப்படுவதில்லை அரசாங்க தொல்பொருளாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அவர் ஒரு சிறந்த அரசியல்வாதி. அவருக்குத் தெரியும் எல்லா சமூகத்தினரையும் இணைத்துச் செல்வதற்கு எனச் சொல்கிறார் தொல்பொருளாய்வுக்கு நிதி வழங்கும் கலாசார மத்திய நிலையத்தின்பணிப்பாளர் சுதர்சன் செனிவிரத்ன. தொல்பொருளாய்வு அரசியல் நோக்கிற்குப் பயன்படுத்தப்படுவதையும் செனிவிரத்ன ஏற்றுக் கொண்டார். மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அவரில் பெரும் செல்வாக்குச் செலுத்தும் ஜாதிக ஹெல உருமய இதில் முன்னணி வகிக்கிறது.*

*இம்மாத ஆரம்பத்தில் செனகலைச் சேர்ந்த அமெரிக்க பொப் பாடகரான அகோனுக்கு விஸா வழங்க மறுத்திருந்தது இதைப் புரிய உதவும். பௌத்த சுருவத்திற்கு முன்னால் நீச்சலடையில் பெண்கள் ஆடுவதாக அவருடைய செக்ஸ்ஸி பிச என்ற அல்பத்தில் ஒரு காட்சி வருகிறது. இதனால் இந்நிகழ்ச்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இவர்கள் அர்ப்பாட்டம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர்.*

*இலங்கையின் அரசமைப்பு பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும், அதனை ஆதரிக்க வேண்டும் எனவும் கூறுகிறது என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். இதே வாதத்தை ஜாதிக ஹெல உருமய மகிந்த ராஜபக்சவிடம் தமது 29அம்சக் கோரிக்கையை முன்வைத்தபோது வலியுறுத்தியிருந்தது. அதில் ஒன்று வடக்கில் இருந்த பௌத்த தலங்களை புனருத்தாரணம் செய்யவேண்டும் என்பது.*

*ஜனாதிபதி உடனடியாகவே அதனை ஏற்றுக் கொண்டார் என்கிறார் ஜாதிக ஹெலஉருமயவின் சிரேஸ்ட உறுப்பினரான உதய கம்மன்பில. இராணுவமும் தொல்பொருள் திணைக்களமும் ஏற்கெனவே பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஜாதிக ஹெல உருமய நேரடியாகவே தொல்பொருளாய்வில் செல்வாக்குச் செலுத்தும் வாய்ப்பிருக்கிறது. ஏனெனில் ஜாதிக ஹெல உருமயவின் கோட்பாட்டாளரும், சூழலியல் அமைச்சருமான சம்பிக ரணவக்கவின் அனுமதி தொல்பொருள் அகழ்வாராய்வை மேற்கொள்ள அவசியமானது என்பது குறிப்பிடத்தக்கது.*

*தொல்பொருளாய்வு என்பது இலங்கையில் எப்போதும் அரசியல் சார்ந்தது என்கிறார் வெளிநாட்டில் வதியும் தமிழ் வரலாற்றாய்வாளர் ஒருவர். இவரும் கூட அச்சம் காரணமாகத் தன்பெயரைத் தெரிவிக்க மறுத்து விட்டார். இன்றும் கூட அது மாறவில்லை.* ✸

“ பௌத்த சுருவத்திற்கு முன்னால் நீச்சலுடையில் பெண்கள் ஆடுவதாக அவருடைய “செக்ஸி பிச” என்ற அல்பத்தில் ஒரு காட்சி வருகிறது. இதனால் இந்நிகழ்ச்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இவர்கள் அர்ப்பாட்டம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர். ”

# முற்றுப் பெறாதவையாய்

-நடராஜா முரளிதரன்-

எழுந்து நடக்கும் என்னிருப்பைத்
தக்க வைத்தது என் மொழி என்பாய்
அந்த மொழியின் கழுத்தைத் திருகி
மூச்சுக்குழல் வாய் இறங்கி
அகத்தைப் புறத்தே
உருக்கி வார்ப்பதற்காய்
எழுதுவேன் ஒரு கவிதை

தொன்மங்களின் சுகானுபவம்
வாதைகளாய் மாற்றம் பெறும்
நவீனத்துவ முகம்
உன்னுடையதென்பாய்

மரபுகள் வழியாக
உன் முன்னோர்
வஞ்சிக்கப்பட்டதாய்
சரிதங்கள் விரிக்கின்றாய்

பழமையைக் கொழுத்தும்
நெருப்பின் நதிமூலத்தைத்
தேடியலைவதாக
சீற்றம் கொள்கிறாய்

பாறையின் ஆழத்திலிருந்து
மயிர்துளைக்குழாய்
வழியே எழுகின்றது
ஒரு துளி நீர்
வெப்பக் காட்டின் உக்கிரம்
அதைத் துடைத்தழிக்கின்றது

அழித்தலிலும் முற்றுப்
பெறாதவையாய்
அவை இயக்கமாய் இயங்குதலாய்
இன்னோர் வடிவம் நோக்கி

எனவேதான் இரத்தம் சிந்தாத
போர்களங்களை நோக்கி
என் மனம் அவாவுகின்றது
ஆனாலும் மனிதர்கள்
இரத்தம் சிந்தும்
போர்களங்களையே விரும்புகிறார்கள்

# நிச்சயமற்ற நிலையில் விடுதலையாகும் போராளிகளின் எதிர்காலம்!

## theguardian வெளிப்படுத்தும் உண்மைகள்!!

வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களின் விடுதலையை எதிர்பார்த்து அவர்களது பெற்றோர்களும், குடும்பத்தினரும் நெடும் நேரம் காத்து நிற்பதாக பிரித்தானியாவின் முன்னணி ஊடகங்களில் ஒன்றான Guardian தெரிவித்துள்ளது.

இன்று விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் பலரது எதிர்காலம் நிச்சயமில்லாத ஒரு நிலையிலேயே இருக்கின்றது. இவர்கள் அனைவரும் தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கதைக்கின்றார்கள் என இவ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அவ்வூடகத்தின் ஊடகவியலாளர் Jason Bruke வவுனியாவில் இருந்து எழுதியுள்ள செய்திக் குறிப்பில் இத்தடுப்பு முகாம் குறித்த சூழல்கள் மற்றும் தங்கள் உறவுகளின் விடுதலையை எதிர்நோக்கி காத்திருப்பவர்களின் கருத்துக்கள் என்பவற்றை பதிவு செய்துள்ளார். இச்செய்திக் குறிப்பில் அவர் தெரிவித்த கருத்துக்களை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

வவுனியா தொழில் நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் பெயர்கள் அதிகாலையிலிருந்து ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இவ்வாறு பெயர்கள் அறிவிக்கப்பட்டவர்கள் வியர்வை வழிந்தோட தமது விடுதலையை எதிர்நோக்கி காத்திருந்தார்கள். மறுபுறத்தில், தங்கள் உறவுகளின் விடுதலையை எதிர்நோக்கி அவர்களது தாய்மார், சகோதர - சகோதரிகள் மற்றும் குழந்தைகள் இம் முகாமுக்கு வெளியே காத்திருந்தார்கள்.

இவ்வாறாக பெயர்கள் அறிவிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வைத்தியப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் இடத்திற்குச் செல்கின்றனர். பின்னர் தமது விடுதலை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடத்திற்குள் செல்கின்றனர். இறுதியாக முகாம் வாசலில் காத்து நிற்கின்ற தங்களுடைய உறவுகளுடன் அவர்கள் இணைந்து கொள்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு தனியான தாயகம் அமைப்பதற்காக 26 வருடங்களாக நடைபெற்று வந்த போரில் நேரடியாக ஈடுபட்டவர்கள் இன்று வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிந்த 700 விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளும், மற்றொரு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 400 விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளும் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

சிறிலங்காப் படையினருடனான போரில் உடல் உறுப்புக்களை இழந்திருந்த இவர்கள் அனைவரும் தமக்கு அச்சுறுத்தலாக இருக்கமாட்டார்கள் என்ற அடிப்படையில் கடுமையான விசாரணைகளின் பின்னர் சிறிலங்கா அரசால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் பலர் செம்பாட்டு மண்ணின் புழுதியின் ஊடாக செயற்கைக் கால்களுடனும், ஊன்று கோல்களுடனும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.இவர்களுக்கு ஆங்கில மொழி, தச்சுத்தொழில், இயந்திரங்களைத் திருத்துதல், மற்றும் அடிப்படைக் கணினி அறிவு ஆகியன பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தங்களது வாழ்க்கையை தாமாகவே கொண்டு நடாத்துவதற்கு ஏற்ற திறமையைப் பெற்றிருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை விட, தமிழீழ, விடுதலைப் புலிகளுடன் எவ்வித தொடர்பும் இல்லாத 75,000 வரையிலான தமிழ் மக்கள் வவுனியா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நலன் புரி முகாம்களில் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் தற்காலிகப் பயண அனுமதியுடன் வெளியில் சென்று வர அனுமதிக்கப்படுகின்றார்கள். நீண்ட இப்போரினால் பிளவுபட்டுக் காணப்படும் இச்சமூகத்தினை மீளவும் ஒற்றுமைப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் அபிவிருத்தி என்ற ஆயுதத்தினைக் கையில் எடுத்துள்ளது.

வவுனியாவில் கடந்த கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இப்பகுதியில் மேற்கொள்ள எண்ணியுள்ள அவிருத்தித் திட்டங்கள் குறித்து தெரிவித்துள்ளார்.இன்று விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் பலரது எதிர்காலம் நிச்சயமில்லாத ஒரு நிலையிலேயே இருக்கின்றது. இவர்கள் அனைவரும் தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கதைக்கின்றார்கள்.

எறிகணை வெடித்துக் காயமடைந்த தனது தாயாரை மருத்துவமனையில் சேர்த்த பின் தான் சிறிலங்காப் படையினரிடம் சரணடைந்ததாக விடுதலைப் புலிகளின் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்ட 28 வயதான சுபாஸ்கரன் சூரியகுமார் தெரிவிக்கின்றார். சிறிலங்காப் படையினர் முன் நோக்கி நகர்ந்து கொண்டிருந்த இடத்திலிருந்து தாம் வெளியேறிக் கொண்டிருந்த போது இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் தனது தந்தையும், இரண்டு சகோதரிகளும் கொல்லப்பட்டதாக அவர் கூறினார்.

இருதரப்புக்கும் இடையில் இடம்பெற்ற போரின் போது தங்களுடைய வீடு முற்றாக அழிந்துவிட்டதாகவும், தற்போது கண்ணிவெடிகளும், வெடிக்காத எறிகணைகளுமே அவ்விடத்தைச் சுற்றி இருப்பதாகவும் இவர் குறிப்பிட்டார். இவர் வவுனியாவில் அமைக்கப்பட்ட இன்னொரு முகாமில் வசித்து வரும் குடும்பத்தின் எஞ்சிய நால்வருடனும் இணைந்து கொள்வதற்காக 10 மாதத் தடுப்புக் காவலின் பின் செல்கின்றார்.

மெனிக் முகாமில் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து காணப்படுகின்றது. தமது சொந்தவிடம் பாதுகாப்பானது என அரசாங்கத்தினால் அறிவிக்கப்படும் வரை தனது குடும்பத்தினால் ஊருக்குத் திரும்ப முடியாது எனவும், தாங்கள் எப்போது ஊருக்குப் போவோம் என்பது எவருக்கும் தெரியாது எனவும் சூரியகுமார் தெரிவிக்கின்றார். இவ்வாறு விடுதலை செய்யப்படும் முன்னாள் போராளிகள் பலர் நேரடியாக மெனிக் முகாமுக்கே செல்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களைக் கொண்டு சென்ற போது காலொன்றை இழந்த தன்னுடைய மருமகன் விடுதலை செய்யப்படும் பொழுதுக்காக 44 வயதான மகேந்திரன் நாகேஸ்வரி என்ற பெண்மணி அதிகாலை முதல் இம்முகாமுக்கு வெளியே காத்திருந்தார். மாலை நான்கு மணிக்கு இவரது மருமகன் விடுதலை செய்யப்பட்டு வெளியே வந்தார்.
மெனிக் முகாமின் சிறிய கூடாரத்திற்குள் பத்துப் பேர் வசிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்ற போதிலும், தனது மருமகன் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் 'எல்லோரும் சந்தோசமாக ஒன்றாக இருப்போம்' என நாகேஸ்வரி தெரிவித்தார். குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து நெடு நாட்களாகி விட்டதாகவும் அவர் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்ட 24 வயதான கணேஸ் தனுசன் என்பவர் போர் முடிவடைவதற்கு ஓரிரு மாதங்களின் முன் கையில் பலத்த காயமடைந்தார்.

தனது உறவினர்களைக் கண்டுபிடிப்பதே தனது முதலாவது வேலை எனவும், தான் விடுதலைப் புலிகளின் கட்டாய இராணுவப் பயிற்சிக்கு உட்பட்டதாகவும், கல்வியைத் தொடர்வதே தனது இரண்டாவது வேலை எனவும் இவர் தெரிவித்தார்.தனது உறவுகள் எங்கு இருக்கின்றார்கள் எனத் தனக்குத் தெரியாது எனக் குறிப்பிடும் இவர், இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது கடினமான பணியாக இருந்தாலும் தான் ஒருமுறை முயற்சித்துப் பார்க்கப் போவதாகவும் அவர் கூறினார். இத்தடுப்பு முகாமில் பத்து மாதங்களாக இருந்ததைத் தாங்கிக் கொள்ள முடிந்ததாக குறிப்பிடும் இவர், தனது குடும்பத்திலிருந்து பிரிந்திருக்க நேர்ந்தது தான் கடுமையானது எனத் தெரிவித்தார். அதேவேளை, மாலையாகியதும் தமது உறவினர்கள் இன்னும் விடுதலை செய்யப்படாததைக் கண்டு இம்முகாமின் வாசலில் வரிசையாகக் காத்து நிற்கின்ற மக்கள் கவலையுடன் இருக்கின்றார்கள்.

ஏழு பிள்ளைகளின் தாயான குமரகுரு செனிஸ்டா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செயற்பட்ட தனது கணவர் விடுதலை செய்யப்படும் வரை தனது இளம் குழந்தையுடன் காத்திருக்கின்றார். இவரது கணவர் கடந்த பத்து மாதங்களாக இம்முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இருளாவதற்கு முன் தனது கணவர் விடுதலை செய்யப்பட்டால், இதுவரை தனது இக்குழந்தையைக் காணாத அவர் தன் குழந்தையை வெளிச்சத்தில் பார்க்கக் கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தாக இச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ✸

> “ வவுனியா தொழில் நுட்பக்கல்லூரி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிந்த 700 விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளும், மற்றொரு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 400 விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளும் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். ”


MORTGAGES
We are your solution finders...
3.64%
5 Year Fixed Rate
1.85%
5 Year Variable Closed
அனைவருக்கும் எமது
புதுவருட வாழ்த்துக்கள்
416-283-2377 Ext 116
SUGANTHAN THAVARAJASINGAM
Mortgage Agent #M08010501 / Business Development Manager
கடன் அனைத்துக்கும் ஒரு சுமுகமான தீர்வு காண...
கிறடிற் ஸ்கோர் குறைவானாலும் மோட்கேச் எடுக்கும் வசதி...
90% வரை இரண்டாம் அடமானம் பெற்றுத் தருகிறோம்
35 GRAND MARSHALL DRIVE, SCARBOROUGH ON M1B 5W9
OBSIDIAN

# இலங்கை 'மகிந்த மயம்" என்று BBC கூறுகிறது

நாமல் ராஜபக்ஷவுக்கு சிறு வயதிலேயே செல்வாக்கு அதிகமாகி வருகிறது. இலங்கையில் ராஜபக்ஷ குடும்பத்தாரின் குடும்ப அரசியலும், வாரிசு அரசியலும் மேலோங்கி வருவதாகத் தெரிகிறது. இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டணி பெரும் வெற்றி பெற்றுள்ளது.

அரசியல் குடும்பங்களின் ஆதிக்கம் இலங்கை அரசியலில் புதிய விடயம் இல்லை என்றாலும், தற்போதைய இலங்கையில் எங்கு திரும்பினாலும் ராஜபக்ஷ குடும்பம் தான் என்கிற ஒரு நிலை காணப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பெறப்பட்ட யுத்த வெற்றி சிங்களப் பெரும்பான்மை சமூகத்தினரிடையே ராஜபக்ஷ குடும்பத்தின் செல்வாக்கை உயர்த்திப் பிடிப்பதாக அமைந்திருந்தது.

**“ஜனாதிபதியின் மனைவி, சகோதரர்கள், மகன்கள், அத்தைகள் என்று எல்லோரும் அவர்களாகவே ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்ற பின்னர் ஜெனரல் சரத் பொன்சேகாவை தடுத்து வைத்தது கூட அந்தச் செல்வாக்கில் பெரிதாகப் பாதிப்பு எதையும் ஏற்படுத்தியிருக்கவில்லை என்றுதான் தெரிகிறது.



ஜனாதிபதியின் மூத்த மகன், ஜனாதிபதியின் சகோதரர்கள் இருவர், ஜனாதிபதியின் சகோதரி ஆகியோரும் இத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷவுக்கு 23 வயதுதான் ஆகிறது என்றாலும், பெரிய அரசியல் பொறுப்புகளுக்காக அவர் தயார் செய்யப்படுகிறார் போலத் தெரிகிறது.

தன் மகனைக் காட்டி 'இவர்தான் எதிர்காலம்' என்று கூறுவது போல கட்டவுட்டாக நிற்கிறார் ஜனாதிபதி மஹிந்த. கடந்த அரசாங்கத்திலேயே கூட ஜனாதிபதியின் நெருங்கிய உறவினர்கள் அதி முக்கிய அரசுப் பதவிகளில் வீற்றிருந்தனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் சென்ற வருடம் கிடைத்த வெற்றியின் விளைவாக ராஜபக்ஷ குடும்பத்தார், அதிலும் குறிப்பாக ஜனாதிபதியும் அவரது சகோதரரான பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும், இலங்கையில் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளனர்.

> “நீங்கள் மக்களோடு இருக்கிறீர்கள், மக்களுக்காக உழைக்கிறீர்கள், நாட்டை நேசிக்கிறீர்கள் என்கிற வரைதான் உங்களால் வெற்றி பெறமுடியும்.”



தென்னிலங்கையில் எங்கு திரும்பினாலும் ராஜபக்ஷ குடும்பத்தாரின் போஸ்டர்களைத்தான் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. 'ஜனாதிபதியின் மனைவி, சகோதரர்கள், மகன்கள், அத்தைகள் என்று எல்லோரும் அவர்களாகவே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். வேறு யாரும் அரசியலில் முன்னுக்கு வருவதற்கு அவர்கள் இடம் தருவதே இல்லை." என்று எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவரான திலிப் வெதஆராச்சி கூறினார்.

தெற்காசியாவில் வழமையாகக் காணப்படும் வாரிசு அரசியல் செய்யும் குடும்பங்களில் ஒன்றுதான் தனது குடும்பமும், அதன் ஒரு பகுதிதான் தானும் என்று கூறப்படுவதை நாமல் ராஜபக்ஷ மறுக்கிறார். யார் நீங்கள் என்பது முக்கியமல்ல. நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதுதான் முக்கியம்.

'இது இருபத்தோராம் நூற்றாண்டு. இப்போதுள்ள மக்கள் கல்வியறிவு பெற்றவர்கள். இனிமேலெல்லாம் குடும்ப அரசியல் செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் மக்களோடு இருக்கிறீர்கள், மக்களுக்காக உழைக்கிறீர்கள், நாட்டை நேசிக்கிறீர்கள் என்கிற வரைதான் உங்களால் வெற்றி பெற முடியும்." என்றும் அவர் கூறுகிறார். அரசியலில் நெடுங்காலம் பயணிக்க ஆயத்தமாகிறார் நாமல் ராஜபக்ஷ என்றே தெரிகிறது.

# நக்ஸல் தாக்குதல் 75 பொலிசார் பலி

இந்தியாவின் மத்திய மாநிலமன சத்தீஸ்கரில் மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில், எழுபதுக்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படையினர் மீது மாவோயிஸ்டுகள் நடத்தியுள்ள மிகப் பெரிய இந்தத் தாக்குதல் தன்தேவாடா மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது.

மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் சென்ற வாகனத்தின் மீது நூற்றுக்கணக்கான மாவோயிஸ்டுகள் சேர்ந்து திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். முக்ரானா என்ற அடர்ந்த வனப் பகுதியில், மாவோயிஸ்டுகள் மீது தாக்குதல் நடத்தச் செல்லும் பாதுகாப்புப் படையினருக்காக அங்கு வழியை ஏற்படுத்திவிட்டு, 120பேர் கொண்ட போலீஸ் படையினர் திரும்பிக் கொண்டிருந்தபோதே அவர்கள் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படுகிறது.

உயரமான மலைப்பகுதியில் மறைந்திருந்த மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் சென்ற வாகனங்கள் நிலைகுலைந்தன. அதைத் தொடர்ந்து நிலக்கண்ணிவெடித் தாக்குதலும் நடத்தப்பட்டது. குண்டு துளைக்காத அந்த வாகனங்கள் கடுமையாகச் சேதடைந்த நிலையில், அதே இடத்தில் பல வீரர்கள் உயிரிழந்தனர்.

அவர்களை மீட்பதற்காக அனுப்பப்பட்ட மேலும் இரு குழுக்கள் மீதும் மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். மத்திய ரிசர்வ் போலீஸ் படையைச் சேர்ந்த கமாண்டன்ட் உள்பட 74 பேரும், மாநில காவல்துறையின் தலைமைக் காவலர் ஒருவரும் கொல்லப்பட்டதாக மத்திய உள்துறைச் செயலர் ஜி.கே. பிள்ளை தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்ட ஹெலிகாப்டரும் மாவோயிஸ்டுகளின் தாக்குதலுக்கு உள்ளானதாக அவர் தெரிவித்தார்.

காயமடைந்த 7 வீரர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்தச் சம்பவம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதல் குறித்து பிரதமரிடம் விளக்கமளித்த மத்திய உள்துறைச் செயலர் ஜி.கே. பிள்ளை, பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது, மாவோஸிஸ்டுகள் வைத்த அழுத்த வெடியில்தான் அதிக இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். மாவோயிஸ்டுகளுக்கு எதிரான நடவடிக்கையில் தவறு நடந்திருக்கிறது என்றும், அது தொடர்பான முழுவிவரங்கள் அதிகாரிகளிடமிருந்து வந்த பிறகு தெரிவிக்கப்படும் என்றும் உள்துறைச் செயலர் தெரிவித்தார்.

'பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கை' ஆனால், பாதுகாப்புப் படையினருக்கு எதிரான இந்தத் தாக்குதல் 'பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கை' என்று மாவோயிஸ்டுகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, பிபிசியிடம் பேசிய ஜார்க்கண்ட் மற்றும் வடக்கு சத்தீஸ்கர் பிரிவுகளுக்கான மாவோயிஸ்டுகளின் சார்பில் பேசவல்ல கோபால் கூறும்போது, "எங்களுடைய தோழர்கள் இருவரை சமீபத்தில் மகாராஷ்டிர போலீசார் பிடித்துச் சென்றனர்.



பின்னர் அவர்களை ஆந்திர மாநிலத்தில் வைத்து கொன்றுவிட்டார்கள். அதற்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கை இது. தவிர கிரீன் ஹன்ட் என்ற பெயரில் மாவோயிஸ்டுகளுககு எதிராக மத்திய, மாநில அரசுகள் துவக்கியிருக்கும் நடவடிக்கைக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம்." என்று தெரிவித்துள்ளார்.